... குழுக்களும் இளையோர் கூடங்களும் 534
வயது அடிப்படைக் குழுக்கள் - கரிமோஜாங் வயதுக் குழுக்கள் - நந்தி வயதுக் குழுக்கள் - நயாகுசா வயது அடிப்படைச் சிற்றூர் - ஏற்புச் சடங்கு - இரகசியச் சங்கங்கள் - இளையோர் கூடங்கள் - லிப்பூட்ஸ்.
12. அரசியல் முறையும் சமூக ஒழுங்கும் 550
அரசியல் முறையின் வகைகள் - குலக்குழு அமைப்பில் அரசியல் முறை - பழங்குடி அமைப்பில் அரசியல் முறை - தலைமையுரிமை - அரசுமுறை - அரசின் தோற்றம் குறித்த கொள்கைகள் - சட்டமும் தண்டனையும்.
13. பண்பாட்டு மாற்றம் 570
பண்பாட்டு மாற்றத்தின் முறைகள் - கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தல்களும் - பரவல் - பண்பாட்டுப் பேறு - பண்பாட்டுத் தேக்கம் - பண்பாட்டு அதிர்ச்சி - நவீனமயமாதல் - தொழில்மயமாதலும் நகரமயமாதலும் - உயர்குடியாக்கம் - உறவின் முறையாக்கம் - இந்துமயமாதலும் பிற சமயம் தழுவலும் - பழங்குடி நிலையிலிருந்து விலகுதல் - பழங்குடி - சாதித் தொடர்பும் - பழங்குடியினர் சாதி இந்துக்களாக மாறுதல் - தமிழகப் பழங்குடியின் பண்பாட்டு மாற்றம் - பெருமரபு, சிறுமரபு.
கலைச்சொல்லடைவு 607
நூலடைவு 612
பொருளடைவு 621

1

# மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும்

**மா**னிடவியல் ஒரு முறையான அறிவியல் என்ற நிலையில் ஓர் இளம் துறையாகும். கல்விசார் நிலையில் இத்துறை தோன்றி ஏறக்குறைய 119 ஆண்டுகள்தாம் ஆகின்றன. அதாவது சர் எட்வர்ட் பர்னட் டைலர் கி.பி. 1884 - ஆம் ஆண்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் மானிடவியல் துறைக்குப் பொறுப்பேற்ற ஆண்டுதான் இத்துறை முறைப்படியான தோற்றத்தைப் பெற்றது. இப்பல்கலைக் கழகத்தில் டைலர் பெற்ற நியமனமே கல்விசார் நிலையில் மானிடவியலார் பெற்ற முதல் பதவியாகும். இதன் பின்னரே உலகெங்கும் மானிடவியல் துறை வேரூன்றத் தொடங்கியது. இருப்பினும் மானிடவியல் துறையானது பல்வேறு துறை அறிஞர்களின் அறிவு வேட்கையினாலும் உழைப்பினாலும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோற்றம் பெற்றுவிட்டது. அவ்வாறு கூறுவதே அவ்வறிஞர்களின் உழைப்புக்கு நாம் செலுத்தும் மிகப்பெரும் நன்றியாகும்.

தொடக்கக் காலத்திலிருந்தே ஐரோப்பியர்கள் உலகின் எந்தெந்தப் பகுதிகளுக்குச் சென்று வாழ்ந்தனரோ அங்கெல்லாம் சமகாலத்திய மேற்கத்தியத் தத்துவ மரபுகளின் எச்சங்கள் பரவியிருந்தன. இத்தத்துவ மரபுகளின் அடிப்படையில் பல சமுதாய அறிவியல்கள் தோன்றின. மானிடவியலும் பல மேற்கத்தியத் தத்துவக் கூறுகளின் தொகுப்பாகக் காலத்தினூடே வளர்ந்து வந்துள்ளது. தொடக்கக்காலத் தத்துவவியலார் மனிதனையும், அவனது சமுதாய அமைப்புக்களையும், பண்பாட்டுக் கோலங்களையும் கண்ணுற்று அவற்றை உய்த்துணரும் போக்கில் பலவாறு சிந்தனை செய்தனர். அச்சிந்தனைகளின் வெளிப்பாடே இன்றைய சமுதாய அறிவியல்களின் வளர்ச்சியாகும்.

மானிடவியலின் இன்றைய நிலையை அறிய அது எந்தெந்த ஆதாரங்களைக் கொண்டு வளர்ந்தது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். இதற்குப் பல்வேறு கால மக்களின் மரபுகள், வாழ்க்கை முறைகள், நம்பிக்கைகள் முதலானவற்றைத் தொடக்கத்திலிருந்து எந்தெந்தமுறைகளில் ஆராய்ந்தனர் என்பதை அறிய வேண்டும். இதற்கடுத்து மனிதனைப் பண்பாட்டு நிலையிலும், உயிரியல்

நிலையிலும் ஆராயும் இக்கால மானிடவியல் முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது என்பதையும் அறிய வேண்டும். இவற்றைத் தொகுத்துக் காண்பது மானிடவியலின் தொடர்ச்சியான வரலாற்றைக் காண்பதற்கு உதவும். இவையனைத்தையும் முழுமையாக இவ்வாவிடிலுங்கூட பெருமளவு புரிந்து கொள்ள இந்நூல் உதவும்.

இக்கால மானிடவியல் கடலென விரிந்த துறையாதலால் அதை உடல்சார் மானிடவியல் (physical anthropology), பண்பாட்டு மானிடவியல் (cultural anthropology) என்னும் இருபெரும் பிரிவுகளில் நின்று அறிவதே சாலப் பொருத்தம். இவ்விரு பெரும் பிரிவுகளுள் ஒன்றான பண்பாட்டு மானிடவியலைப் பற்றியதே இந்நூல் இருப்பினும், உடல்சார் மானிடவியலைப் பற்றியும் அதன் உட்பிரிவுகளைப் பற்றியும் சுருக்கமாக இந்நூல் விவரிக்கும்.

பண்பாட்டு மானிடவியல் பிரிவில் எளிதில் கையாள முடியாத அளவிற்கு மிகப்பெருமளவில் செய்திகளை மானிடவியலார் சேகரித்துள்ளனர். இச்செய்திகளை முறைப்படுத்திப் பொருளுள்ளவையாகவும் பயனுள்ளவையாகவும் அளிக்க இச்சுருக்க நூல் உதவும். மானிடவியலின் நீண்ட வரலாற்றினையும், அதனின்று இக்கால மானிடவியல் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளது என்பதையும் அறிய விழைவோருக்கு இந்நூல் அரிய கருத்துகளை ஒழுங்குபடுத்தித் தரும். நம் மூதாதையர்களின் வாழ்க்கை முறைகளையும், சிந்தனைப் போக்குகளையும் இந்நூல் விவரிக்கின்றது. மானிடவியலறிஞர் களையும் அவர்களின் கொள்கைகளையும் பற்றிய முதன்மையான செய்திகளைத் தருவதோடு அவர்களின் மூல நூல்களைப் படித்து அதிலிருந்து நேரடியாகச் செய்திகளைப்பெற இயலாக் குறையையும் இச்சுருக்க நூல் நீக்கும். மானிடவியலறிவு மூலம் தமிழ்ப் பண்பாட்டையும் இந்திய மக்களின் பண்பாட்டையும் அறியும் நிலையில், சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய இடங்கள் தவிர இந்நூல் முழுவதிலும் இயன்ற மட்டும் தமிழ் மண்ணின் பண்புகளும் இந்தியச் சூழலிற்குட்பட்ட பண்புகளும் சிறப்பு நிலையில் எடுத்தாளப்பட்டுள்ளன.

## மானிடவியலின் தோற்றம்

மானிடவியலின் வளர்ச்சியில் பல காரணிகள் பங்கு பெற்றுள்ளன இருப்பினும், மேற்கத்தியத் தத்துவமும், மேற்கத்திய வரலாற்று நிகழ்ச்சிகளுமே அடித்தளமாய் அமைந்துள்ளன. மனிதனின் தோற்றம், தன்மை, அவர்களுக்குள் உள்ள வேறுபாடுகள் ஆகியவற்றைக் குறித்துப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் எழுப்பப்பட்ட வினாக்களே இன்றைய மானிடவியலின்



வளர்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன. மனிதனைப் பற்றிய அக்காலத்தவர்களின் ஊகங்களும் ஆர்வமும் நீண்ட வரலாறு கொண்டவை. பல்வேறுபட்ட மக்களின் வழக்கங்களை அறிவதில் பழம்பொருள் ஆய்வாளர்கள் (antiquarians) மிகுந்த ஆர்வங்காட்டினர். அவர்களுள் ஹெரோடாட்டஸ், ஸ்ட்ராபோ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். பரந்து விரிந்த பண்டைய பிரான்ஸ் நாட்டில் (Gaul) பலவகையான மக்கள் வாழும் முறையை அறியும் பொருட்டு, சீசர் என்பார் அந் நிலப்பரப்பினை மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆராய்ந்தார். இன்று பண்பாட்டு வகைகளையும், பண்பாட்டுப் பரவலையும் ஆராய்வதில் செல்வாக்குப் பெற்று விளங்கும் பண்பாட்டுப் பரப்புக் (culture area) கோட்பாட்டை அன்றே சீசர் பயன்படுத்தியுள்ளார் எனக் கருதவேண்டியுள்ளது. இதுபோன்று பலசெய்திகளைத் தொகுத்துக் காணும்போது மட்டுமே தொன்மைக் காலத்தில் மனிதனைப் பற்றி அறிவதில் எவ்வாறான சிந்தனைகள், செயற்பாடுகள் நிலவின என்று அறிய முடியும். இதற்கு மானிடவியலின் வரலாற்றினைப் பல நிலைகளாகப் பகுத்து அறிய வேண்டியது அவசியமாகிறது. மானிடவியல் தோன்றியது முதல் இன்றைய நிலை வரை அது நான்கு காலகட்டங்களாக வளர்ச்சியடைந்துள்ளது என்பார் பென்னிமன்[1] அவை :

1. கருவுற்ற காலம் (formulatory period - கி.பி. 1835 க்கு முன்னர்)

2. ஒருமுகப்படுத்தப்பட்ட காலம் (convergent period - கி.பி. 1835 முதல் 1859 வரை)

3. ஆக்கநிலைக் காலம் (constructive period கி.பி. - 1859 முதல் 1900 வரை)

4. வளர்ச்சியுற்ற காலம் (critical period - 1900 முதல் 1935 வரை)

மானிடவியலின் தோற்றமும் வளர்ச்சியும் உலக வரலாற்றோடு பின்னிப்பிணைந்தவையாக உள்ளதால் மேற்கூறிய நான்கு நிலைகளுள் முதல் மூன்றினைப் பின்வரும் வரலாற்றுப் படி மலர்ச்சியோடு (evolution) இணைத்து அறிவது மிகப் பொருத்தமாக இருக்கும்.

1. புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய காலம் (period before age of exploration)

2. புத்தாய்வுக் காலம் (age of exploration)

3. அறிவொளிக் காலம் (the enlightenment period)

1 T.K. Penniman, *A Hundred Years of Anthropology* (London: General Duckworth, 1965).

இக்காலகட்டத்தை அறிய முற்படும்போது, கிறித்து பிறப்பதற்கு முன்னர் வாழ்ந்த சிந்தனையாளர்கள் தொடங்கி புத்தாய்வுக் கால அறிஞர்கள் வரை அனைவரின் கருத்துகளைத் தொகுத்துக் காண வேண்டும். மானிடவியல் சார்ந்த சிந்தனை எந்தக் கால கட்டத்தில் தோன்றியது என்று மிகவும் துல்லியமாகக் கூறமுடியாது. அவ்வாறு ஒருவர் அறிய முயன்றால் பிளேட்டோ, அரிஸ்டாட்டில் காலம் வரை செல்ல வேண்டும் அல்லது அவர்களுக்கு முந்தையவர்கள் காலத்திலிருந்தே அறிய வேண்டும்.[2]

இக்காலத்தைச் சேர்ந்த சிந்தனையாளர்களுள் செனோபேன்ஸ் (கி.மு. 570 - 475), ஹெரோடாட்டஸ் (கி.மு. 484 - 425), டெமோகிரிட்டஸ் (கி.மு. 460 - 370), புரோட்டோகோரஸ் (கி.மு. 480 - 410), சாக்ரட்டீஸ் (கி.மு. 470 - 399), பிளேட்டோ (கி.மு. 427 - 347), அரிஸ்டாட்டில் (கி.மு. 384 - 322), எப்பிக்கூரஸ் (கி.மு. 341 - 270) ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் அனைவருமே இன்றைய மானிடவியலோடு தொடர்புடைய பல கருத்துகளை வெவ்வேறு நிலைகளில் சிந்தித்தவர்கள். இக்கால மானிடவியலில் இவர்களின் கருத்துகள் ஆராயப்பட்டும், மறுக்கப்பட்டும், மாற்றங்கள் பெற்றும், அப்படியே ஏற்கப்பட்டும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## செனோபேன்ஸ் (ஏறக்குறைய* கி.மு. 570 – 475)

மானிடவியல் சார்ந்த கருத்துகளை முதன் முதலில் சிந்தித்தவர் செனோபேன்ஸ். இவர் கிரேக்க நாட்டைச் சேர்ந்தவர்; பல இடங்களுக்குப் பயணம் செய்தவர்; பல்வேறு வகையான மக்களை நேரில் கண்டவர். பல இடங்களுக்குப் பயணம் செய்து புதிய புதிய மக்களினத்தவர்களை நேரில் கண்டதால் மனித சமுதாயத்தைப் பற்றிப் பல நிலைகளில் சிந்தித்தார். மனித சமுதாயம் என்பது மக்களால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட அமைப்பே என்பார் செனோபேன்ஸ். அதோடு கடவுளர்கள் மனிதர்களாகப் பூமியில் படைக்கப்பட்டனர் என்றும், சமயம் என்பது ஒரு சமுதாயப் படைப்பே என்றும் இவர் உறுதியாக நம்பினார்.[3] இவ்வகைக் கருத்துகளைத் தெரிவித்த முதல் சிந்தனையாளர் என்னும் சிறப்பு இவருக்கு உண்டு.

2 E.E. Evans - Pritchard, *A History of Anthropological Thought* (London : Faber and Faber, 1981), p.3.

* Circa

3 David E. Hunter and Phillip Whitten, *Encyclopaedia of Anthropology* (New York: Harper & Row, 1976), p. 13.



## ஹெரோடாட்டஸ் (ஏறக்குறைய கி.மு. 484 – 425)

தொடக்கக் காலத்தில் உலகின் பல பகுதிகளுக்கும் அரிய பயணங்களை மேற்கொண்டவர் ஹெரோடாட்டஸ். போக்குவரத்து வளர்ச்சியுறாத அக்காலத்தில் இவர் இருந்த இடத்திலிருந்து கிழக்கு மேற்காக 1700 மைல்களும் தெற்கு வடக்காக 1600 மைல்களும் சென்று வந்தவர் என்பர் வரலாற்றியலார். இவர் மேற்கொண்ட பயணங்கள் மூலம் 50க்கும் மேற்பட்ட மக்களினத்தவர்களைக் கண்டு அவர்களின் வாழ்க்கை முறைகளை விரிவாக எழுதினார். அதோடு இவர் சென்றுவந்த பகுதிகளைப் பற்றியும், அவற்றின் புவியியல், இயற்கைக் கூறுகளைப் பற்றியும் விரிவாக எழுதினார். இதனாலேயே கிரேக்க இலக்கியவியலார் முதற்கொண்டு அனைவரும் இவரை 'வரலாற்றியலின் தந்தை' எனப் போற்றுகின்றனர்.

ஹெரோடாட்டசின் சமகாலத்தவர்கள் பல்வேறு இனமக்களையும், அவர்களின் மாறுபட்ட வாழ்க்கை முறைகளையும் ஆராய முற்பட்டனர் என்றாலும் இவர் அளவிற்குப் பரந்த நிலையில் அவர்களால் ஆராய இயலவில்லை. இவர் மக்கள் வழங்கிய மொழிகள், மக்களின் உருவவகைகள், பொருள்சார் பண்பாடு (material culture), திருமணம், மணவிலக்கு (divorce), சமுதாயச் சட்டமுறைகள், அரசு, நீதிமுறைகள், போர், சமயம் போன்ற பல கூறுகளை விரிவாக ஆராய்ந்து எழுதினார். அதோடு, குழந்தையைப் பெற்றெடுக்கும் பேறுகாலத்தின்போது மனைவி பெறும் துன்பங்களுக்கும் விலக்குகளுக்கும் ஈடாகக் கணவனும் அவ்வகையான சிரமங்களை ஏற்கும் பேறுகாலத் தனிமையை (couvade) முதன்முதலில் கண்டறிந்து எழுதினார்.[4] இத்தகைய முறை பண்பாட்டு மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளதால் ஹெரோடாட்டஸ் பெயர் இன்றும் மானிடவியலில் இடம் பெற்றுள்ளது. எண்ணற்ற மனித இனத்தவர்களை அவர்களின் சூழலிலேயே ஆராய்ந்து எழுதிய மிகத் தொடக்கக் கால அறிஞர் ஹெரோடாட்டஸ் என்பதால் இவரை வரலாற்றியலின் தந்தை என்பதோடு 'கிரேக்க இனவரைவியலின்* தந்தை' என்று கூறுவதும் மிகப் பொருத்தமே.

4 'Makhan Jha, *An Introduction to Anthropological Thought* (Delhi: Vikas Publishing House Pvt. Ltd., 1983), p.2.

'இனவரைவியல் (ethnography) என்பது பண்பாட்டு மானிடவியலின் முதன்மையான பிரிவுகளுள் ஒன்று. இப்பிரிவு ஒவ்வொரு தனிப்பண்பாட்டைப் பற்றி அல்லது ஓர் இனக்குழுவைப் பற்றி முழுமையாக ஆராய்ந்து விவரிக்கக் கூடியது. இதைப் பற்றி விரிவாக அறிய 'மானிடவியலின் உட்பிரிவுகள்' என்ற அடுத்த அத்தியாயத்தில் 'பண்பாட்டு மானிடவியல்' என்னும் உட்தலைப்பின் கீழ்க் காண்க.

Scanned by TapScanner

ஹெரோடாட்டஸ் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வெவ்வேறு வகையான இனத்தவர்களை அறிந்த பின் கிரேக்கர்களின் பண்பாடே உயர்ந்தது என மதிப்பிட்டார். இருப்பினும் இவர் அனைத்து மக்களின் பண்பாட்டையும் ஒருமுகக் கண்கொண்டு பார்க்க விரும்பினார். ஒரு பண்பாட்டைச் சேர்ந்த எந்த ஒரு பழக்க வழக்கமும் பொருளற்ற தன்மையில் அவர்களின் பண்பாட்டில் இடம்பெறவில்லை என்பதை நன்கு உணர்ந்தார். இக்கருத்தே இன்றைய மானிடவியலின் மையக் கருத்தாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று இனவரைவியல் தனிப் பரப்பாகத் திகழ்வதுபோன்று ஹெரோடாட்டஸ் காலத்தில் இல்லை என்றாலும் அதற்கான முயற்சியில் ஈடுபட்டுச் செய்திகளைச் சேகரித்ததே மானிடவியலுக்கு அவர் ஆற்றிய மிகப்பெரும் பங்களிப்பாகும்.

## டெமோகிரிட்டஸ் (ஏறக்குறைய கி.மு. 460 – 370)

ஹெரோடாட்டசுக்குப் பின்னர்க் கிரேக்கச் சிந்தனையாளர்கள் பலர் மனித சமுதாயத்தின் தன்மைகளை ஆராயத் தொடங்கினர். குறிப்பாக, சமுதாயத்தின் படிமலர்ச்சியையும் பண்பாட்டின் தோற்றத்தையும் அறிய விழைந்தனர். இவர்களுள் டெமோகிரிட்டஸ் குறிப்பிடத்தக்கவர். இவர் தொன்மை மக்களிடம் காணப்பட்ட வழக்கங்களை ஒருமுகப்படுத்தி அதன் மூலம் பொதுவான கொள்கைகளை வகுக்க முயன்றார். தொன்மை மக்கள் காட்டுப்பகுதிகளில் வாழ்ந்த காலத்தில் தன்னந்தனியாக உணவு ஈட்டவோ கொடிய விலங்குகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவோ இயலவில்லை. ஆகவே அவர்கள் மற்றவர்களுடன் ஒன்றுசேர்ந்து அவர்களின் உதவியுடன் வாழ முற்பட்டனர். இதனால் தோன்றியதே சமுதாய வாழ்க்கை. இவ்வமைப்பு தேவையின் அடிப்படையிலேயே தோன்றியது.[5] டெமோகிரிட்டசின் இக்கருத்துகள் அனைத்தும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இவர் மனித சமுதாயத்தின் படிமலர்ச்சி குறித்தும் விவாதித்தார். மனித சமுதாயம் தொன்மை நிலையிலிருந்து நாகரிக நிலை வரை படிப்படியாக வளர்ச்சியுற்று வந்துள்ளது என்றும் இவ்வளர்ச்சி அந்தந்தக் காலத்தில் ஏற்பட்ட வாழ்க்கைப் போராட்டங்களிலிருந்து மீளுவதற்கு மக்கள் மேற்கொண்ட முயற்சிகளின் மறுவடிவமே என்றும் கூறினார். படிமலர்ச்சிக் கருத்துகளுக்கடுத்து இவர் பண்பாட்டுக் கூறுகள் (culture traits) தோன்றிய முறை குறித்தும் சிந்தனை செய்தார். இதற்கு மனிதனை விலங்கினங்களோடு ஒப்புமைப் படுத்தினார். மனிதன்

5 Ibid., p 3



விலங்குகளிடமிருந்து கற்ற பல்வேறு உத்திகளின் அடிப்படையிலேயே பல பண்பாட்டுக் கூறுகள் தோன்றின என்று இவர் நம்பினார். இதனால் இவர் மனிதனை முதன்முதலில் பறவைகளோடும் விலங்குகளோடும் ஒப்புமைப் படுத்தி ஆராய்ந்தவர் என்னும் பெயரைப் பெற்றார்.[6]

மனிதன் சிலந்தியிடமிருந்து நெசவு நெய்தலையும், தூக்கணாங் குருவியிடமிருந்து வீடுகட்டும் முறையையும் நைட்டிங்கேல் பறவையிடமிருந்து இசையையும், அன்னத்திடமிருந்து பாடுவதையும் கற்றுக் கொண்டான் என்பார் இவர்.[7] இதைப் போன்றே வேறு சில பண்பாட்டுக் கூறுகளின் தோற்றத்தினையும் விவரிப்பார். இன்றைய அறிதல்சார் மானிடவியலாரின் (cognitive anthropologists) கருத்துகளுடன் ஓரளவு தொடர்புடையனவாக இவர்தம் சிந்தனைகள் அமைந்திருந்தன என்று கருதலாம்.

## புரோட்டோகோரஸ் (ஏறக்குறைய கி.மு. 480–410)

இவர் தம் சீரிய சிந்தனைகள் மூலம் பண்டைய கிரேக்க இலக்கியத்தில் ஒரு நிலையான இடத்தைப் பெற்றவர். 'உண்மை அல்லது ஒதுக்குதல்' (truth or the rejection) என்ற இவரது புகழ்மிக்க நூலில் மனிதன் அனைத்தையும் கணிக்கக் கூடியவன் என்றும் இறைவன் இவ்வுலகில் நிலைபெற்றுள்ளானா இல்லையா என்பதைக் கூறவியலாது என்றும், பிரபஞ்சம் முழுவதிலும் மனிதனே முதற்பொருளாக உள்ளான் என்றும், மனிதர்களின் செயல்களில் கடவுளின் பங்கு ஏதுமில்லை என்றும், தொடக்கக் காலச் சமுதாயம் ஏற்றத்தாழ்வுகளின்றி ஒரு படித்தானதாக (homogeneous) இருந்தது என்றும், மனித சமுதாயத்தில் குடும்பச் சிக்கல்களைத் தீர்க்கும் நீதிமுறை, ஒழுக்கமுறை, மொழி போன்ற சில கூறுகள் தொடக்கத்திலேயே தோன்றிவிட்டன என்றும் கூறினார்.[8]

## சாக்ரட்டீஸ் (ஏறக்குறைய கி.மு. 470–399)

பண்டைய கிரேக்க இலக்கியங்கள் பெரும் செல்வாக்குப் பெறுவதற்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர்களுள் சாக்ரட்டீசும் ஒருவர். இவர் மானிடவியல்சார் போக்கில் பெருமளவு சிந்தித்தவர். இவரின் சிந்தனைகள் பெரும்பாலும் மனித சமுதாயத்தைப் பற்றியனவாக இருந்தன. ஒவ்வொரு சமுதாயமும் சில உலகளாவிய விழுமியங்களால் (universal values) நெறிப்படுத்தப்படுகின்றது. சமுதாயத்தில் நிலவும் ஒழுக்க முறைகளுக்குப் பின்னால் அறவியல் (ethics) கூறுகள் இருப்பதைக் காணமுடியும்; உலகளாவிய நீதிமுறை

6 Ibid, p.3.
7 Ibid, p.3.
8 Ibid, p.3

ஒன்றின் அடிப்படையிலேயே ஒவ்வொரு சமுதாயத்தின் சட்டதிட்டங்கள் ஏற்பட்டுள்ளன. உலகில் உள்ள எல்லாவகையான சமுதாய வாழ்விலும் உலகளாவிய விதிமுறைகள் இடம் பெற்றிருப்பதைக் காண முடியும் எனத் திட்டவட்டமாகக் கூறினார்.

மனித சமுதாயத்தில் இடம்பெற்றுள்ள உலகளாவியக் (universal) கூறுகளைச் சாக்ரட்டீஸ் விவரிக்கும்போது, இவை கண்ணுக்குப் புலப்படாதவை; ஒரு சில சூழல்களில் இவற்றைப் பற்றிச் சொற்களால்கூட விவரிக்கவியலாத் தன்மையைப் பெற்றவை எனக் கூறுவார். இவரது கருத்துப்படி, சமுதாயத்தின் அனைத்துக் கூறுகளையும் அறிந்து, அதன்படி ஒருவர் வாழவேண்டுமானால் அவருக்கு முறைப்படியான கல்வி இன்றியமையாததல்ல; பள்ளிக்குச் சென்று ஆசிரியரிடம் கற்க வேண்டிய தேவையுமல்ல; வகுப்புகளுக்குச் செல்லாமலேயே சமுதாய வாழ்க்கையைக் கற்க இயலும். ஆனால் மனிதன் செய்யும் மிகப்பெரும் தவறு அவன் அறியாமையில் வாழ்வதேயாகும். ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தின் இயல் நிகழ்ச்சிகளையும் (phenomena) நடைமுறை களையும், முறைப்படியான பயிற்சி மூலம் (பள்ளிக் கல்வி) கற்றுக் கொள்ளாமல் இயல்பான மனநிலையில் அறிந்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் மட்டுமே அவனது சொந்த சமுதாயத்தின் நெறிமுறைகளை (norms) முழுமையாக அறிய முடியும்.[9]

சாக்ரட்டீசின் இவ்வகைக் கருத்துகளனைத்தும் சமுதாயத்தைப் பற்றிய தத்துவமாகவே அமைந்தன. இவர் கருத்துகள் பண்டைய அறிவார்ந்த கிரேக்க அறிஞர்களால் மிகவும் விரும்பி விவாதிக்கப்பட்டன. இன்றைய சமுதாய அறிவியல்களில் விவாதிக்கப்படும் பல கோட்பாடுகளிலும்கூட அவர்தம் கருத்துகள் குறிப்பிடத்தக்க பங்கினைப் பெற்றுள்ளன.

## பிளேட்டோ (ஏறக்குறைய கி.மு. 427 – 347)

இவர் சாக்ரட்டீசின் மாணவர்; கிரேக்கச் சிந்தனையாளர் குழுவில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவர். இவர் சாக்ரட்டீசின் சில கருத்துகளை மறுத்துப் பேசியதும், அவரால் எழுப்பப்பட்ட சில விடை காணப்படாத கேள்விகளுக்கு முடிவு காண்பதில் ஈடுபட்டதும் இவரது குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும் என்பர் இவரைப் பற்றிய திறனாய்வாளர்கள்.

மனித சமுதாயம் என்பது மக்களின் தேவைகளுக்காகத் தோன்றியது. மிகத் தொடக்கக் காலத்தில் மக்கள் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஒன்றுகூடி வாழமுற்பட்டபோது அவர்களின் தேவையை

9 Ibid., p.4.



ஈடுசெய்ய ஒவ்வொருவரும் அவரவருக்குத் தெரிந்த வேலையைச் செய்து தேவைகளை நிறைவேற்றிக் கொண்டனர். இதனடிப்படை யிலேயே உழவர்கள், நெசவாளர்கள், கருமார்கள், தச்சர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், படைவீரர்கள், ஆட்சியாளர்கள் போன்ற பல்வேறு வகுப்பினர் தோன்றினர் என்பார் பிளேட்டோ.[10] இக்கருத்தை இவர் வேறுவகையிலும் கூறுவார். 'மனித சமுதாயம்' என்னும் அமைப்பு, தொன்மை மனிதனின் (primitive man) நுண்ணறிவிலிருந்து தோன்றியதாகும். இம்மக்கள் அவர்களின் தேவைகளைப் பற்றியும், சுற்றுப் புறச் சூழலைப் பற்றியும், அங்கு எவ்வாறு வாழவேண்டும் என்பதைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். பிளேட்டோவின் இவ்வகைக் கருத்துகளில் ஹெர்பர்ட் ஸ்பென்சரும் பிற சிந்தனையாளர்களும் பெருமளவு தாக்கம் பெற்றிருந்தனர்.[11]

பிளேட்டோ மனித சமுதாயத்தின் தோற்றம் குறித்துச் சிந்திப்பதில் மிகுதியாகக் கவனம் செலுத்தவில்லை என்றும் அதைக்கொள்கை ரீதியில் விவரிக்க முனையவில்லை என்றும் சில திறனாய்வாளர்கள் கருதுவர். இவரின் சிந்தனை முழுவதும் ஒரு விரும்பத்தக்க சமுதாயம் அல்லது மாதிரி சமுதாயம் (model society) எவ்வாறு அமைய வேண்டும் என்பதாகவே இருந்தது. இதற்கடுத்துப் பிளேட்டோவின் சிந்தனை சமுதாயத்தின் படிமலர்ச்சி பக்கம் திரும்பியது. இவரின் படி மலர்ச்சிக் கருத்துகள் ஒருவழிப் படிமலர்ச்சிக் கொள்கையை ஒத்துள்ளது. சமுதாயம் ஒரே வழியில் (unilineal) மட்டுமே வளர்ச்சி பெற்று வந்துள்ளது எனக் கருதினார். சமுதாயத்தின் படிமலர்ச்சி பற்றி ஆராய்வது இவரது முதன்மையான ஆய்வாக இல்லை என்பதை இங்கு நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவர் சிந்தனைகள் அனைத்தும் பல கால கட்டங்களைக் கடந்து வந்துள்ள மனித சமுதாயத்தில் அனைத்துக் காலங்களிலும் நிலைபெற்றிருந்த கூறுகள் என்னென்ன என்பதைப் பற்றியதாகவே இருந்தன.

விரும்பத்தக்க சமுதாயம் அல்லது மாதிரி சமுதாயத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது பண்டைய கிரேக்க மக்கள்தொகைக் கொள்கையை ஒத்துப்போகிறார் பிளேட்டோ. நகரங்களிலோ நகர அரசுகளின் பரப்பிலோ மக்கள்தொகை மிகுதியாக இருக்கக்கூடாது என்பதே இக்கொள்கையின் கருத்தாகும். பிளேட்டோ மக்கள்தொகைப் பெருக்கத்தை விரும்பாதவர். அதே

10 A.C. Das, *An Introduction to the Study of Society* (Delhi : Motilal Banarsidass, 1972), p.65.

11 F.H. Collins, *The Synthetic Philosophy of Herbert Spencer* (London : Williams and Norgate, 1901), pp. 399 - 408.

நேரத்தில் நகர அரசுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில இனத்தவர்களின் இனப்பெருக்கம் மூலம் மக்கள்தொகை கட்டுக்குள் இருக்க வேண்டும் என்ற கருத்தினை முன்மொழிந்த முதல் சிந்தனையாளர் என்ற பெயரையும் பெற்றவர்.[12] பிளேட்டோவின் கருத்துகள் இக்கால மானிடவியலில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனினும் 19-ஆம் நூற்றாண்டுப் படிமலர்ச்சிக் கொள்கையாளர்களின் சில கருத்துகளோடு ஒத்திருந்தன. குறிப்பாக, தொடக்ககாலச் சமுதாயம் தந்தை வழித் தலைமையைப் (Patriarchy) பெற்றிருந்தது என்ற ஹென்றி மெய்னின் கருத்தோடு இவர்தம் கருத்துகள் தொடர்பு கொண்டிருந்தன.

**அரிஸ்டாட்டில் (ஏறக்குறைய கி.மு. 384 – 322)**

கிரேக்கச் சிந்தனையாளர்கள் அனைவரையும் கடந்து உயர்ந்து நிற்பவர் அரிஸ்டாட்டில். இவரே முதன்முதலில் 'Anthropologist' (மானிடவியலார்) என்னும் சொல்லைப் பயன்படுத்தியவர். எவனொருவன் அவனைப்பற்றி விவாதிக்கிறானோ அவனே 'மானிடவியலார்' என்னும் கருத்தில் இச் சொல்லைப் பயன்படுத்தினார்.

மனிதனையும் அவனது சமுதாயத்தையும் பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துகள் இன்றும் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவரது புலமைத்துவம் பல பரிமாணங்களைக் கொண்டது; பல பொருள்கள் பற்றியது. இயற்கையிலேயே மனிதன் சமுதாய இயல்புடையவனாக (social being) உள்ளான் என முதன்முதலில் வாதிட்டவர் இவரே. எனவாம் பிறக்கும்போதே மனிதனின் இயல்புகள் சமுதாயத்தோடு ஒன்றுபடும் தன்மைகளைப் பெற்றுள்ளன என்றும், இத்தன்மைகள் மொழி, பழக்கங்கள், வழக்கங்கள், அறிவார்ந்த முறையில் சிந்தித்தல் போன்றவற்றில் புதைந்துகிடக்கின்றன என்றும் இவர் கருதினார்.[13]

சமுதாயம், பண்பாடு ஆகியவற்றை அறிவதில் அரிஸ்டாட்டில் கொண்டிருந்த அணுகுமுறை இக்கால முறையைப்பெரிதும் ஒத்திருப்பதால் இவர் மானிடவியல் கண் கொண்டு ஆராய்ந்த முன்னோடிகளுள் மூத்தவர் எனக் கருதப்படுகிறார். பண்பாடு என்பது சமுதாயத்தினர் அனைவரும் கற்ற ஒன்று என்பது இவர்து கருத்து. சமுதாயத்தின் பல்வேறு தன்மைகளை நன்கு ஆராய வேண்டுமானால் இயல்நிகழ்ச்சிகளைக் கண்ணுற்று ஆராயும் செயலறிவு முறை (empiricial method) மூலம் காணவேண்டியது

12 Makhan Jha, *An Introduction to Anthropological Thouhgt*, op. cit., p.4

13 James P. Leichtenberger, *Development of Social Theory* (London : George Allen and Unwin, 1924), pp.45 - 80.



அவசியமென்றார். இதில் சமுதாயத்தின் பல்வேறு உறவுகளை உற்றுநோக்கி அவற்றைப் பகுத்தாய்தல் அவசியமெனக் கருதினார். இன்றைய அமைப்பியல் வாதிகள் (structuralisis) பாணியில் அன்றே சிந்தித்தவர் அரிஸ்டாட்டில் என்பது இதன்மூலம் அறியப்பெறும்.

பண்பாட்டையும் சமுதாயத்தையும் பற்றிய கருத்துகளைத் தவிர உயிரியல்சார் பண்புகள் குறித்தும் அரிஸ்டாட்டில் சிந்தித்தார். 'விலங்குகளின் வம்சாவளி', 'விலங்குகளின் வரலாறு' 'விலங்குகளின் இடம்பெயரும் முறை' முதலியவை குறித்துப்பல கட்டுரைகள் எழுதினார். இவர்தம் கருத்துகள் இன்றைய உடல்சார் மானிடவியலோடு ஒத்திருக்கவில்லை என்றாலும் விலங்கினங்களின் பண்புகளைக் கொண்டு மனித சமுதாயத்தை அறிய விழைந்த முன்னோடி அரிஸ்டாட்டில். இவரது இந்த அணுகுமுறை இன்று மானிடவியலில் உயிர்மூச்சாக உள்ள முழுதளாவிய அணுகுமுறையைச் (holistic approach) சார்ந்தது எனவும் கூறலாம்.[14]

**எப்பிக்கூரஸ் (ஏறக்குறைய கி.மு. 341 – 270)**

அரிஸ்டாட்டிலுக்குப்பின் அங்கிருந்த அரசியல் நிலை மிகவும் சீர்கெடத் தொடங்கியதால் இயல்பான வாழ்க்கையில் பெரும் குழப்பங்களும் மாறுதல்களும் ஏற்பட்டன. இதனால் அறிஞர்களின் மனப்போக்குகளும் சமுதாயத்தைப் பற்றிய எண்ணங்களும் மாற்றம்பெறத் தொடங்கின. இம்மாற்றங்களைப் பற்றி விளக்க முற்பட்ட சிந்தனையாளர்கள் பல்வேறு கருத்துடையவர்களாக இருந்ததால் இவர்கள் பல கொள்கைக் குழுவினராகக் (schools) காணப்பட்டனர். அவற்றுள் ஒன்றே எப்பிக் கூரஸைத் தலைவராகக் கொண்ட சிந்தனைக்குழு. டெமோகிரிட்டஸ் கொள்கையில் பெருமளவு பற்றுடையவராய் எப்பிக்கூரஸ் இருந்தார். இவர் சமுதாயம் என்பது முற்றிலும் மனிதனோடு மட்டும் தொடர்புடையது; கடவுளுடனோ பிற ஆற்றல்களுடனோ தொடர்பற்றது எனக் கூறினார். அதோடு கடவுளைப் பற்றிய நம்பிக்கையும், அதிர்ஷ்டம், தலைவிதி, ஊழ்ப்பயன் போன்றவற்றில் கொண்டுள்ள நம்பிக்கையும் தவறானது மட்டுமல்லாமல் ஆபத்தானதுமாகும் என வாதிட்டார்.[15]

இவர் மனிதனையும் சமுதாயத்தையும் பற்றி மேலும் பல கருத்துகளைத் தெரிவித்தார். சமுதாய வாழ்வை ஏற்படுத்திக் கொண்டவன் மனிதனே. ஆகவே அவனால் மட்டுமே அதை மாற்றியமைக்க இயலும். சமுதாயத்திற்கேற்ப மனிதன் தகவமைய

14 Makhan Jha, *An Introduction to Anthropological Thought*, op. cit., p.5

15 A.C. Das, *An Introduction to the Study of Society*, op. cit., p.66.

Scanned by TapScanner

வேண்டும். ஏனெனில், மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்யும் கருவியாகவே சமுதாயத்தை ஏற்படுத்தினர்ன். அதோடு மனிதன் இறந்த பிறகு அவனது உடலும் ஆவியும் உடனடியாக இயற்கையோடு மறைந்து விடுகின்றன. ஆவி மட்டும் பலகாலம் வாழ்வதில்லை என்றார். எப்பிக்கூரசின் சில கருத்துகளைப் பண்டைய கிரேக்க அறிஞர்கள் பெரும் சர்ச்சைக் குரியதாக்கினர்.[16] இருப்பினும், இவர் கருத்துகளில் சமுதாயமும் மனிதனும் பெரும்பங்கு இடம்பெற்றுள்ளன என்பதை எவராலும் மறுக்க இயலாது.

### பிற சிந்தனையாளர்கள்

கிரேக்க, உரோமப் பேரரசுகளின் வீழ்ச்சிக்குப்பின் மனிதனையும் சமுதாயத்தையும் பற்றிய அறிஞர்களின் சிந்தனை பெரும் மாற்றத்திற்கு உள்ளானது. இதற்குக் காரணமாக அமைந்தது கிறித்தவ சமயத்தின் தோற்றமும் வளர்ச்சியுமாகும். கிறித்தவத்தின் வளர்ச்சி சமுதாயத்தத்துவவியலாரை அவர்களின் பழைய பிடியிலிருந்து விலக்கி, சமய நெறிமுறைகளுக்குட்பட்ட முறையில் சிந்திக்கும் நிலைக்குக் கொண்டு வந்தது. கிறித்தவத்தின் தோற்றத்தினால் ஏற்பட்ட இம்மாற்றம் உடனடியாகப் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை. பிரபஞ்சத்தைப் பற்றிக் கிறித்தவத்தில் கூறப்பட்டுள்ள அனைத்துக் கருத்துகளும் மக்களிடையே வேதக் கருத்துகளாக நிலைபெற, பல நூற்றாண்டுகளாயின. எளிய நிலையில் தோற்றம்பெற்ற கிறித்தவம் பேரரசர் மகா கான்ஸ்டாண்டைன் (கி.பி. 280 - 337) காலத்தில் நன்கு வேரூன்றத் தொடங்கியது. கிறித்தவம் 4 - ஆம் நூற்றாண்டில் நன்கு வேரூன்றத் தொடங்கினாலும் இதன் மரபாண்மைகள் (Christian orthodoxy) அந்த நூற்றாண்டில் நன்கு ஏற்படவில்லை.

கிறித்தவச் சமய குருக்கள் அப்போது நிலவிய கிரேக்கச் சிந்தனையாளர்களின் கொள்கைகளையும் கருத்துகளையும் ஏற்க மறுத்தனர். இவர்கள் மனிதனுக்கும் கடவுளுக்குமுள்ள தொடர்பை விளக்க முற்பட்டனர். கடவுளே அனைத்திற்கும் மூலமானவன். அவனால் மட்டுமே மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நல்லூழினை வழங்க இயலும். ஆகவே அவனை வணங்கி நல்லூழினைப் பெறுதல் மனிதனுக்குக் கிடைத்த பெரும் சிறப்பு என விளக்கினர்.

இக்கருத்துகளைத் தொடர்ந்து பல அறிஞர்கள் வெவ்வேறு நிலையில் விளக்கமளித்தனர். இவர்களுள் அகஸ்டின் (கி.பி. 354 - 430) குறிப்பிடத்தக்கவர். இவர் மண்ணுலகம், விண்ணுலகம், வளிமண்டலம் உட்பட பிரபஞ்சம் அனைத்தும் மனித

16 J.P. Leichtenberger, *Development of Social Theory*, op.cit., pp. 60 - 68.



ஆற்றலுக்கும் அப்பாற்பட்ட ஓர் உயர்ந்த ஆற்றலால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது என்று கருதினார். இக்கருத்தை மையமாகக் கொண்டே மனிதனையும் சமுதாய முறைகளையும் இவர் விளக்கினார். இவர்தம் கருத்துகள் பெரும்பாலும் வரலாற்று நிகழ்ச்சிகளையும், கிறித்தவ மக்களையும் பற்றியதாக அமைந்தன. இவரது புகழ்மிக்க நூல் 'கடவுளின் நகரம்' (The City of God) ஆகும்.

அகஸ்டினுக்கடுத்து அவர் மாணவர் ஒரோசியஸ் (கி.பி. 385 - 420) வரலாற்று நிகழ்வுகளை ஆதாரமாகக் கொண்டு சமுதாயத்தைப் பற்றி எழுத முனைந்தார். இவர் எழுதிய ஏழுதொகுதிகளில் கிறித்தவ மக்களின் வரலாற்றையும், புறச்சமயச் சமுதாயத்தினரின் (pagan society) வரலாற்றையும் விரிவாக எழுதினார். இந்நூற்றொகுதி கி.பி. 494 - இல் போப் அவர்களால் சட்ட முறைப்படி அங்கீகரிக்கப்பட்டது. கிறித்தவர்களால் புறச்சமயத்தவர் எனக் கருதப்பட்ட தொன்மை மக்களைப் பற்றி இந்நூலில் ஒரோசியஸ் விரிவாக எழுதியிருந்ததால் இடைக்காலம் (middle age) முழுவதும் இவ்வகை மக்களைப் பற்றிய முதன்மையான நூலாக இது திகழ்ந்தது.

## புத்தாய்வுக் காலம்

புத்தாய்வுக் காலத்திற்கு முந்தைய கால அறிஞர்களின் கருத்துகள் ஆணித்தரமாக அமையவில்லை. ஆயினும், அவை பிற்கால வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைந்தன என்பதில் மாறுபட்ட கருத்தில்லை. எனினும், புத்தாய்வுக் காலத்தின் போது, பெரும் எண்ணிக்கையிலான ஆய்வாளர்கள் உலகம் முழுவதும் சுற்றி வரும் வாய்ப்பினைப் பெற்றிருந்ததால் மனிதனைப் பற்றி அறிந்து கொள்வதில் புதிய புதிய திருப்பங்களும் விளக்கங்களும் ஏற்பட்டன. இப்புத்தாய்வுக் காலத்தில் (age of exploration) விளைந்த நிகழ்வுகளே மானிடவியலின் தோற்றத்திற்கு வழிகோலின.

புதிய புதிய நிலப்பகுதிகளும் மக்களும் கண்டறியப்பட்ட நூற்றாண்டாக, கி.பி. 13 - ஆம் நூற்றாண்டு போற்றப்படுகிறது. தொடக்கக்காலம் முதலே ஐரோப்பியர்கள் புத்தாய்வுகளை மேற்கொள்வதில் கோலோச்சத் தொடங்கினர். இந்நூற்றாண்டின் தலைசிறந்த புத்தாய்வாளராக மார்க்கோபோலோ (கி.பி. 1254 - 1313) திகழ்ந்தார். இவர் மேற்கொண்ட புத்தாய்வுகள் மூலம் அதுவரை எவரும் அறியாத இனத்தவர்களைப் பற்றிய உண்மைச் செய்திகளை அறிய முடிந்தது. இருப்பினும் இவருக்கு முன்னரே ஆசியப் பகுதி மக்களைப் பற்றிய செய்திகள் கிடைக்கப் பெற்றன. 13-ஆம் நூற்றாண்டில் மன்னராக இருந்த போப் (Pope) மங்கோலியப்

பேரரசுடன் அரசுமுறையிலான தொடர்பு வைத்துக்கொள்ள கார்ப்பினி (கி.பி. 1182 - 1252) என்பவரை அனுப்பி வைத்தார். இவர் மங்கோலியப் பேரரசில் சிலகாலம் தங்கி பின் தாய்நாடு வந்ததும் 'மங்கோலியர்களின் வரலாறு' (History of the Mongols) என்னும் நூலை எழுதினார். இந்நூலில் அம்மக்களின் உடலமைப்பு, வாழ்க்கைமுறை, பிற பழக்கவழக்கங்கள் குறித்து விரிவாக எழுதினார்.

வில்லியம் ரூப்ருகுயிஸ் 13 - ஆம் நூற்றாண்டில் (கி.பி. 1215 - 1270) ஆசியப் பகுதிகளுக்குப் பயணம் செய்து அம்மக்களின் பொருள்சார் பண்பாடு, உணவுப் பழக்கங்கள், பெண்களின் தொழிற் பகுப்பு, இறந்தவர்களைப் புதைக்கும் முறைகள் ஆகியவற்றைத் தொகுத்து எழுதினார். இதற்கடுத்து சர் ஜான் மாண்டிவில்லி மத்தியகிழக்கு நாடுகளுக்குச் சென்று அம் மக்களின் விசித்திரமான பழக்க வழக்கங்களை 'The Travels of Sir John Mandeville' என்னும் நூலாக எழுதினார்.

புத்தாய்வுக் கால வரலாற்றில் பெரும் மைல் கல்லாகத் திகழ்வது 15 - ஆம் நூற்றாண்டாகும். இந்நூற்றாண்டில் ஆப்பிரிக்கக் கண்டத்தை அறிய மேற்கொண்ட பயணம் குறிப்பிடத்தக்கது. ஐரோப்பியரின் இப்புத்தாய்வுப் பயணத்திற்குப் போர்ச்சுகல் இளவரசர் ஹென்றி (கி.பி. 1394 - 1460) உதவி செய்தார். முதலில் டாங்கியர் (Tangier) என்னும் பகுதிக்குக் கடல் பயணம் மேற்கொள்வதற்கும், பின்னர்ப் பல்வேறு பகுதிகளுக்குப் பயணம் மேற்கொள்வதற்கும் இவர் ஊக்கமளித்தார். இதன் பயனாய்க் காம்பியா, செனகல் பகுதிகளைக் கண்டறிய முடிந்தது. இவ்வகைப் பயணங்களின் எழுச்சியால் அதற்கடுத்தடுத்த நூற்றாண்டுகளில் கீழ்த்திசை நாடுகள், வடஅமெரிக்கா, தென் அமெரிக்கா, பசிபிக் தீவுகள் முதலான பகுதிகள் கண்டறியப்பட்டன. பல ஆய்வாளர்கள் மேற்கொண்ட இவ்வகைப் பயணங்களால் புதிய புதிய நிலப் பரப்புகளும், உருவத் தோற்றத்தில் மாறுபட்ட இனத்தவர்களும், அவர்களின் வியத்தகுப் பழக்க வழக்கங்களும், வாழ்க்கை முறைகளும் தெரிய வந்தன.

புத்தாய்வுச் செய்திகளைக் கல்விசார் துறையினர் ஓரளவு பயன்படுத்துமளவிற்குத் தொகுத்தவர் வாஸ்கோடகாமா (கி.பி. 1397 - 1499) ஆவார். இவரது பயணங்களின் போது, அவர் கண்ட மக்களின் ஆடை அணிகலன்கள், உணவுப் பழக்கங்கள், பிற பழக்கவழக்கங்கள், அடுத்தடுத்த இன மக்கள் கொண்டிருந்த பரிமாற்ற முறைகள், மொழி முதலான அனைத்தையும் விரிவாகத் தொகுத்து எழுதினார்.



கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் (கி.பி. 1451 - 1506) அமெரிக்க நிலப்பகுதியைக் கண்டுபிடித்தவர் என்ற செய்தி மட்டுமே பலருக்குத் தெரியும். இவரது பயணத்தின்போது இவர் தொகுத்த இனக்குழுவியல் செய்திகளும் பிற நிகழ்ச்சிகளும் பலருக்குப் புதுமையான செய்திகளாக இருக்கும். கி.பி. 1492 - இல் இவரது புகழ்மிக்க கப்பல்களில்* உலகின் புதிய புதிய பகுதிகளைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தில் பயணம் தொடங்கினார். பிற புத்தாய்வாளர்களைப் போன்றே இவரும் அவர் சென்ற இடங்களில் வாழ்ந்த மக்களைப் பற்றிப் பெருமளவு செய்திகளைச் சேகரித்தார். அதோடு பயணம் முடியும் தறுவாயில் ஏழு பழங்குடி இந்தியர்களைக் கடத்திக் கொண்டு ஸ்பெயின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தார். பின்னர் அவர்களிடம் மேற்கொண்ட உரையாடல்கள் மூலம் அவர்களின் மொழியைப் பதிவு செய்தார். அதன்மூலம் புத்துலக மக்களின் மொழியைப் பற்றிய முதல் ஐரோப்பிய ஆவணத்தைத் தயார் செய்ய முடிந்தது.

கொலம்பசுக்குப் பின் வாஸ்கோ முன்னஸ் டி பால்போஸ் (கி.பி. 1475 - 1570) என்பவர் பசிபிக் கடற் பகுதிகளுக்குச் சென்று சேகரித்த செய்திகளே அமெரிக்க இந்தியர்களை (அமெரிக்க இந்தியர் என்பது அமெரிக்காவின் தொல் குடியினரான செவ்விந்தியர்களைக் குறிக்கும்.) பற்றிய முதல் விவரமாக அமைந்தன. பிரெஞ்சு நாட்டு எழுத்தாளர் மிசல் டி மாண்டெய்ன் மேற்கொண்ட பயணம் மூலம் அமெரிக்க இந்தியர்களின் தன்னின உண்ணுந் தன்மையை** (cannibalism) அறிய முடிந்தது.

எண்ணற்ற புத்தாய்வாளர்கள் பல இடங்களுக்குச் சென்று ஆய்வு செய்ததால் அம்மக்களைப் பற்றி அவர்கள் சேகரித்த செய்திகளும், அவற்றை எழுதிய முறையும் அவரவருக்கே உரியபாணியில் இருந்தன. ஒரு முறைப்படியான முறையில் எவரும் எழுதவில்லை. சில செய்திகளை மிக விரிவாகவும், சில செய்திகளைச் சுருக்கமாகவும், சில செய்திகளை அறவே விடுத்தும் எழுதிய முறைகளே காணப்பட்டன. இருப்பினும், வெனடிய (Venetian) வணிகரான மார்க்கோபோலோ எழுதிய உரை அக்காலத்தில் எழுதப்பட்ட ஒரு தலைசிறந்த இனக்குழுவியல் வகையிலான விவரமாகும். அவர் பீக்கிங்கில் குப்லய்கான் அரண்மனையில் 17 ஆண்டுக்காலம் தங்கியிருந்தபோது

*இவரது புத்தாய்விற்குச் சென்ற கப்பல்களின் பெயர்கள் Nina, Printa, Santa, Marga ஆகும்.

**தன்னின உண்ணுந்தன்மை என்பது மனிதர்கள் மனிதர்களையே கொன்று அவர்களின் இறைச்சியை உண்ணும் வழக்கத்தைக் குறிக்கும்.

அம்மக்களின் வணிக உறவுகள், அங்காடி முறை, பணத்தின் மதிப்பு, குடியிருப்பு முறைகள், ஆண், பெண் தொழிற் பகுப்பு, திருமண முறைகள், சமயம், ஈமச்சடங்குகள் முதலானவை பற்றி நன்கு உற்றுநோக்கினார். அவற்றைக் 'கண்டுபிடிப்புகளைப் பற்றிய நூல்' (The Book of Discoveries) என்னும் தலைப்பில் எழுதினார். மார்கோபோலோவும் பிற புத்தாய்வாளர்களும் கையாண்ட பல்வேறு அணுகுமுறைகளே இனக்குழுவியலின் தோற்றத்திற்கு வித்திட்டன.

## புத்தாய்வுகளும் ஐரோப்பியர்களின் இனஉயர்வுக்கொள்கையும்

ஐரோப்பியர்கள் உலகின் பிற பகுதிகளில் மேற்கொண்ட புத்தாய்வுகளாலும், அந்நிலங்களைக் கைப்பற்றி அங்குக் குடியேற்ற அரசுகளை அமைத்ததாலும் அவர்கள் தொழில்நுட்பத்தில் மேம்பட்டவர்களாயினர். கடல்வழி மூலம் பிற பகுதிகளைக் கண்டறிந்ததால் கப்பல் கட்டுவதிலும் சிறந்த தொழில் நுட்பம் பெற்றவர்களாயினர். அதனால் கடற்பகுதியில் அவர்களை வெல்வது இயலாததாகிவிட்டது. நிலப்பகுதிகளிலும் ஐரோப்பிய வீரர்களை விரட்டுமளவிற்குக் குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த மக்களால் இயலவில்லை. அரசியல் அதிகாரத்தை நேரடியாகத் திணிக்காத வேறு சில நிலப்பகுதிகளிலும் ஐரோப்பியர்கள் பொருளாதாரம், வாணிகம் ஆகியவற்றில் ஆதிக்கம் பெற்றனர். தொழில் நுட்பத்தில் உயர்ந்து காணப்பட்ட ஐரோப்பியர்கள் தங்களை உயர்ந்தவர்கள் என்றனர். ஐரோப்பியரல்லாத மக்களைத் தாழ்ந்தவர்கள் என்றனர். உயர்வு தாழ்வு வரிசையில் ஐரோப்பியர்கள் மேல் வகுப்பினர் என்றும், ஐரோப்பிய உழவர்கள் அவர்களுக்கடுத்த நிலையினர் என்றும், திணைக்குடியினர் கீழ்நிலையினர் என்றும் கூறினர். அதற்குக் காரணம் அவர்களின் போர்க்கருவிகள் சிறந்தவையாக இருந்தமையாகும். அதனால் அவர்கள் தங்களை உயர்ந்தவர்கள் எனக்கருதினர். இந்த உயர்வெண்ணம் புவியியல், அரசியல் வெற்றிகளோடு நிற்காமல் இனஉயர்வு வாதம் (racism) வரை சென்றுவிட்டது. அன்று தோன்றிய இக்கருத்து மானிடவியல் வளர்ச்சிபெறும் வரை நிலவி வந்தது.[17]

19 ஆம் நூற்றாண்டில் இனஉயர்வுக் கொள்கையினை எதிர்த்த சிலருக்கு ஐரோப்பியரின் பதில் "வெள்ளையர்களின் பொறுப்பு" என்றே அமைந்தது. அதாவது, அவர்கள் கைப்பற்றிய நிலப்பகுதியில் வாழ்ந்த மக்கள் தாழ்ந்தவர்களாக இருந்தனர் என்றும், அவர்களுக்குச் சிறந்த வாழ்க்கை முறையையும், பொருளாதார வளத்தையும் ஏற்படுத்தித் தருபவர்கள் ஐரோப்பியர்களே என்றும் கூறிக் கொண்டனர். அம்மக்களின் வாழ்க்கை வளத்திற்கு அவர்களே "பொறுப்பு" என்றனர். ஆனால் அவர்களின் குறிக்கோள்கள் அனைத்தும் புதிய நிலப்பகுதிகளைக் கைப்பற்றி அங்கு அதிகார உரிமையை ஏற்படுத்துதல், அங்குள்ள வளங்களைச் சுரண்டுதல், அங்குள்ளவர்களைக் கிறித்தவர்களாக மாற்றுதல், அவர்களுக்கு ஐரோப்பிய முறையிலான கல்வியைக் கொடுத்தல் ஆகியவையே.[18]

## புத்தாய்விற்கு அறிவார்ந்த கருத்தியக்கம்

புத்தாய்வுகள் மூலம் ஐரோப்பியர்கள் புதிய புதிய இனத்தவர்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பெற்றனர். அப்புதிய நிலப்பகுதிகளைச் சேர்ந்த விலங்குகள், தாவரங்கள் ஆகியவற்றின் புதுமையான பண்புகளும், அங்கு வாழும் மக்களின் புதுமையான வழக்கங்களும் புத்தாய்வுகள் மூலம் அறிய முடிந்ததால் ஐரோப்பியர்கள் பல நிலைகளில் சிந்திக்கத் தொடங்கினர். புத்தாய்வில் கலந்து கொள்ளாத அறிஞர்களிடமும், ஐரோப்பியப் பொதுமக்களிடமும் புதுநில மக்களை அறிந்துகொள்வதில் பேரார்வம் காணப்பட்டது. அதனால் அப்பகுதிகளுக்குச் சென்ற புத்தாய்வாளர்கள் எழுதிய நூல்களுக்கும், அப்பகுதிகளுக்கான வழிகாட்டி நூல்களுக்கும் மிகுந்த வரவேற்பு இருந்தது. குறிப்பாக, ஆப்பிரிக்கர்கள் கீழ்த்திசை நாட்டினர், அமெரிக்க இந்தியர், பசிபிக் கடற்பகுதி மக்கள் ஆகியோரை அறிந்து கொள்வதில் மிகுந்த விருப்பமுடையவர்களாய் இருந்தனர்.

பெரும்பாலான நூல்கள் நுட்பமாக எழுதப்பட்டவையல்ல. மனித வேறுபாடுகளை விளக்குவதையும் அவர்களின் வாழ்க்கை முறையை முழுமையாகக் கூறுவதையும் தவிர்த்து அவர்கள் தொடர்புகொண்ட மக்களின் விந்தைகளையும் வேடிக்கைகளையும் விவரிப்பதாக அந்நூல்கள் அமைந்தன. இனக்குழுவியல் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்கள் மிகக் குறைவானவை. ஐரோப்பியரல்லாத மக்களின் புதுமையான வாழ்க்கையினை எழுதும்போது "அது அம்மக்களின் தன்மை" என்னும் போக்கில் மட்டுமே எழுதினர். அனைத்து மக்களும் சில வகைகளில் ஒன்றாகக் காணப்படுகின்றனர்; சில வகைகளில் வேறுபடுகின்றனர்; அவ்வேறுபாடுகள் பெரும்பாலாகப் பண்பாட்டளவில் மட்டுமே உள்ளது எனக்கருதினர். இக்கருத்தினை மானிடவியல் பிற்காலத்தில் உணர்த்தியதற்கு முன்னரே அவர்கள் அவ்வாறு சிந்தித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது

17 Merwyn S. Garbarino, *Sociocultural Theory in Anthropology* (New York: Holt, Rinehart and Winston, 1977), pp. 10 - 11.

18 Ibid, p.10.

துறையாக உள்ளது. இதனடிப் படையிலேயே குளுக்கான் மனிதனைப் பற்றி அறியும் பல துறைகளுள் மானிடவியல் ஒரு 'முழுமையான அறிவியல்' என்பார்.[1] மானிடவியல் பல்வேறு துறைகளின் அறிவை ஒருங்கிணைத்து மனிதனை ஆராய்வதால் இதனை 'ஒன்றிணைக்கும் அறிவியல்' (coordinating science) என்பார் குரோபர்.[2] மானிடவியல் இந்த இந்த பரப்புகளில் மட்டும் தான் மனிதனை அறிய முற்படுகிறது என்ற ஒரு வரையறை இல்லாமல் இதன் பரப்பு விரிந்து கிடக்கிறது என்பர் மானிடவியலறிஞர்கள் சிலர். மானிடவியலின் பரப்பு எவ்வாறு விரிந்து நிற்கிறதோ அவ்வாறே அதன் அணுகுமுறையும் தனித்தன்மையானது. இது மானிடவியல் வழக்கில் முழுதளாவியம் (holism) என்று சிறப்பாக வழங்கப்பெறும்.

## முழுதளாவிய அணுகுமுறை

மனிதனைப் பற்றிய அறிவியலே மானிடவியல் எனக் கூறுவது ஒருவகையில் சரியாகவும், வேறொரு வகையில் குழப்பமாகவும் இருப்பதாகச் சிலருக்குத் தோன்றும். இவ்வகைக் குழப்பத்திற்குக் காரணம் உண்டு. மனிதனைப் பற்றி ஆராயும் துறை மானிடவியல் எனப் பொருள் கொள்ளும் போது இதனை 'மனித அறிவியல்' என்று கூறுவது சரியாகத் தோன்றுகிறது. ஆனால், வேறு சில துறைகளும் மனிதனைப் பற்றி அறிவதால் இக்கூற்று குழப்பமாக உள்ளது. சமுதாய அல்லது நடத்தைசார் அறிவியல்களும் (social or behavioural sciences) சில இயற்கை அறிவியல்களும் (natural sciences) மனிதனைப் பற்றி ஆராய்கின்றன. எடுத்துக்காட்டாக, சமுதாயவியல் மனித சமுதாயத்தைப் பற்றி அறிகிறது. உளவியல் மக்களின் நடத்தை முறைகளை அறிகிறது. அரசியல் மக்களின் ஆட்சிமுறை, அதிகார முறை, சட்டம், ஒழுங்கு முறைகள் முதலானவற்றை ஆராய்கிறது. பொருளியல் மக்களின் உற்பத்திமுறை, பங்கீட்டு முறை, விற்பனை முறை, நுகர்வு முறை, தொழிற் பகுப்பு (division of labour) போன்றவற்றை ஆராய்கிறது. தொல்லியல் முன் வரலாற்றுக் கால மனிதனின் வரலாற்றை ஆராய்கிறது. மருத்துவவியல், விலங்கியல் ஆகிய துறைகள் மனிதனின் உடற்கூறுகளையும் உடலியக்கத்தையும் ஆராய்கின்றன. மேற்கூறிய பல் துறைகள் மனிதனைப் பற்றி அறிவதால் மானிடவியலை மட்டும் 'மனித அறிவியல்' எனக் கூறுவது ஏன்? என்ற குழப்பம் எழுகிறது. அதனால் நடத்தை சார் அறிவியல்

1Clyde Kluckhohn, *Mirror for Man* (New York: McGraw Hill, 1949), pp. 2-3.

2Alfred L. Kroeber, *Anthropology* (New York . Harcourt Brace, 1948), Chapter I.



துறைகளிடமிருந்தும், மருத்துவம் போன்ற அறிவியல் துறைகளிடமிருந்தும் மானிடவியல் எவ்வாறு 'மனித அறிவியல்' என்னும் தனித்துவத்தைப் பெற்று விளங்குகிறது என்பதும், இதன் அணுகுமுறை எவ்வாறு முழுதளாவிய அணுகுமுறையாக (holistic approach) உள்ளது என்பதும் ஒருவரது முறைப்படியான வினாக்களாகும்.

மானிடவியல் மேற்கூறிய அனைத்துத் துறைகளையும் கடந்து நிற்கிறது. அதற்குக் காரணம் அவ்வனைத்துத் துறைகளின் ஆய்வுப் பரப்பையும் ஒருங்கிணைந்த நிலையில் இது கொண்டுள்ளதே யாகும். இத்துறை இடம், காலம் அனைத்தையும் கடந்து மனிதனை விலங்காகவும், சமுதாயத்தினராகவும் (social being) ஆராய்கிறது. அதாவது, மானிடவியலின் ஒரு பிரிவு ஒருமனிதனை உயிரியல்சார் (biological) நிலையில் ஆராய்கிறது. மனிதனின் மூதாதையர்களான உயர்பாலூட்டிகளின் படிமலர்ச்சி (primate evolution) நிலைகள் என்னென்ன? மனிதன் முதன் முதலில் எங்கு, எப்போது, எவ்வாறு தோன்றினான்? அவன் எவ்வாறெல்லாம் வளர்ச்சி பெற்று வந்துள்ளான்? அவனது படிமலர்ச்சி நிலைகள் என்னென்ன? மனிதர்களுக்குள் நிறத்தாலும் உடற் பண்புகளாலும் ஏன் ஏராளமான வேறுபாடுகள் உள்ளன? இவ்வகை மரபுப் பண்புகளை எவை அறுதியிடுகின்றன? பல்வேறு இனங்களாக (races) வேறுபட்டுள்ளதால் அவர்களுக்கிடையே உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற பாகுபாடு உள்ளதா? போன்ற பல நிலைகளில் இப்பிரிவு ஆராய்கிறது.

மானிடவியலின் மற்றொரு பகுதி மனிதனைச் சமுதாய விலங்காக எடுத்துக்கொண்டு அவனைப் பண்பாட்டு (cultural) நிலையில் ஆராய்கிறது. இப்பிரிவு உலகின் மூலை முடுக்குகளிலும் வெளி உலகத்திலிருந்து அறவே துண்டிக்கப்பட்ட தனித்த பகுதிகளிலும் வாழும் பழங்குடிகளின் பண்பாட்டையும், காலங்காலமாகச் சிற்றூர்களில் வாழ்ந்து வரும் ஊரக மக்களின் பண்பாட்டையும், தொழில் துறையில் மேம்பட்ட நகர மக்களின் பண்பாட்டையும் ஆராயும் பெரும் பரப்பினைக் கொண்டுள்ளது. இவை தவிர, இப்பிரிவின் ஆய்வுப் பரப்பு மேலும் விரிந்து நிற்கிறது. எண்ணற்ற நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோன்றிய மனிதனின் பண்பாடு எங்கெங்கு எவ்வாறெல்லாம் மலர்ச்சியடைந்து வந்துள்ளது? இன்று நூற்றுக்கும் மேற்பட்ட வகைகளில் சமுதாயங்கள் வேறுபட்டிருக்கக் காரணம் என்ன? அவற்றிற்குள் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன? அவற்றின் முறைகள் என்ன? சமுதாயப் பண்பாட்டு முறைகளில் பழக்க வழக்கங்கள் ஒருவருக்கொருவர் ஒத்தில்லாதது ஏன்? மக்களின் சமய

நம்பிக்கைகள், கலைகள், குடும்பம், திருமணம், அரசியல் முதலானவை பல்வேறு வகைகளில் ஏன் மாறுபட்டுக் கிடக்கின்றன? அவற்றின் செயற்பாடுகள் என்ன? போன்ற பல நிலைகளில் இப்பிரிவு ஆராய்கிறது.

மானிடவியலின் அடுத்த நிலை வரலாற்றுக்கும் முற்பட்ட காலத்தில் (prehistoric period) வாழ்ந்த மக்களின் பண்பாட்டை மீட்டுருவாக்கம் செய்வதாகும். கற்காலங்களிலும் அதற்கு முன்னரும் மக்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டெடுத்து அங்கு அகழாய்வு செய்து அம்மக்களின் புதைபடிவங்களையும் பிற பண்பாட்டு எச்சங்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டை ஆராய்வது இதிலடங்கும்.

மனிதனின் பண்பாட்டை ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொண்டு ஆராய்ந்தாலும் மொழியியல் கூறுகள் பண்பாட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பதால் இது பற்றிய அறிவினைத் தனி நிலையில் நின்று ஆராய்வதிலும் மானிடவியல் கவனம் செலுத்துகிறது.

மேற்கூறிய நான்கு நிலைகளின் வாயிலாகப் பெறப்படும் அறிவு மானிடவியலுக்கு நான்கு வலுவான பரிமாணங்களை ஏற்படுத்திக் கொடுக்கிறது. அதாவது, மனிதனைப் பற்றி அறியும் பிற துறைகளிடமிருந்து மானிடவியல் எவ்வாறு தனித்துவம் பெறுகிறது என்பது அதன் நான்கு பரிமாணங்களில் அடங்கியுள்ளது. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் வெளி உலகத்தைப் பற்றி ஒருவர் முழுமையாக அறிய வேண்டுமாயின் அவர் நான்கு திசைகளிலும் சென்று சுற்றி வருவது எவ்வளவு முக்கியமானதோ, அவ்வாறே மனிதனைப் பற்றி முழுமையாக அறிய வேண்டுமாயின் அவனை நான்கு பரிமாணங்களில் அறிய வேண்டியது அவசியம். அவை:

1. கடந்த கால மனிதனை அறிவது.
2. நிகழ்கால மனிதனையும் வருங்கால மனிதனையும் அறிவது.
3. மனிதனை உயிரியல்சார் நிலையில் அறிவது.
4. மனிதனைப் பண்பாட்டு நிலையில் அறிவது.

இந்நான்கு வகையுரன பரிமாணங்களில் மனிதனை ஆராயும் ஒரே துறையாக மானிடவியல் விளங்குகிறது. வேறு எந்தத் துறையும் இந்நான்கு நிலைகளில் ஆராய்வதில்லை. தொல்லியலார் கடந்த கால மனிதனை ஆராய்வதில் மட்டுமே ஆர்வங் கொண்டுள்ளனர். சமுதாயவியலார், உளவியலார், பொருளியலார்,



அரசியலார் போன்றோர் நிகழ்கால மனிதனை அவரவர் ஆய்வுப் பரப்பிற்கேற்ப மட்டுமே ஆராய்கின்றனர். உடற்கூற்றியலாரும் (anatomists), உடலியங்கியலாரும் (physiologists) மனிதனின் உயிரியல் கூறுகளை அவரவர் தேவைக்கேற்ப மட்டுமே ஆராய்கின்றனர். மனிதனின் பண்பாட்டுக் கூறுகளையும் வருங்காலத்தைப் பற்றியும் முழுமையாக அறிவதில் பிற துறையினர் ஆர்வங்காட்டவில்லை. இந்நான்கு பிரிவுகளையும் ஒருங்கிணைந்த நிலையில் ஆராயும், போக்கை மானிடவியல் பெற்றுள்ளது. இதற்காக இத்துறையானது படிமலர்ச்சியில், உயர்பாலூட்டியியல், மரபியல், இனவியல் தொல்லியல், புதைபடிவவியல், மொழியியல், சமயம், கலை, பொருளியல், அரசியல் போன்ற எண்ணற்ற உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

மானிடவியலார் மேற்கூறிய அனைத்துப் பிரிவுகளின் செய்திகளையும் ஒன்றாகத் தொகுத்து அவற்றை முறைப்படியாக உய்த்துணர்ந்து மனிதனைப் பற்றி முழுமையாகப் புரிந்து கொள்ள முயலுகின்றனர். எடுத்துக்காட்டாக, பழங்காலத்தில் வாழ்ந்த மக்களைப் பற்றி அறிவதற்கு இன்று மிகவும் தனித்த பகுதிகளில் வாழும் தொன்மைக் குடியினரை (primitive people) ஆதாரமாகக் கொள்கின்றனர். அதன்பின் அம்மக்களிடமிருந்து இக்கால நகர மக்கள் எந்த அளவு வளர்ச்சியடைந்துள்ளனர் என்பதையறிய இவ்விருவரையும் ஒப்பிட்டு இவர்களுக்கிடையே உள்ள வளர்ச்சி நிலைகளைக் காண்கின்றனர். அதனாலேயே மானிடவியல் இடம், காலம் அனைத்தையும் கடந்ததாக விளங்குகிறது. இது ஒரு குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்களை மட்டும் ஆராயும் பிரிவு என்றில்லாமல் தனித்த பகுதிகளில் வாழும் பழங்குடி மக்கள் முதல் தொழில்மயமான பகுதிகளில் வாழும் நகர மக்கள் வரை ஆராய்கின்றது. அதே போன்று, ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மனிதனை மட்டும் ஆராயாமல், பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித மூதாதையர்களின் புதைபடிவங்கள் முதல் இன்றைய மனிதன் வரை ஆராய்கிறது. மேற்கூறிய அனைத்துக் கருத்துகளையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது மானிடவியல் மனிதனைப் பற்றிய ஒரு முழுமையான அறிவியல் என்பதும், இதன் அணுகுமுறையானது முழுதளாவிய அணுகுமுறை என்பதும் தெளிவாகும்.

## மானிடவியலின் உட்பிரிவுகள்

மானிடவியலின் பரப்பு கடலென விரிந்ததாகையால் அதில் ஈடுபடும் மானிடவியலார் அவரவர் விருப்பத்திற்கேற்ப ஒரு குறிப்பிட்ட பரப்பை மட்டும் முதன்மையாக எடுத்துக் கொள்கின்றனர். சிலர் மனிதனின் உயிரியலை அறிவதில்

Scanned by TapScanner

# பண்பாட்டு மானிடவியல்

உலகம் முழுவதும் எண்ணிலடங்கா வகைகளில் பரவி வாழும் சமுதாயங்களின் பண்பாட்டைக் காலப் பரிமாணங்களுடன் ஆராயும் மானிடவியல் பிரிவே பண்பாட்டு மானிடவியலாகும். இந்நூல் பண்பாட்டு மானிடவியலைப் பற்றியதாகையால் இதுபற்றி விளக்கமான அறிமுகம் ஏதுமில்லாமல் இதன் உட்பிரிகளைக் காண்போம்.

பண்பாட்டு மானிடவியலின் உட்பிரிவுகளில் தொல்லியல், மொழியியல் ஆகிய பிரிவுகள் சேர்க்கப்பட்டாலும் இதன் தலையாய பிரிவுகள் இனக்குழுவியல் (ethnography), இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) ஆகிய இரண்டு மட்டுமே.

பண்பாட்டை ஆய்வுப் பரப்பாக எடுத்துக் கொண்டு ஆராய முற்பட்ட தொடக்ககால ஆங்கிலேய, அமெரிக்க அறிஞர்களின் அணுகுமுறைகளில் வேறுபாடுகள் ஏற்பட்டதால் இப்பிரிவு பண்பாட்டு மானிடவியல், சமுதாய மானிடவியல் (social anthropology) என இரு பெரும் பிரிவுகளாகப் பாகுபடுகிறது. பண்பாட்டு மானிடவியலார் அமெரிக்க மானிடவியல் மரபினைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் துறை அமெரிக்க மானிடவியல்' (பண்பாட்டு மானிடவியல்) என்றும் வழங்கப் பெறும். சமுதாய மானிடவியலார் ஆங்கிலேய மானிடவியல் மரபைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களின் துறை ஆங்கிலேய மானிடவியல்' (சமுதாய மானிடவியல்) என்றும் வழங்கப்பெறும். இவ்விரு பிரிவுகளுக்குள் உள்ள வேறுபாடுகளை இங்குக் காண்போம்.

## பண்பாட்டு (அமெரிக்க), சமுதாய (ஆங்கிலேய) மானிடவியல்

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலும் ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலும் அதனதன் அணுகுமுறைகளில் வேற்றுமையைக் காட்டிலும் ஒற்றுமையையே மிகுதியாகப் பெற்றுள்ளன. இவ்விரு நாடுகளைச் சேர்ந்த வருகைப் பேராசிரியர்கள் அவர்கள் செல்லும் நாட்டிலுள்ள பல்கலைக்கழகம் பேராசிரியர்களின் ஆய்வு முறைகளை ஏற்றுக்கொள்ள முற்பட்டனர். அதனால் இரு நாட்டினரின் அணுகுமுறைகள் ஒன்றையொன்று வளம்பெறச் செய்தன. அமெரிக்காவில் இன்றுள்ள மானிடவியல் மாணவர்கள் தொன்மைக்கால அமெரிக்க மானிடவியலறிஞர்களான போவாஸ், லோவி அல்லது குரோபர் போன்றோரின் நூல்களைப் படிப்பதைக் காட்டிலும் இக்கால ஆங்கிலேய மானிடவியலாரின் நூல்களை விரும்பிப் படிக்கின்றனர். இருப்பினும் இவ்விரு நாட்டின் மானிடவியலானது வரலாற்றுக் கால வளர்ச்சியில் பெற்றிருந்த வேறுபாடுகளைப் போன்றே இன்றும் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைப் பெற்றுள்ளது.

## அமெரிக்க மானிடவியல்

அமெரிக்க மானிடவியல் அதற்கே உரிய தன்மையைப் பெறுவதற்குப் புத்துலகத்தில் பரவி வாழ்ந்த திணைக்குடிகள் பல வழிகளில் காரணமாயிருந்தனர். ஐரோப்பியர்கள் அமெரிக்கப் புத்துலகப் பகுதிகளுக்குச் சென்று குடியேறியது முதற்கொண்டே அமெரிக்க இநதியர்களைப் பற்றி அறிந்து கொள்வதில் ஆவலுடையவர்களாய் இருந்தனர். இதில் முழுநேர மானிடவியலாரும், ஓய்வு நேரத்தில் பயில்வோரும், மேம்போக்காக மானிடவியல் அறிவினைப்பெற விரும்பியோரும் ஈடுபட்டனர். அமெரிக்க இந்தியர்களின் தோற்றம், இடப்பெயர்ச்சி, ஐரோப்பியர்களின் தொடர்புக்குப்பின் ஏற்பட்ட மாற்றங்கள் ஆகியவற்றை ஆராய வேண்டுமென இவர்கள் விரும்பினர். இப்பெரும் ஆய்வுப் பரப்பு அமெரிக்க இனக்குழு ஒப்பாய்வியலுக்கு மிகுந்த வளர்ச்சி உண்டென்பதை உறுதிப்படுத்தியது. அமெரிக்க இந்தியர்களைப் பற்றி ஆராய வேண்டுமென்ற ஆர்வம், வரலாற்றிலும், வரலாற்றுக்கு முற்பட்ட கால வரலாற்றிலும் ஆர்வங் கொண்டதாகும். இந்நிலையில் அமெரிக்க மானிடவியலின் தந்தை பிரான்ஸ்போவாஸ் தொடக்கக் காலத்தில் புவியியல் ஆய்வுகளோடு மிகவும் தொடர்பு பெற்றிருந்தார். அதோடு டில்தேயின் (Dilthey) தாக்கத்தைப் பெற்றிருந்ததால் அவர் இடம் - காலம் (time and space) உள்ளிட்ட ஆய்வுகளையே மேற்கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மிகவும் உறுதியாய் இருந்தார். அந்த ஆய்வுப் போக்கையே தம் மாணவர்களுக்கும் கற்பித்தார்.

அமெரிக்காவில் மானிடவியல் ஒரு முழுநேரக் கல்வித் துறையாக வளர்ச்சி பெற்ற காலத்தில், அமெரிக்க இந்தியர்கள் கடந்த காலத்தில் கொடுமைப்பட்டிருந்ததைப் போன்றே அப்போதும் பல கொடுமைகளாலும் அடக்கு முறைகளாலும் துன்புற்றிருந்தனர் அமெரிக்க மானிடவியலார் அவர்களின் நிலையை முதன்முதலில் கண்ட போது அவர்கள் ஒருகாலத்தில் செல்வரக்குடனும் பாதுகாப்புடனும் வாழ்ந்து அப்போது சீர் குலைந்து அழிவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர் என்பதைத் தெளிவாக உணர்ந்தனர். அமெரிக்க மானிடவியல் வளர்ச்சி பெற்ற காலம், அங்குச் சிறுபான்மையினருக்கும் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் அறிவார்ந்த நிலையில் தாராளப்போக்குடன் ஏதாவது செய்ய வேண்டும் என்ற

Scanned by TapScanner

...வர் ப...
...ளிக்...
...மா பாரம்பரிய...
...ஆராவமுது அவ்வ...
...செய்வதற்கு வழி...
...ஓர் காரணம்...
...ரவியல் நூல்கள்...
...குறிப்பேடுகள், வெ...
...னத்து இனக்குழு வரலாற...
...பயன்படுத்தி அம்மக்களின்
...னர். மேலும் நிகழ்வுகளை
...மாற்றமடைந்த...
...மொழிக்கூறுகளையும்
...மொழியாளர்களைப் பற்றிய
...இந்தியர்களுடன் அதன
...ல் அமைந்தது.

...ஆராயும்போது அதன்
...மலிட்டுத் தன்மையை
...கம்பினார். ஒவ்வொரு
...ந்து நிகழ்வுகளையும்
...கொண்டே ஒட்டு
...வாற்றுக் காலத்தில்
...ம் பிற கூறுகளின்
...ன்றும் போவாஸ்
...னின் இயக்கத்தில்
...கு பெற்றுள்ளன
...மையை விளக்க
...ப் பின்னணியை
...அவசியமாகிறது.
...டியும் என்னும்
...வாற்றுத் தனி
...த்தால். அவர் .

...ஆ...
...வெ...
...பல...
...அ...
...புது...
...ஆய்...
...மூடி...
...முய...
...முதலா...
...எதாவ...
...அவர்கள்...
...கொண்டு...

45 Melv...
p.49.
ப.மா.தி.

Scanned by TapScanner

ஆய்வுகளைக் குறுக்கிவிடாமல் பரந்த நிலையில் மேலும் மேலும் ஆராய முனைந்த வேகமே அமெரிக்க மானிடவியலின் தனித்தன்மையாக அமைந்துவிட்டது.

அமெரிக்க மானிடவியலானது உடல்சார் மானிடவியல், இன ஒப்பாய்வில், தொல்லியல்,* மொழியியல் ஆகிய பிரிவுகளைப் 'பண்பாடு' என்னும் கோட்பாட்டின்கண் ஒன்றிணைத்துப் புதிய முறையியலுடன் ஒரு முழுதளாவிய, விரிவான துறையாக வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

**ஆங்கிலேய மானிடவியல்**

அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியலைக் காட்டிலும் இங்கிலாந்தில் வளர்ச்சி பெற்ற சமுதாய மானிடவியல் அதன் பரப்பை ஓரளவு கட்டுப்படுத்திக் கொண்ட துறையாகும். ஆனால், மிகவும் ஆழ்நிலையிலான ஆய்வுப் பரப்பைக் கொண்டதாகும். அதன் அணுகுமுறை முழுதளாவிய நிலையிலும் மிகவும் ஆழ்நிலையிலும் அமைந்தது. மாலினோவ்ஸ்கியைத் தவிர அனைத்து ஆங்கிலேய மானிடவியலாரும் அமெரிக்கர்கள் பயன்படுத்தும் 'பண்பாடு' என்னும் கோட்பாட்டை எளிதில் கையாள முடியாது எனக் கருதினர். அதனால் அவர்களின் ஆர்வம் சமுதாயக் குழுக்களையும், சமுதாய உறுப்பினர்களிடையே காணப்படும் நிலையான பங்குகளையும் (roles) உறவுகளையும் ஆராய்வதில் மிகுதியானது. அதனாலேயே ஆங்கிலேய மானிடவியல் பெரும்பாலும் 'சமுதாய-மானிடவியல்' எனக் குறிக்கப்படும்.

இக்காலச் சமுதாய மானிடவியலின் தந்தையான ராட்கிளிஃப் பிரௌன் சமுதாய மானிடவியலைப் பின்வருமாறு குறிப்பிடுவார். சமுதாய மானிடவியலானது தொன்மைக்குடியினர், பழங்குடியினர், எழுத்தறிவில்லாதார் போன்றோரின் சிறு சமுதாயங்களை முறைப்படியாக ஒப்பிட்டு ஆராய்ந்து அதன்மூலம் மனித சமுதாயத்தின் தன்மையையும் அமைப்பையும் கொள்கை சார்ந்த அளவில் விளக்க முற்படும் அறிவியலாகும்.[46]

சமுதாய மானிடவியலார் சமுதாய உறவுகளைப் (social relations) படிப்பதையே முதன்மையான ஆய்வுப் பரப்பாகக் கொண்டுள்ளனர். குறிப்பாக, குடும்பம், உறவுமுறை, வயது அடிப்படைக் குழுக்கள் (age groups), அரசியல் அமைப்பு, சட்டம், சமயம், பொருளாதாரச் செயல்கள் போன்றவற்றை ஆராய்வர். அவை அனைத்தையும் 'சமுதாய அமைப்பு (social structure) என்ற

46 A.R. Radcliffe - Brown, *Method in Social Anthropology*, op. cit., pp. 133 - 38.



பெருந்தலைப்பின் கீழ் ஆராய்கின்றனர். சமுதாய அமைப்பின்கீழ் உள்ள கூறுகளை ஆராயும்போது ஓர் அமைப்பின் கூறுகள் மற்றவையோடு எவ்வாறு சார்புடையதாக உள்ளது என்றும், அது அச்சமுதாய அமைப்பில் எவ்வாறான உறவைப் பெற்றுள்ளது என்றும் விவரிப்பதில் மிகுந்த ஆர்வங் காட்டுகின்றனர். அவ்வகையான ஆய்வுகளில் சமுதாயத்தின் கடந்த கால வரலாறு பயன்படுத்தப்படுவதில்லையாதலால் சமுதாய மானிடவியல் வரலாற்று அணுகுமுறையைச் சாராதது (non - historical). அமெரிக்கப் பண்பாட்டு மானிடவியல் இதற்கு நேர்மாறானது என்பதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆங்கிலேயரின் சமுதாய மானிடவியலில் ஒப்பீட்டு முறை (comparative method) உயிர் மூச்சாக உள்ளதால் இத்துறை சில வேளைகளில் 'ஒப்பீட்டுச் சமுதாயவியல்' (comparative sociology) என்றும் கூறப்பெறும்.[47] ஆங்கிலேயச் சமுதாய மானிடவியலின் தனித்தன்மைக்கு அதன் வரலாற்றுக் கால வளர்ச்சியே காரணமாகும்.

ஆங்கிலேய மானிடவியலாரின் அணுகுமுறைகள் அவர்களது பேரரசுக் கொள்கையின் தேவைகளை நிறைவு செய்வதாக அமைந்தன. இருப்பினும், ஆட்சியாளர்களின் அனைத்துத் தேவைகளுக்கும் இந்த அணுகுமுறை வேண்டும்போதெல்லாம் பயன்படுத்தப்பட்டது என்றோ அதற்காகவே ஏற்படுத்தப் பட்டதென்றோ கூறமுடியாது. ஆனால், ஆங்கிலேய மானிடவியலார் திணைக்குடிகளின் சமுதாயக் கட்டமைப்பை ஆராய்வதில் பெருமளவு ஈடுபட்டனர். அவர்கள் சொந்த நாட்டிலும் அவர்களின் பேரரசு பரவி இருந்த நாட்டிலும் சென்று ஆய்வு செய்தனர். புத்துலகப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடிகள் அற்றுப்போகும் நிலையிலிருந்தனர். ஆனால் குடியேற்றப் பகுதிகளில் வாழ்ந்த திணைக்குடியினர் அழியும் தருவாயிலில்லை. அவர்களின் மக்கள்தொகை பெரும்பாலும் பெருகிக் கொண்டேயிருந்தது. அதனால் அவர்களைத் தம் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டுமென்ற எண்ணமே குடியேற்ற அரசு அதிகாரிகளுக்கு இருந்தது. அரசின் அவ்வகையான கொள்கை மானிடவியலாரிடையே பெருகி நின்ற ஆய்வு வேட்கைக்கு ஏற்றதாக அமைந்தது. குறிப்பாக, திணைக்குடியினர் எவ்வாறு ஓர் அமைப்பாக உள்ளனர், 'எக்கூறுகள் அவர்களை ஒன்றாக வைத்துள்ளது போன்ற சமுதாய அமைப்புப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டனர். குடியேற்ற அரசுகள் திணைக்குடிகளை வளர்ச்சிக்கு உட்படுத்தாமல் ஒரே நிலையாக வைத்திருந்தது என்ற கருத்தை மானிடவியலார் கூறத் தவறியதில்லை. இருப்பினும், ஒரு

47 Ibid, pp. 108 - 10.

...தை மட்டும் ஆய்வறுக்கு எடுத்துக் கொண்டு செயற்பாட்டியல் (functionalism) அணுகுமுறையில் ஆராய இந்நிலை மிகவும் உகந்ததாக இருந்தது. அதனாலேயே ஆங்கிலேய மானிடவியல் செயற்பாட்டியல் சார்ந்ததாக வளர்ச்சிபெற்றது.

இங்கிலாந்து மானிடவியலின் கல்விசார் துறை பரந்து விரிந்த நிலையில் இல்லாமல் ஓரளவு குறுகிய நிலையினைக் கொண்டதாகும். மானிடவியலில் உயர்கல்வி அளிக்கும் நிறுவனங்களின் எண்ணிக்கையையும், உயர் கல்விக்கடுத்துச் செல்ல வேண்டிய பணியிடங்களின் வாய்ப்பையும், துறையின் விரிவாக்கத்தையும் நோக்கினால் அமெரிக்காவைவிட இங்கிலாந்தில் அதன் அளவு குறைவாகும். இங்கிலாந்துப் பல்கலைக் கழகங்களில் பணியிடங்கள் குறைவாக உள்ளது போன்றே கல்விசார் நிலையிலும் பல வேறுபாடுகள் உள்ளன. பெரும்பாலான இங்கிலாந்துப் பல்கலைக்கழகங்களில் பேராசிரியர்களுக்கு இணையாகப் பலர் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஒரு துறையில் முதியோர்கள் பணி விலகும்போது மட்டும் நிரப்பப்படும் பணியிடங்களும் விலகிச் செல்வோரின் ஆலோசனையின்பேரில் அவர்களுக்குப்பின் அந்தப் பதவியை ஏற்பவர் யார் என முடிவு செய்யப்படுகின்றது. அதனால் இளம் ஆய்வாளர்கள் பொறுப்பிலுள்ளோரைத் திருப்திப்படுத்தும் வகையில் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. அதோடு முதியோர்கள் ஈடுபடாத புதிய ஆய்வுப் பரப்புகளில் ஈடுபடுதலும் கூடாது.[48]

இந்நிலையில் அமெரிக்க மானிடவியலின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தது அதன் அணுகுமுறை புதியதாகவும், ஆய்வுகள் தனித்தன்மையானதாகவும், புதிய கோணத்தைக் கொண்டதாகவும், செய்த ஆய்வுகள் சோதித்துப் பார்ப்பதாகவும் அமைந்ததேயாகும். ஆனால் இங்கிலாந்து மானிடவியலின் அணுகுமுறையில் பழைய சிக்கல்களை மீண்டும் மீண்டும் ஆய்வு செய்தல், பழைய கொள்கைகளை மீண்டும் விரிவாக ஆராய்ந்து விளக்குதல் போன்றவையே பெரும்போக்காக அமைந்தன. அவையே அவர்களின் சாதனையாகவும், சிறப்பிடம் பெறுவதற்கான முறையாகவும் கருதப்பட்டன. அவ்வகையான நிலைக்கு ஆங்கிலேய அரசும் ஒரு வகையில் பொறுப்பாகும்.

ஆங்கிலேய அரசின் தேவைகளை உடனுக்குடன் நிறைவு செய்ய வேண்டியிருந்ததால் ஆங்கிலேய மானிடவியலில் சமுதாயக் குழுக்களைப் பற்றி அறிவதையே மேலும் மேலும் விரிவாக்க வேண்டியிருந்தது. அதோடு வேலை வாய்ப்பில் குறைவான

48 Ibid, pp. 79 - 80.

இடங்களே இருந்ததாலும், முதிய மானிடவியலாரைத் திருப்திப்படுத்தும் முறையில் இளையவர்கள் நடந்து கொள்ள வேண்டியிருந்ததாலும் புதிய பரப்புகளில் ஆய்வுகள் பெருகவில்லை. அதன் விளைவாக ஆங்கிலேய மானிடவியலார் உறவுமுறை ஆய்வுகளிலும், சமுதாய அமைப்புப் பற்றிய ஆய்வுகளிலும் மிகவும் ஆழ்நிலையில் ஆராய்பவர்கள் என்ற பெயருக்கு இலக்கணமானவர்களாய்த் திகழ்ந்தனர். அதனால் அவர்கள் பண்பாட்டு வரலாற்றியல் ஆய்வுகள், பண்பாட்டிடை நிலையில் உளவியல் ஆய்வுகள் முதலானவற்றைப் பெருமளவு ஒதுக்கிவிட்டனர்.[49] இங்கிலாந்தில் மானிடவியல் துறைகளில் உடல்சார் மானிடவியல், தொல்லியல் ஆகிய பிரிவுகள் சேர்க்கப் படாமல் அவை உயிரியல் போன்ற துறைகளில் சேர்க்கப் பட்டுள்ளன அல்லது தனித்துறைகளாக இயங்குகின்றன. அவ்வாறே அமெரிக்க மானிடவியலுக்கென்ற ஆய்வுப் பரப்புகளிலும் ஆங்கிலேயர்கள் ஆய்வுகள் மேற்கொள்வதைத் தவிர்த்து வந்தனர். இன்றும் இங்கிலாந்தில் சமுதாய மானிடவியலின் தனித்தன்மை பெருமளவு காக்கப்பட்டு வருகிறது.

சமுதாய மானிடவியல், பண்பாட்டு மானிடவியல் ஆகிய இரண்டும் தனித்தனி நிலையில் காணப்பட்டாலும் அவை இனவரைவியல், இனஒப்பாய்வியல் ஆகிய இரு உட்பிரிவுகளின் அடித்தளத்தின் மீது செயல்படுகின்றன.

## இனவரைவியல்

சமுதாயப் பண்பாட்டு மானிடவியலுக்கு அடித்தளமாகத் திகழ்வது இனக்குழுவியலேயாகும். 'இனக்குழுவியல்' என்னும் பொருளுடைய 'ethnography' என்னும் ஆங்கிலச் சொல் 'ethnos', 'graphein' ஆகிய கிரேக்கச் சொற்களின் மூலங்களைப் பெற்றது. 'ethnos' என்பதற்கு இனம் (race), இனக்குழு (ethnic group), மக்கள் (people) என்பது பொருள். 'graphein' என்பதற்கு 'எழுதுவது' அல்லது 'வரைதல்' (to write) என்பது பொருள். ஆகவே இனவரைவியல் என்பது ஒரு தனிப்பட்ட இனக்குழு அல்லது மக்களைப் பற்றி எழுதுதல் என்னும் பொருளை உணர்த்துகிறது. ஒரு இனக்குழுவைப் பற்றிய முழுமையான படிப்பு என்னும் வகையில் இப்பிரிவை 'இனக்குழுவியல்' என்றும் கூறலாம்.

சமுதாயப் பண்பாட்டு மானிடவியலார் சமுதாயத்தின் அமைப்பையும், பண்பாட்டின் அமைப்பையும் புரிந்து கொள்வதில் ஈடுபட்டுள்ளதால் அவர்கள் மக்கள் வாழுமிடங்களை

49 Ibid, pp. 79-80.

ஆய்வுக்கூடங்களாக ஏற்றுக் கொள்கின்றனர். ஆய்வுக் களத்தில் ஒவ்வொரு மானிடவியலாரும் நேரடியாகப் பங்கு பெற்று அந்தந்தச் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளை முழுமையாகப் புரிந்து கொண்டு அதுபற்றிய செய்திகளை முறையாகத் தொகுப்பர். ஆகவே இனக்குழுவியல் என்பது ஒரு தனிப்பட்ட சமூகத்தின் பண்பாட்டை முழுமையாகப் புரிந்துகொண்டு அவற்றை முறையாகத் தொகுத்து வழங்குதலாகும்.

முதல் அத்தியாயத்தில் கூறியபடி, மனித சமுதாயங்களைப் பற்றிய செய்திகள் புத்தாய்வாளர்களாலும், பயணிகளாலும், சமயப்பரப்பிகளாலும் தொகுக்கப் பெற்றன. அவ்வகைச் செய்திகள் பல வகைகளில் போதுமானதாயிராததால் 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்ஸ் போவாஸ் போன்ற பயிற்சி பெற்ற மானிடவியலார் நேரடியாக மக்களிடம் சென்று ஆய்வுசெய்யத் தொடங்கினர்.

இக்கால இனவரைவியல் ஆய்வுகள் அனைத்தும் மிகவும் பயிற்சி பெற்ற மானிடவியலாரால் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்கள் 'பங்கேற்று உற்றுநோக்கல் முறை' (participant observation), நேர்காணல் முறை, மக்களிடம் நல்லுறவை வளர்த்துக் கொள்ளும் முறை, எந்தெந்த நிகழ்வுகளை எவ்வாறு அணுகுவது போன்ற களப்பணி உத்திகளில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பர். சமுதாயப் பண்பாட்டு நிகழ்ச்சிகளை அகவய (emic), புறவய (etic) முறைகளில் நோக்கி அந்நிகழ்ச்சிகள் எந்தெந்தச் சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளோடு தொடர்பு பெற்றுள்ளன என்பதைக் கண்டறிந்து அவற்றை விருப்பு வெறுப்புக்கு இடமின்றி மிகச் சரியாக எழுதுவர். பண்பாட்டுக் கூறுகளின் உறவுகளைச் சரியாகப் புரிந்து கொள்வதும் அவற்றை நடுநோக்கில் விளக்குவதுமே இனக்குழுவியலின் தலையாய நெறியாகும். அதனாலேயே சமுதாயப் பண்பாட்டுக் கூறுகளின் உறவை ஆழ்ந்து நோக்கும் இனவரைவியலார் பொதுவாகச் செயற்பாட்டியல் பின்னணியில் அக்கூறுகளை உற்றுநோக்குவர்.

ஓர் அயற்பண்பாட்டை விளக்க முற்படும் எந்த ஒரு சிறந்த இனவரைவியல் தொகுப்பும் பின்வரும் முதன்மையான கூறுகளைப் பற்றி விளக்குவதாக அமையும். அவை : புவிச் சூழலியல் (topography), சுற்றுச் சூழல் (environment), காலநிலை (climate), குடியிருப்பு முறை (settlement pattern), பொருள்சார் பண்பாடு (material culture), குடும்ப அமைப்பு, திருமண முறை, உறைவிட முறை (residence pattern), வாழ்வியற் சடங்குகள், குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டுவயமாக்க முறை (enculturation); மக்களின் உளவியற் பாங்குகள், மணக்கொடை, மணவிலக்கு முறை, வாழ்க்கைப் பொருளாதாரம் (subsistence economy), தொழிற் பகுப்பு (division of labour), உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக்கட்டுப்பாடு, மரபுசார் சட்டங்கள் (customary laws), சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், அழகியற் சிந்தனைகள், வழக்காறுகள் (folklore), ஈமச்சடங்குகள், பிற தொடர்புடைய செய்திகள் முதலியன. அவ்வாறு தொகுக்கப்படும் செய்திகள் ஒரு தனிப்பட்ட சமூகத்தைப் பற்றியதாக இருப்பதால் இனவரைவியல் நூல்கள் அனைத்தும் 'தனிவரைவு நூல்கள்' (monographs) எனக் கூறப்பெறும்.

இனவரைவியல் ஆய்வு முற்றிலும் ஒரு தனிப்பட்ட இனக்குழுவைப் பற்றிய தரவாகையால் அவ்வகை ஆய்வுகளில் பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டு எழுதும் முறை தவிர்க்கப்படும். அதோடு பெரும்பாலும் கொள்கைசார் விளக்கங்களும் இடம் பெறா. ஆனால், இனக்குழு ஒப்பாய்வியல் (ethnology) ஆய்வுகளில் எடுகோள்நிலை (hypothetical stage), பண்பாட்டிடை ஆய்வு (cross - cultural study), கொள்கை சார்ந்த விளக்கங்கள் முதலியன பெரும்பங்கு வகிக்கின்றன. எவ்வாறிருப்பினும் மானிடவியலின் கொள்கைசார் ஆய்வுகளிலும் ஒப்பீட்டு ஆய்வுகளிலும் ஈடுபடும் இனக்குழு ஒப்பாய்வியலுக்குத் தேவையான பலவகைப்பட்ட தரவுகளை அளிக்கும் களஞ்சியங்களாக இனக்குழுவியல் ஆய்வுகள் திகழ்கின்றன.

## இனஒப்பாய்வியல்

பல்வேறு இன மக்களைப் பற்றியும் அவர்களின் பண்பாட்டைப் பற்றியும், அவர்களின் வரலாற்றைப் பற்றியும் பண்பாட்டிடை நிலையில் அறியும் அறிவியலே இன ஒப்பாய்வியல் (ethnology) என்பார் குரோபர். இருப்பினும் இப்பிரிவின் பொருள் பல காலகட்டங்களில், பல நாடுகளில் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. இன ஒப்பாய்வியலின் பரப்பைச் சில வேளைகளில் விரித்துக் கூறும்போது இச்சொல் பண்பாட்டு மானிடவியல் என்னும் மொழித் தொடருக்கு இணைச் சொல்லாகவும் கூறப்பெறுகிறது. ஒன்றுக்கும் மேற்பட்ட பண்பாடுகளை ஒப்பீட்டு நோக்கிலும் வரலாற்று நோக்கிலும் ஆராயும் அறிவியலே இன ஒப்பாய்வியல் என்பது ஒரு வகையான வரையறை. வேறொரு வரையறையின்படி, மனித இனங்களை ஆராயும் அறிவியலே இனஒப்பாய்வியல் ஆகும். இத்துறை பண்பாடுகளை வரலாற்று நோக்கிலும் ஆராய முற்படுவதால் இதனைப்

வழக்குமுண்டு. இவ்வினைத்தும் கடந்த காலத்தில் வழங்கப் பெற்றவையாகும்.

அண்மைக் காலங்களில் இத்துறையின் பொருள் மிகத் துல்லியமாகவும் தெளிவாகவும் கூறும் நிலை உருவாகியுள்ளது. பண்பாடுகளைப் பற்றிய முறைப்படியான அறிவியலே இனஒப்பாய்வியல் என்னும் வரையறை இன்று அனைவராலும் பயன்படுத்தப்படுகிறது. இனஒப்பாய்வியல் ஆய்வுகள் ஒன்றுக்கும் மேற்பட்ட பண்பாடுகளை ஒப்பிட்டு ஆராய்வதால் அவை பண்பாட்டிடை ஆய்வுகள் (cross- cultural studies) எனச் சிறப்பாக வழங்கப்பெறும்.

ஒரு சமூகத்தைப் பற்றி முழுமையாகத் தொகுக்கும் 'இனவரைவியல்' செய்திகள் அச்சமூகத்தைப் பற்றி அறிய மட்டுமே உதவுகிறது. அவ்வாறு தனித்தனிச் சமூகங்களைப் பற்றிய இனவரைவியல் ஆய்வுகள் ஏராளமாகச் செய்த பின்பு ஒவ்வொரு சமூகமும் மற்றவையோடு ஒன்றுபட்டோ வேறுபட்டோ நிற்கும் நிலையினைக் காண முடியும். இந்நிலையில் அனைத்துச் சமுதாயங்களின் ஒருமித்த அமைப்பையும், வேறுபாட்டுத் தன்மையையும் கருத்தில் கொண்டு அனைத்துச் சமுதாயத்திற்குமான பொதுக் கொள்கைகள், விதிகள் ஆகியவற்றை வகுப்பதே இனக்குழு ஒப்பாய்வியலின் தலையாய நோக்கமாகும். மனித சமுதாயத்தைப் பற்றிய மானிடவியல் ஆய்வினைக் கொள்கைசார் நிலைக்குக் கொண்டு வருவது இனஒப்பாய்வியலே என்று கூறுவது மிகையல்ல.

இனஒப்பாய்வியலார் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைக் கொள்கையாக்கம் செய்ய முற்படும்போது பல பண்பாடுகளை ஒப்பிட்டு ஆய்வு செய்ய வேண்டியதாகிறது. இந்நிலையில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் அனைத்துப் பண்பாடுகளிலும் களப்பணி செய்து தரவுகள் பெற இயலாது என்பதால் ஆய்வாளர்கள் தம் சொந்த இனவரைவியல் தரவுகளோடு பிற இனக்குழுக்களைப் பற்றிய தனிவரைவு நூல்களையும் (monographs) அறிக்கைகளையும் (reports) ஆய்வுக்குப் பயன்படுத்துவர். இனஒப்பாய்வியல் கொள்கையாக்கம் சார்ந்த பிரிவாகையால் இத்துறை அறிஞர்கள், பெற்ற தரவுகளை ஒப்புமைப்படுத்துதல் (comparison), தொடர்புபடுத்துதல் (correlation), எடுகோள் (hypothesis) அமைத்தல், கருத்தியலாக்குதல் (abstraction), சோதனை செய்தல் (testing), பொதுமையாக்கம் செய்தல் (generalization) போன்ற தொடர்ச்சியான பலநிலைகளுக்கு உட்படுத்தி அதன் மூலம் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொருந்தும் கொள்கை சார்ந்த விளக்கங்களை வகுப்பர்.



இனஒப்பாய்வியல் கொள்கை சார்ந்த பிரிவாகையால் இனமானிடவியலில் இது ஒரு தனிப்பிரிவு என்றோ இனவரைவியலோடு தொடர்பற்ற பிரிவு என்றோ எண்ணக்கூடாது. இனவரைவியலையும் இனஒப்பாய்வியலையும் அவ்வளவு எளிதில் தனித்தனியாகப் பிரித்துக் காண்பது இயலாது. இனவரைவியல் தரவுகளின் அடிப்படையிலேயே இன ஒப்பாய்வியல் கொள்கை சார்ந்த விளக்கங்களை அல்லது ஒப்பீட்டு நிலையிலான விளக்கங்களைத் தேட முயல்கிறது. ஆனால், அதே நேரத்தில் இனஒப்பாய்வியலின் கொள்கைசார்ந்த அல்லது ஒப்பீட்டு நிலையிலான விளக்கங்கள் மூலம் பெறப்படும் புதிய உள்ஒளி (insight), வருங்காலத்தில் மேற்கொள்ளவிருக்கும் இனவரைவியல் ஆய்வுகளின்போது எவ்வாறான தரவுகளைப் பெற வேண்டும், எவற்றை மிகுதியாக உற்று நோக்க வேண்டும், எவ்வாறான உறவுகளை மேலும் ஆழ்நிலையில் புரிந்துகொள்ள வேண்டும் போன்ற களப்பணி ஆய்வு முறைகளுக்கு வித்திடுகிறது. களப்பணிக்குச் செல்லும்போது ஒருவர் கொள்கைசார்ந்த பிரிவில் பெற்றுள்ள பயிற்சியைப் பொறுத்தே அவரது களப்பணி விவரங்களின் தரம் அமையும். அந்த வகையில் இனஒப்பாய்வியல் இனவரைவியல் ஆய்வுகளுக்கு அடித்தளமாக விளங்குகிறது என்றும் கூறலாம்.

உண்மையில் சொல்லப் போனால் இனவரைவியலார், இனஒப்பாய்வியலார் என்ற தனித்தனி வகையினர் இல்லை. மானிடவியலைப் பயிலும் ஓர் இளைஞர் தொடக்கத்தில் சிறந்த முறையில் இனவரைவியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் தகுதியினைப் பெற்று, பின் படிப்படியாக இன ஒப்பாய்வியல் ஆய்வுகளை மேற்கொள்ளும் தகுதியினை வளர்த்துக் கொள்வார்.

இனஒப்பாய்வியலின் ஆய்வுகள் அதன் தன்மைக்கேற்ப 'சிறிய அளவு ஆய்வுகள்' (small-scale studies), 'பரந்த அளவு ஆய்வுகள்' (large scale studies) என்ற இருநிலைகளாகப் பாகுபடுகின்றன. முதல்வகை ஆய்வுகள் நுண்ணிலைக் கொள்கையாக்க (micro-theorizing) ஆய்வுகள் என்றும் இரண்டாம் வகை ஆய்வுகள் பருநிலைக் கொள்கையாக்க (macro-theorizing) ஆய்வுகள் என்றும் வழங்கப்பெறும்.[50] அது பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

50 James Cliffton, ''Ethnology" in Encyclopaedia of Anthropology ed. by Whitten and Whitten (New York : Harper & Row, 1976, P.150.

## சிறிய அளவு ஆய்வுகள்

இவ்வகை ஆய்வுகள் குறிப்பிட்ட சில சமுதாயங்களை எடுத்துக்கொண்டு அவற்றின் சமுதாயப் பண்பாட்டு மாறிகளுக்கிடையில் (sociocultural variables) உள்ள உறவினைப் புரிந்து கொள்ளவும், அதுபற்றிய கொள்கைசார்ந்த விளக்கங்களைக் காணவும் வகை செய்கின்றன. இவ்வாறான ஆய்வுகளில் ஆய்வுக்குரிய பொருள் மிகக் குறுகியதாக இருக்கும். அதோடு ஆய்வுக்கு ஈடுபடுத்தும் சமுதாயங்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும். இதனால் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளில் உள்ள உறவினைப் புரிந்து கொள்ளும்போது அடிப்படைத் தரவுகளையும், தேர்ந்தெடுத்துத் தொகுக்காமல் மிக விரிவான அளவில் பயன்படுத்தக்கூடிய தரவுகளையும் அப்படியே ஆய்வில் ஈடுபடுத்த முடிகின்றது. இவ்வாறு செய்வதால் ஆய்வுகள் மிகவும் பொருள் பொதிந்த பகுப்பாய்வாக (qualitative analysis) அமைகின்றன.

சிறிய அளவு ஆய்வுகளில் ஈடுபடும் இன ஒப்பாய்வியலார் அவர்களின் ஆய்வு விருப்பத்திற்கேற்ப சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளில் குறிப்பிட்ட சில பிரிவுகளை மட்டும் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆய்வில் ஈடுபடுவர். ஆய்வாளர்கள் பெரும்பாலும் உறவுமுறை, குடும்பமுறை, பொருளாதார அமைப்பும் தொழில்நுட்பமும், சட்டமும் சமூக ஒழுங்கும், பொருள்சார் பண்பாடு, மொழி, கலை, இசை, நடனம், வழக்காற்றியலும் தொன்மமும் (myth) போன்ற பழக்கப்பட்ட பிரிவுகளில் மிகுதியாக ஈடுபடுவர்.

சிறிய அளவு ஆய்வுகளில் ஈடுபடும் இன ஒப்பாய்வியலார் வரலாற்றுக் காலங்களில் ஒன்றுக்கொன்று தொடர்புடைய பலவகைகளில் ஒருமித்தப் பண்புகளையுடைய சமுதாயங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை ஒப்பிட்டு ஆராய்வதில் மிகுந்த ஆர்வங்காட்டுவர் அதற்குக் காரணம் அவ்வகைச் சமுதாயங்கள் பல வகைகளில் தொடர்புடையனவாக இருந்தாலும், ஒத்த பண்புகள் பலவற்றைக் கொண்டிருந்தாலும் அந்தந்தச் சமுதாயத்திற்கென்ற தனித்தன்மைகளைக் கொண்டுள்ளன என்பதேயாகும். ஒற்றுமையில் வேற்றுமையுடைய சமுதாயங்கள் எவ்வாறு அதன் பண்புகளை நிலைப்படுத்திக் கொள்கின்றன என்பதை அறிந்துகொள்ள முயல்வது என்பது ஒரு பண்பாட்டின் கட்டமைந்த உறவுகளை வெளிப்படுத்த முயல்வதாகும். ஒத்த பண்பாட்டுக் கூறுகள் அந்தந்தச் சமுதாயத்தில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை விளக்க முயல்வதாகும். அவ்வாறான ஆய்வுகள் ஒரு வகையில் அதன் பண்பாட்டு வரலாற்றை அறிவதற்கும் வகை செய்கின்றன.



சமுதாயங்களுக்கிடையில் நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளை வெளிப்படுத்துவதிலும் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளை அலசிப் பார்ப்பதிலும் அறிஞர்கள் செயற்பாட்டியல் அல்லது காரண காரியத் தொடர்பு முறையில் (functional or causal relationships) மிகவும் நம்பிக்கைக் கொண்டுள்ளனர். ஏனெனில், அவையே பண்பாடுகளுக்கிடையில் நிலவும் ஒற்றுமை வேற்றுமைகளுக்கான காரணத்தைத் தெளிவுபடுத்துகின்றன.

சிறிய அளவு ஆய்வுகளுக்கு மிகச் சிறப்பானதோர் எடுத்துக்காட்டைக் கூறவேண்டுமானால் ஆப்பிரிக்காவில் நான்கு பழங்குடிச் சமுதாயங்களில் காணப்படும் சூனியமுறையை (witchcraft) விவரிக்கும் எஸ்.எஃப். நேடலின் ஆய்வைக் (1960) கூறலாம். இந்நான்கு தொடர்புடைய சமுதாயங்களில் சூனியமுறை எவ்வாறு வெவ்வேறு சூழல்களில் செயல்படுகிறது என்பதை நேடல் விளக்குகிறார். டபள்யு. எம். வொயிட்டிங் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட ஆறு பண்பாடுகளில் குழந்தை வளர்ப்பு முறை என்னும் ஆய்வு இவ்வகையைச் சேர்ந்ததே இவ்வாறான ஆய்வுகள் மூலம் கட்டமைந்த சமுதாய அமைப்பையும், அதன் இயக்கங்களையும் (dynamics), பண்பாட்டுக் கோலங்களையும் அலசிப் பார்க்க முடியும். இனஒப்பாய்வியலில் இவ்வகை ஆய்வுமுறை அதன் பல்வேறு ஆய்வுமுறைகளுள் ஒன்று என்பதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

## பரந்த அளவு ஆய்வுகள்

நேடல் மேற்கொண்டதைப் போன்ற அனைத்து வகையான சிறிய அளவு ஆய்வுகளின் முடிவுகளைப் பெரும் எண்ணிக்கையிலான சமுதாயங்களோடு ஒப்பிட்டுச் சோதித்துப் பார்க்கும்போதுதான் அந்த முடிவுகள் கொள்கை நிலையை அடைய முடியும். அவ்வாறன்றி அது ஓர் எடுகோளாகவோ அப்போதைக்கு ஏற்படுத்தப்பட்ட கருத்தாக்கமாகவோ கருதப்படும். ஆகவே சிறிய அளவு ஆய்வுகளின் முடிவுகள் பல இனவரைவியல் ஆய்வுகளோடு பொருத்திப் பார்த்துச் சோதிக்க வேண்டிய அவசியமாகிறது.

பரந்த அளவிலான ஒப்பீடுகளின் தேவையை முதன் முதலில் வலியுறுத்தியவர் டைலரே. அவர் பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றி ஆராயும்போது பரந்த ஒப்பீட்டு ஆய்வின் அவசியத்தை உணர்ந்தார். டைலர் தம் படிமலர்ச்சிக் கருத்துக்களை வெளியிடும்போது அவ்வளவாக இனக்குழுவியல் ஆய்வுகள் பல்கிப் பெருகவில்லை. பிற்காலத்தில் இனவரைவியல் ஆய்வுகள் பெருமளவு வெளிவந்தபோது டைலரின் படிமலர்ச்சிக் கருத்துகளைச் சிலர் ஐயப்பாடுடையதாக்கினர். அதற்குக் காரணம்

சில சமுதாயங்களின் படிமலர்ச்சி டைலரின் படிமலர்ச்சித் திட்டத்தில் பொருத்தம் பெறாமல் உள்ளது என்று கருதப்பட்டதேயாகும்.

படிமலர்ச்சி சார்புடைய ஆய்வுகளைப் பிற்கால ஆங்கிலேய மானிடவியலார் ஒருவகையில் குறை கூறுவர். அவ்வகை ஆய்வுகள் மூலம் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைப் புரிந்துகொள்ள முடியாது என்பர். அவர்கள் தளப்பார்வை (ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தைச் சேர்ந்த சமுதாய அமைப்புகளை மட்டும் ஆராயும் முறை - synchronic study) ஆய்வுகளிலும் பற்றுடையவர்களாக இருந்தனர். ஆனால் பரந்த அளவுடைய ஆய்வு முறையை அனைவருமே ஆதரித்து அதனை வளம்பெறச் செய்தனர்.

இன்றைய சிந்தையாளர்களுள் சிலர் பண்பாட்டிடை நிலையில் பரந்த அளவில் ஒப்பீடு செய்யும் காலப்பார்வையுடைய (தொடர்ச்சியான காலகட்டங்களை உள்ளடக்கிய ஆய்வு - diachronic study) ஆய்வு முறையில் மட்டுமே பண்பாட்டின் நீண்டகாலப் படிமலர்ச்சியையும், பண்பாட்டின் அனைத்து முறைகளையும் ஆய்வு செய்ய முடியும் என நம்புகின்றனர். செயற்பாட்டியல் ஆய்வாளர்கள் படிமலர்ச்சி ஆய்வுகளின் மூலம் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாது என வாதாடுபவர்கள் என்றாலும் வரலாற்று நோக்குடைய ஆய்வுகளை அவர்கள் எதிர்ப்பதில்லை.

சமுதாயத்தைப் பற்றிய உண்மைகளைக் கண்டறிய முற்படும்போது எடுத்த எடுப்பில் பரந்த நிலை ஆய்வில் ஈடுபட இயலாது. முதலில் நுண்ணிலையிலும் பின்னர்ப் பருநிலையிலும் ஈடுபட வேண்டியதாகிறது. அதனால் இனக்குழு ஒப்பாய்வியலில் இவ்விரண்டு வகையான ஆய்வுகளும் இன்றியமையாதனவாக உள்ளன.

## நெறித்துணை நூல்கள்


Beals, Ralph L., and Harry Hoijer. 1965. *An Introduction to Anthropology*. New York : Macmillan.

மானிடவியலின் அனைத்துப் பிரிவுகளையும் பற்றிய சிறந்த அறிமுக நூல்.

Beattie, John. 1964. *Other Cultures*. New York : The Free Press.

சமுதாய மானிடவியலின் நோக்கம், அணுகுமுறைகள் குறிக்கோள்கள் போன்றவற்றை விளக்கும் சிறந்த நூல். முதற்கட்ட மாணவர்களுக்குச் சற்று கடினமாக இருக்கும்





Fried, Morton. 1972. *The Study of Anthropology*. New York : Crowell.

இளநிலையாளர்களுக்கு ஒரு முழுமையான நூலாக இது விளங்குகிறது. மானிடவியல் தொழிலும் அதன் நெளிவு சுளிவுகளும் குறித்துச் சுருக்கமாகக் கூறுகிறது.

Evans - Pritchard, E.E. 1964. Social Anthropology. Glencoe : The Free Press.

சமுதாய மானிடவியலின் தோற்றம், வளர்ச்சி, இலக்கு ஆகியன குறித்து இவான்ஸ் பிரிட்சார்டு பொதுமக்களுக்கு வானொலி மூலம் ஆற்றிய உரைகளின் அடிப்படையில் அமைந்த நூலிது.

Lasker, Gabriel Ward. 1973. *Physical Anthropology*. New York : Holt, Rinehart and Winston.

உடல்சார் மானிடவியலைப் பற்றி எழுதப் பெற்றுள்ள சிறந்த அறிமுக நூல்களுள் இதுவும் ஒன்று.

Stein, Philip L., and Bruce M. Rowe. 1978. *Physical Anthropology*. New York : McGraw - Hill.

உடல்சார் மானிடவியலைப் பற்றிய மேலுமொரு சிறந்த அறிமுக நூல். உடல்சார் மானிடவியலில் வளர்ந்துவரும் பிரிவுகளைப் பற்றியும் ஆய்வுகளைப் பற்றியும் ஆசிரியர் நூல் முழுவதும் சிறப்பாக விளக்குகிறார்.

Haviland, William A. 1989. *Anthropology*. Fort Worth: Holt, Rinehart and Winston, Inc.

மானிடவியல் கற்பிக்கும் ஆசிரியர்களாலும் பயிலும் மாணவர்களாலும் பெரிதும் விரும்பப்படும் விரிவான அறிமுக நூல்.


Scanned by TapScanner

4

# பண்பாட்டுக் கோலங்கள்

பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது - இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது - மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்ட விலங்காவான் போன்ற கருத்துகள் பரவலாகப் பேசப்படுகின்றன. ஆனால், பண்பாட்டை நுழுதளாவிய அணுகுமுறையில் உற்று நோக்கும் போது இக்கூற்றுக்கு மேலும் சில விளக்கங்கள் வெளிப்படும். இதன்மூலம் மேற்கூறிய கருத்து பெருமளவு உண்மை என்றாலும்கூட இது ஒரு வகையில் குறைபாடுடைய கருத்து என்பதும் வெளிப்படும்.


உயர்பாலூட்டி வரிசையைச் (order primate) சேர்ந்த மனிதனின் நேர் மூதாதையர்களான நியாண்டர்தால் மனிதன், கொரில்லா மனிதன் போன்றவையும் அதற்குக்கீழுள்ள வாலில்லாக் குரங்கினங்களும் (apes) மனிதனை ஒத்த நடத்தை முறைகளைக் கொண்டுள்ளன. இவ்வரிசைக்குக் கீழுள்ள விலங்கினமான தேனீக்கள்கூட ஒழுங்குமுறையிலான நடனங்களை நிகழ்த்துகின்றன. எறும்புகளின் வாழ்வியலும் நெறிப்படுத்தப்பட்ட நடத்தை முறைகள் காணப்படுகின்றன. இவை போன்ற எண்ணற்ற எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். இந்நிலையில் பல கேள்விகள் நம் மனதில் தோன்றும். சிம்பன்சி குரங்கு, நியாண்டர்தால் மனிதன், கொரில்லா மனிதன் போன்ற உயர்பாலூட்டிகளும், பிற கீழ்நிலை விலங்கினங்களும் பண்பாட்டைக் கொண்டுள்ளனவா? அவ்வாறு கொண்டிருப்பின் அவை மனித இனத்தோடு ஒப்பிட்டுப் பேசக்கூடியவையா? ஒப்பிட்டுப் பேச இயலாது எனின் எது மனிதனையும், மனிதரல்லாதவற்றையும் பிரிக்கிறது? மேற்கூறிய வினாக்களுக்கு, மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்டவன்; பிற விலங்கினங்கள் பண்பாட்டைப் பெற்றிருக்கவில்லை என்ற பதிலே பெரும்பாலும் அனைவராலும் கூறப்படுகிறது. முன்னர்க் கூறியதுபோல இது அறிவியல்சார்புடைய கருத்தாக அமையாது. ஏனெனில், சில கீழ்நிலை விலங்கினங்களிலும் பண்பாடு காணக்கூடியதாக உள்ளது. ஆனால், அதன்தன்மை மட்டுமே வேறுபடுகிறது.

கீழ்நிலை விலங்குகளின் வாழ்க்கையில் சில கூறுகளில் மட்டும் பண்பாடு காணக்கூடியதாக உள்ளது. அதோடு அதன் தன்மை அரிதாக வெளிப்படுவதால் அது மிகத் தொடக்க நிலையைக் (rudimentary form) காட்டுவதாக உள்ளது. உயர்பாலூட்டிகளிடம்



அத்தன்மை சற்றுக் கூடுதலாக வெளிப்படும் இயல்பு உள்ளதால் அதன் நிலை 'எளிய நிலை' (simple form) எனக் கொள்ளலாம். மனிதர்களிடம் மட்டுமே பண்பாடு எளிமையற்ற, மிகவும் சிக்கலான நிலையில் (complex form) உள்ளது. உயிரினங்களின் உடல்சார் கூறுகளுக்கும், பண்பாட்டுக் கூறுகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதை இங்குக் கவனத்தில் கொள்ள வேண்டும். உடற்பண்புகள் மரபுவழியில் மரபணுக்களால் (genes) அறுதியிடப்படுகின்றன. (biologically inherited). ஆனால் பண்பாட்டுக்கூறுகள் மரபணுக்களால் அறுதியிடப்பெறுவதில்லை அவை அறிவுசார்ந்த நிலையிலேயே அறுதியிடப் பெறுகின்றன (intellectually inherited). இதன் மூலம் பண்பாடு என்பது தலைமுறை தலைமுறையாக அறிவு சார்ந்த நிலையில் கற்றுணர்ந்த நடத்தைமுறைகளைக் குறிக்கிறது என்பது அறியப்பெறும். மனிதன் பிறந்த நாள் முதற் கொண்டு இறக்கும் நாள் வரை அவனது பண்பாட்டைச் சமுதாய வயமாக்கம் (socialization), பண்பாட்டு வயமாக்கம் (enculturation) மூலம் கற்கிறான். கற்பிக்கும் நிறுவனம் பெற்றோர்களாகவோ, குடும்பமாகவோ, ஒப்பார் குழுவாகவோ (peer group) பிற நிறுவனங்களாகவோ இருக்கின்றன.

மானிடவியல் வழக்கில் இருந்து வரும் சில சொற்களைப் போன்றே பண்பாடு என்ற சொல்லையும் மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் வரையறுத்து விளக்குவது இயலாததாகிறது. அதற்குக் காரணம் 'பண்பாடு' என்னும் கருத்தாக்கம் மக்களின் அறிவுசார்ந்த நிலையில் ஏற்படும் எண்ணற்ற கருத்துவடிவங்களின் (abstraction) படிநிலைகள் மூலம் வெளிப்படுவதேயாகும். இவ்வகைக் கருத்துவடிவங்களின் பல நிலைகளைப் பின்வரும் விளக்கத்தினைக் கொண்டு அறியலாம். பண்பாட்டை, பண்பாடு$_1$, பண்பாடு$_2$, பண்பாடு$_3$ எனக் கொள்க. பண்பாடு$_1$ என்பது




ஒவ்வொரு தனிமனிதனின் பண்பாடாகும். அதாவது, ஒருவரின் சொந்தப் பண்பாடாகும். அது அவரின் தனித்தன்மையுடைய (idiosyncratic) பாங்குக்கும், அவர்

மற்றும் கொண்டுள்ளாரோ புரிந்து கொண்டுள்ளாரோ அவை அனைத்தையும் கொண்டதாகும். இரு தனிமனிதர்கள் ஒத்த பாங்கினைப் பெற்றிருக்கவில்லை என்பதே பண்பாடு1 என்பதன் மறுபொருளாகும். பண்பாடு2 என்பது 'நம்பண்பாடு' (our culture) ஆகும். இதில் 'நம் அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டவை இடம்பெறுகின்றன. அதாவது 'நம்பண்பாடு' என்னும் அமைப்பில் இரண்டுக்கும் மேற்பட்டவர்கள் இடம்பெறுவர். வேறுவகையில் கூறவேண்டுமானால் பண்பாடு2 என்பது தனிமனிதர் என்ற வட்டத்தைக் கடந்து ஒரு சிறு குழு என்ற அளவில் அமைகிறது. இதில் உள்ளோரின் அளவு குறைவு. ஆதலால் ஒரு பெரும் பண்பாட்டில் பண்பாடு, ஓர் உட்பண்பாடாக (subculture) விளங்கும் அல்லது ஒரு முதன்மைப் பண்பாட்டில் ஒரு பகுதியாக விளங்கும். ஒரு பண்பாட்டின் பல உட்பண்பாடுகள் இருக்கும். பண்பாடு, என்பது ஒரு சமுதாயத்தின் அல்லது பெரும்பகுதியின் (நாடு) முதன்மைப் பண்பாடாகும் (dominant culture). பண்பாடு3ன் கூறுகள் அனைத்துத் தனிமனிதர்களாலும், அனைத்து உட்குழுவினராலும் பகிர்ந்து கொள்ளப்படுவனவாக இருக்கும்; புரிந்து கொள்ளக்கூடியனவாக இருக்கும். அதனாலேயே 'பண்பாடு' என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்பட்டது (culture is shared) என்றும், கற்றுணரப்பட்டது (culture is learned) என்றும் கூறப்பெறும்.

மானிடவியலின் பரந்துபட்ட ஆய்வுப் பரப்புகள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பாங்கினைப் 'பண்பாடு' என்னும் கருத்தாக்கம் பெற்றுள்ளது. அனைத்து ஆய்வுப் பரப்புகளும் 'பண்பாடு' என்ற அடித்தளத்தின் மீது எழுப்பப்பெற்றுள்ளது என்பார் பிரான்ஸ் போவாஸ். பண்பாடு என்னும் கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும்போது, கணிதவியலின் 'சைபர்' (zero) என்னும் கருத்தாக்கம் எவ்வளவு முதன்மையானதோ அவ்வாறே மானிடவியலிலும் 'பண்பாடு' என்னும் கருத்தாக்கம் மிகவும் முதன்மையாகிறது என்பார் போவாஸ்[1]. இவ்வகைக் கருத்து போவாஸ் காலத்திலிருந்தே அமெரிக்க மானிடவியலில் வலுப்பெற்றுவிட்டது.

மானிடவியலின் அடித்தளமாக விளங்கும் பண்பாடு பற்றிய கருத்தாக்கம் இத்துறைக்கே உரியது என இல்லாமல் பிற துறையினரும் கையாளும் நிலை இருந்து வந்துள்ளது. அதனால் இப்பொருள் குறித்த ஆய்வுகளும், விளக்கங்களும், வரையறைகளும் பலவகைப்பட்டவையாக உள்ளன. பண்பாட்டின் உட்பொருளைக்

1 Merwyn S. Garbarino, *Sociocultural Theory in Anthropology* (New York· Holt, Rinehart and Winston, 1977), p. 49.

குறிப்பிடுவதில் ஏற்பட்ட வேறுபாடுகள் அளவிட முடியாதவை. பாலூட்டிகள் (mammals) எவை என்பது குறித்து ஏற்பட்ட வரையறைகள் எவ்வளவு வேறுபாடுகளைக் கொண்டதோ அதற்கும் மேல் வேறுபாடுகளைக் கொண்டது பண்பாடு பற்றிய வரையறைகளும் விளக்கங்களுமாகும்.

பண்பாடு என்றால் என்ன? என்பது பற்றிப் பல வல்லுநர்கள் பலவாறு விளக்கியுள்ளனர்; வரையறை செய்துள்ளனர். அவற்றை அறிய விழைவோர் குரோபரும் குளுக்கானும் எழுதிய நூலினைப்[2] படிக்க வேண்டும். அந்நூலில் 160க்கும் மேற்பட்ட வரையறைகள் தொகுத்துத் தொடுக்கப்பட்டுள்ளன. அவ்வரையறைகள் எவ்வாறு வேறுபட்டுள்ளன என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் இங்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

அ) பண்பாடு என்பது மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. அந்த ஊடகத்தைக் கொண்டே மக்கள் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்.

ஆ) பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச்சேர்ந்து செயல்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அந்தந்தச் சமுதாயத்திற்கு மட்டுமே உரியது. இது உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது.

இ) மக்கள் தலைமுறை தலைமுறையாக குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடு ஆகும்.

ஈ) பண்பாடு என்பது மனிதனின் உடல்சாரர்ந்த தகவமைப்பு.

உ) பண்பாடு என்பது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சுற்றுச்சூழல். இதில் பொருள்சாராப் பண்புகள், சட்டங்கள், நம்பிக்கைகள் முதலானவை அடங்கும்.

ஊ) பண்பாடு என்பது மரபு வழியில் புரிந்துகொண்டுள்ளவை பற்றிய ஓர் அமைப்பு. இது கற்றலின் மூலம் பெறப்படுவது; கற்றல் நடத்தைமுறையின் வழி உருவாக்கப்படுவது.

எ) பண்பாடு என்பது அனைவராலும் பகிர்ந்து கொள்ளப் பட்ட கருத்துக்களும், சமுதாய மரபுரிமையாகப் பெறப்பட்ட நம்பிக்கைகளும், பழக்கவழக்கங்களும் அடங்கிய தொகுப்பாகும்.

2 Kroeber, A.L., and Kluckhohn, C. (eds). *Culture: A Critical Review of Concepts and Definitions* (New York: Random House, 1952).

ஏ) பண்பாடு என்பது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டம், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய முழுமைத் தொகுதியாகும்.

மேற்கூறிய வரையறைகளுள் இறுதியாகக் கூறப்பட்டது புகழ்பெற்ற மானிடவியலறிஞர் எட்வர்ட் பர்னட் டைலரின் வரையறையாகும். ஆவிவழிபாடே (animism) மனித குலத்தின் தொடக்கச் சமயமாகும் என்னும் கொள்கையை வகுத்தவரும் இவரே. இன்று பண்பாடு என்பதை எவ்வாறு பொருள் கொள்கிறோமோ அதே வகையில் இச்சொல்லை முதன்முதலில் பயன்படுத்தியவர் டைலரே. இவர் 1871 - இல் வெளியிட்ட 'தொன்மைப் பண்பாடு' (Primitive Culture) என்னும் நூலில் மேற்கூறிய வரையறையைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"Culture or civilization, taken in its wide ethnographic sense, is that complex whole which includes knowledge, belief, art, morals, law, custom, and any other capabilities and habits acquired by man as a member of society".[3]

டைலரின் இவ்வரையறையே இன்று மிகவும் புகழ் பெற்றதாகவும், பெருவழக்காகவும், அனைவராலும் பயன்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

பண்பாடு பற்றி குரோபரும் குளுக்கானும் தொகுத்த வரையறைகள் அனைத்தையும் ஆழ்ந்து நோக்கும்போது அவை இருவகைகளில் பண்பாட்டை விளக்க முற்படுகின்றன என்பதை அறிய முடியும். முதல்வகை வரையறைகள் உண்மையியல் வகை (realistic category) என்றும், இரண்டாம் வகை வரையறைகள் கருத்தியல் வகை (idealistic category) என்றும் வகைப்படுத்தலாம்.

உண்மையியல் வகையைச் சேர்ந்த வரையறைகளை வகுத்தவர்கள், நேரடியாக உற்றுநோக்குதல் மூலம் அறியப்பெறும் நடத்தைமுறைகளையும், நடத்தைமுறையால் விளைந்த மற்றவைகளையும் கொண்டு பண்பாட்டை விளக்க முற்படுகின்றனர். இவர்கள் பண்பாட்டை உற்றுநோக்குதல் மூலம் அறிய முடியும் என்ற கருத்துடையவர்கள்.[4]

3 E.B. Tylor, *Primitive Culture*, 2 Vols. (New York: Harper & Row, 1958), p.l. Originally published in 1871.

4 Merwyn S. Garbarino, *Sociocultural Theory in Anthropology*, op. cit., p. 49.



கருத்தியல் வகையிலான வரையறைகளை வகுத்தவர்கள், மக்கள் அவரவர் பண்பாட்டைப் பற்றி ஏற்படுத்திக் கொண்டுள்ள விழுமியங்களையும் (values), நெறிமுறைகளையும் (norms), பிற கருத்தாக்கங்களையும் புரிந்துகொண்டு பண்பாட்டை விளக்க முற்படுகின்றனர். இவர்கள் பண்பாட்டை மனதளவில் மட்டுமே புரிந்துகொள்ள முடியும் என்ற கருத்துடையவர்கள்.[5] இவ்வகையைச் சேர்ந்த ஆய்வாளர்கள் அவரவர் திறனுக்கேற்பவும் சொந்த அளவுகோலுக்கேற்பவும் பண்பாட்டை விளக்க முற்படுபவர் என்பது இங்குக் கவனத்திற்குரியது.

சுருக்கமாகக் கூறவேண்டுமானால் உண்மையியல் அணுகுமுறையானது பண்பாட்டை உற்றுநோக்கக்கூடியது (observable) என்று கூறுகிறது. ஆனால் கருத்தியல் அணுகுமுறையானது பண்பாட்டை உய்த்துணரக்கூடியது (infered) என்று கூறுகிறது. இவ்விரு வகைக் கருத்துகளையும் ஏற்றுக் கொள்ளும்போது பல ஐயப்பாடுகள் எழுகின்றன. பண்பாடு என்பது உண்மையா? அல்லது உண்மையானவற்றிலிருந்து கருத்துவடிவமாகப் (abstract) பெறப்பட்டதா? இது புற உலகில் நிலை பெற்றுள்ளதா? இக்கேள்விகள் அனைத்தும் மிகவும் முக்கியமானவை. ஏனெனில் இக்கேள்விகளுக்கான விடைகளை ஆய்வாளர்கள் எந்த முறையில் ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பதைப் பொறுத்தே பண்பாட்டியல் ஆய்வுகள் அமைகின்றன. பண்பாட்டியல் ஆய்வுகள் பல வகைகளாகக் காணப்படுவதற்குக் காரணம் மேற்கூறிய வினாக்களுக்கு ஆய்வாளர்கள் வெவ்வேறு வகைகளில் விடைகளை ஏற்படுத்திக் கொண்டதேயாகும்.

பண்பாடு பற்றி ஓர் இனவரைவியலார் வகுத்துக் கொள்ளும் வரையறையானது அவரது களப்பணி ஆய்வுப் போக்கிலும், அவர் தொகுக்கும் தரவுகளைப் பகுத்தாய்வதிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

கருத்தியலாருக்குப் (idealist) பண்பாடு என்பது செய்பொருள்களை (artifacts) மட்டும் சார்ந்ததன்று; அவற்றைப் பற்றிய மக்களின் கருத்துகளுமாகும். அதோடு, பண்பாடு என்பது ஒரு முறைப்படியான நடத்தை முறைக்கு மக்கள் ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் அமைப்பு அல்லது மன அளவிலான விதி என்றக் கருத்தியலார் கருதுகின்றனர். கருத்தியலாரின் இவ்வகை வரையறை நடைமுறைக்கு ஒவ்வாததாகவும், சோதித்துப் பார்க்க இயலாததாகவும் உள்ளதெனத் தொடக்கத்தில் விவாதிக்கப்பட்டது. ஏனெனில், பண்பாடு உற்றுநோக்கல் மூலம் அறியக் கூடியதாக இருக்கிறது என்று கூறியதே காரணமாகும்.

5 Ibid, p. 49.

Scanned by TapScanner

உண்மையியலார் பண்பாட்டை உற்றுநோக்கல் மூலம் புரிந்து கொள்ள முடியும் என்கின்றனர். அவ்வாறு உற்றுநோக்க முற்படும்போது பல சிக்கல்கள் எழுகின்றன. ஆய்வாளர்கள் அயற்பண்பாட்டை ஆராயும்போது அவரவர் சொந்தப் பண்பாட்டின் தன்மைகளை அடிப்படையாகக் கொண்டு அதே கண்ணோட்டத்தில் நோக்குவதால் ஆய்வுக்குட்படுத்தப்படும் பண்பாட்டுக் கூறுகள் வடிகட்டப்படுகின்றன; பண்புகள் உருமாற்றப்படுகின்றன. ஆகவே, பண்பாட்டைப் புரிந்து கொள்வதில் கருத்தியல், உண்மையியல் ஆகிய இரு அணுகுமுறைகளிலும் குறைபாடுகள் இருந்து வந்தன. பின்னர்ப் படிப்படியாக இக்குறைகளை அகற்றும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 60களில் இச்சிக்கல்கள் பண்பாட்டுச் சார்புடைமை (cultural relativism) மூலம் தீர்க்கப்பட்டது. இக்கொள்கை பற்றி இதே அத்தியாயத்தில் இடம்பெறும் 'பண்பாடு ஒரு சார்புடைய அமைப்பு' என்னும் உட்தலைப்பில் இடம்பெற்றுள்ளது.

பண்பாடு என்பது சில வேளைகளில் புவிப்பரப்பு அல்லது நாடு சார்ந்ததாகவும் (எ-டு : அமெரிக்கப் பண்பாடு, மேற்கத்தியப் பண்பாடு, இந்தியப் பண்பாடு), மொழி, இனம் சார்ந்ததாகவும் (தமிழர் பண்பாடு, திராவிடப் பண்பாடு, ஆங்கிலேயர் பண்பாடு, யூதர் பண்பாடு, நீக்ரோ பண்பாடு, பிரஞ்சுப் பண்பாடு), இடம் சார்ந்ததாகவும் (நகரப் பண்பாடு, ஊரகப் பண்பாடு), மக்கள் சார்ந்ததாகவும் (பழங்குடியினர் பண்பாடு - tribal culture, வேளாண்குடியினர் பண்பாடு peasant culture) கூறப்படுகிறது. இவை அனைத்தையும் உற்று நோக்கும்போது பண்பாடு என்பது 'அனைவராலும் பகிர்ந்து கொள்ளக்கூடியவை' என்ற பொதுக்கருத்தை எட்ட முடிகிறது. இங்கு "அனைவர்" என்பது நாடு, புவிப்பரப்பு, மொழி, இனம் போன்ற எந்த ஒன்றோடும் சார்ந்த மக்களைக் குறிக்கிறது. அதனாலேயே அனைத்து வேறுபாடுகளையும், எல்லைகளையும் கடந்து பொதுமைப்படுத்திக் கூறும் வழக்கு மானிடவியலில் கையாளப்படுகிறது. தனிப்பட்ட கூறுகளைச் சிறப்பித்துக் கூறும் வழக்கு (எ-டு : அமெரிக்கர் பண்பாடு, யூதர் பண்பாடு) இனத்தன்மை வாய்ந்ததாக, சார்புடைய எண்ணங்கொண்டதாக இருக்குமென்பதால் இவை பெரும்பாலும் தவிர்க்கப்படும்.

## பண்பாட்டின் உட்கூறுகள்

பண்பாடு என்பது இலக்கியம், கவிதை, நடனம், இசை, கோயில்கள், சடங்குகள், வேத மந்திரங்கள், தொழில்கள் போன்ற சில கூறுகள் மட்டும் ஆகாது. இது மக்களின் நடத்தை முறைகளைக் கட்டுக்கோப்பான நிலையில் செயல்படுத்தும் ஒரு மிகப்பெரும் அமைப்பாகும். இவ்வமைப்பில் ஆயிரமாயிரம் கூறுகள் இடம்பெற்றுள்ளன. அவை பல கோலங்களில் (patterns) அமைத்து நிற்கின்றன. அவற்றின் மொத்த அமைப்பு கணிப்பொறி அல்லது விண்வெளிக்கலம் போன்ற சிக்கலான அமைப்புகளுடைய எந்திரத்தைப் போன்றது. இவ்வகை எந்திரங்களின் செயற்பாட்டிற்கு எவ்வாறு ஆயிரமாயிரம் உறுப்புகளைச் சிறப்பாக வடிவமைத்து இணைக்கின்றார்களோ அவ்வாறே ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரமாயிரம் கூறுகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாடு என்னும் அமைப்பிற்குள் பொருத்தப்பட்டுள்ளன.



எந்திரத்தின் அமைப்பு கண்ணால் பார்க்கக் கூடியதாக உள்ளதால் அதனுள் என்னென்ன உறுப்புகள் உள்ளன, எவ்வென்ன துணை உறுப்புகள் உள்ளன, அவற்றின் உறவுகள் என்ன என்பனவற்றை அறிய முடிகிறது. ஆனால் பண்பாடு என்னும் அமைப்பு மக்களின் ஒட்டுமொத்த நடத்தைமுறையின் வெளிப்பாடாக உள்ளதால் அதனுள் என்னென்ன உள்ளன? அவற்றை எவ்வாறு இனங்காண்பது போன்றவை மறைமுகமாகவே உள்ளன. அதன் அமைப்பினை விளக்கும் நிலையில் பண்பாட்டியலார் மூன்று வகையான உட்கூறுகளை இனங்காண்பர். அவை : பண்பாட்டுக்கூறு (culture trait), பண்பாட்டுக் கலவை (culture complex), நிறுவனம் (institution)

### பண்பாட்டுக் கூறு

பண்பாட்டின் மிகச் சிறிய அலகே (unit) பண்பாட்டுக் கூறு எனப்படும். ஒரு பண்பாட்டில் மிகச்சிறிய அலகு என்பது என்ன? அதை வரையறுப்பது எவ்வாறு? போன்ற கேள்விகள் உடனடியாக நம் மனதில் எழும். பண்பாட்டில் இவை இவை மிகச் சிறிய அலகுகள் என ஒருவர் கருதுவதையே வேறொருவர் கருதாமலும் போகலாம். இவ்வாறான நிலை பண்பாட்டைப் பற்றிய நுண்ணறிவினை ஒருவர் பெறாத வரையில் தாம் நிலவும் பண்பாட்டைப் பற்றிய தெளிவான அறிவினை ஒருவர் பெற்றுவிட்டால் அவருக்கு இவ்வகைச் சிக்கல்கள் எழா.

பண்பாட்டுக்கூறு பற்றிய கருத்துகளுள் ஹோபலின் கருத்தே சிறப்பானது. "- கற்றுணர்ந்த நடத்தை முறையானாலும் சரி, உற்பத்தி செய்யப்பட்ட பயன்படு பொருளானாலும் சரி, அதனை எந்த அளவுக்குக் குறைத்துக் காணமுடியுமோ அந்த அளவிற்குக் குறைத்துக் காணக் கூடிய ஒன்றே பண்பாட்டுக் கூறு ஆகும்" என்பார் ஹோபல்.[6] பொருள்சார் பண்பாட்டைச் (material culture)

6 Adamson E. Hoebel, *Man in Primitive World* (New York: McGraw - Hill, 1949), p. 499.

சேர்ந்த கூறுகளைக் குறிப்பிட வேண்டுமானால் நகம், கத்தி, எழுதுகோல், கைக்குட்டை, கதவு போன்ற தனிப்பட்ட (அதற்கு மேலும் குறைத்துக் காணஇயலாத) நிலையிலுள்ள எண்ணற்ற கூறுகளைக் கூறலாம். பொருள்சாராப் பண்பாட்டிலிருந்து (non-material culture) சில எடுத்துக்காட்டுகள் கூற வேண்டுமாயின், தலைவாருதல்; நண்பர்கள் சந்திக்கும்போது கைகுலுக்குதல், அன்பை வெளிப்படுத்துவதற்காக முத்தம் கொடுத்தல், சாலையில் இடப்புறம் செல்ல வேண்டுமென்ற நெறியைப் பின்பற்றுதல், கொடியேற்றியவுடன் வணக்கம் செலுத்துதல் போன்ற எண்ணற்ற கூறுகளைக் குறிப்பிடலாம். ஒவ்வொரு பண்பாட்டிலும் ஆயிரக்கணக்கான கூறுகள் உள்ளன. அவற்றுள் பல அனைத்துப் பண்பாட்டிற்கும் பொதுவானவையாக இருக்கும். சில அந்தந்தப் பண்பாட்டிற்கு மட்டும் உரியனவாக இருக்கும்.

## பண்பாட்டுக் கலவை

மேற்கண்ட பத்திகளில் பண்பாட்டுக் கூறைப் பற்றிப் புரிந்து கொண்ட இந்நிலையில் நடனம் என்பது ஒரு தனிப்பண்பாட்டுக் கூறு எனக் கூறலாமா? கூறமுடியாதா? என வினவினால் அது ஒரு தனிப்பண்பாட்டுக் கூறல்ல என்றுதான் கூறவேண்டும். அது பல கூறுகளின் தொகுப்பாகும். நடன அசைவுகள், ஒவ்வொரு நடன அசைவிற்குமுள்ள விதிமுறைகள், பல கருவிகளைக் கொண்ட பின்னணி இசை போன்ற பல கூறுகள் ஒன்றிணைந்த நிலையில் நிகழ்த்தப்படுவதே நடனமாகும். அதோடு நடனம் பல பொருள்களில் (meaning) நிகழ்த்தப்படுகிறது. சமயச் சடங்குகள், மந்திரச் சடங்குகள், காதல் வெளிப்பாடு, பொழுதுபோக்கு, விழாக்கள் போன்றவை அவற்றுள் சில. இதுபோன்ற வகைகளில் நிகழ்த்தப்படும் ஒவ்வொரு வகையான நடனத்திற்கும் தனித்தனிப் பொருளுண்டு. ஒவ்வொரு வகையிலும் பல கூறுகள் இணைகின்றன.

நடனத்தைப் போன்றே வீடு என்பது ஒரு தனிப்பட்ட பண்பாட்டுக் கூறன்று. கல், மணல், சிமெண்டு, வாயிற்படிகள், சன்னல்கள், கதவுகள், கிணறு போன்ற பல தனிப்பட்ட கூறுகள் ஒன்றிணைந்த தொகுப்பேயாகும். அவ்வாறே கால்பந்தாட்டமும் பல கூறுகளின் தொகுப்பாகவே உள்ளது. விளையாட்டுத்திடல், பார்வையாளர்கள், விளையாட்டுக் கருவிகள், விளையாட்டு நுட்பம், ஆட்டக்காரர்கள், நடுவர் போன்ற பல கூறுகள் அதனுள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறு பல கூறுகள் ஒன்றாகக் கலந்து ஒரு சேர்மமாகக் காணப்படுவது பண்பாட்டுக் கலவை (culture



complex*) எனப்படும். ஒன்றுக்கும் மேற்பட்ட கூறுகளால் இணைக்கப்பட்ட இப்பண்பாட்டுக் கலவையானது பண்பாடு என்னும் எந்திரத்தில் பல துணை உறுப்புகளாக இணைக்கப் பட்டுள்ளது.

பண்பாட்டுக் கலவை, பண்பாட்டில் எவ்வகையான இடத்தைப் பெற்றுள்ளது என்பதைக் கூறவேண்டுமானால் ஒரு தனிப்பட்ட பண்பாட்டுக் கூறுக்கும் நிறுவனத்திற்கும் (institution) இடைப்பட்ட நிலையில் உள்ளது எனக் கூறலாம்.

நிறுவனமானது பல பண்பாட்டுக் கலவைகளால் ஆனது. குடும்பம் ஒரு நிறுவனம் ஆகும். இதில் திருமணம், உறைவிடம், தேன்நிலவு, உடலுறவு, குழந்தை வளர்ப்புப் போன்ற பல கலவைகள் இடம்பெற்றுள்ளன. ஒவ்வொரு நிறுவனத்திலும் சில கலவைகள் (உறுப்புகள் அல்லது பிரிவுகள் - parts) சிறப்பிடம் பெறுகின்றன. மற்றவை சிறப்பிடம் பெறாமல் உள்ளன.

## உட்கூறுகளின் தன்மைகள்

ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம் பெற்றுள்ள கூறுகள் பல்வேறு தன்மை வாய்ந்தவை. இருப்பினும் அவற்றின் பண்புகளைத் தொகுத்துக் காணும்போது அவற்றைப் பின்வரும் மூன்று நிலைகளாக வரிசைப்படுத்தலாம்.

1. பொருள்சார் கூறுகள் (material components)
2. அறிதல்சார் கூறுகள் (cognitive components)
3. நெறியியல் கூறுகள் (normative components)

*சமுதாய அறிவியல்களில் 'complex' என்னும் சொல் பல நிலைகளில் பயன்படுத்தப்படுகிறது. மானிடவியலில் பயன்படுத்தும் 'complex' என்னும் சொல்லை உளவியலில் பயன்படுத்தும் சொல்லோடு தொடர்புபடுத்திக் குழம்பக்கூடாது. உளவியலில் 'inferiority complex' (தாழ்வு மனப்பான்மை), 'oedipus complex' (ஈடிபஸ் சிக்கல்), 'electra complex' (எதிர்மறைச் சிக்கல்) போன்ற தொடரில் வரும் சொற்கள் வேறு பொருள்களில் பயன்படுவதை இங்குக் கவனிக்க வேண்டும். மானிடவியலில் complex society, culture complex, complex whole போன்ற தொடர்கள் முறையே கலப்புச் சமுதாயம், பண்பாட்டுக் கலவை, முழுமைத் தொகுதி போன்ற பொருள்களில் மட்டுமே பயன்படுகின்றன. 'கலப்புச் சமுதாயம்' என்பது ஒருபடித்தான சமுதாயத்திற்கு நேர் எதிரானது. இது பல படிநிலைகளைக் கொண்டது. மற்ற இரு தொடர்களில் வரும் (complex) என்னும் சொல்லும் ஏறக்குறைய இதே பொருளையே மையமாகக் கொண்டுள்ளது.

அச்சுறுத்தலுக்கு ஆளாகின்றன. இந்நிலையில் மக்கள் நெறிமுறைகளைப் பற்றி நடக்க உறுதியான வழிவகை செய்தால் மட்டுமே சமுதாய ஒழுங்கும் நலனும் காக்கப்படும். அதற்காக மேற்கொள்ளப்படும் உறுதிப்பாடோ வழிமுறைகளோ அளிப்புகள் (sanctions) ஆகும். இவை மனித நடத்தைமுறைகளைக் கட்டுக்குள் வைக்கின்றன; சமுதாயம் போற்றிக்காக்கும் விழுமியங்களை, நடைமுறைகளை நிலைபெறச் செய்கின்றன. சமுதாய இணக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்ட அளிப்புகளானது அறிவுரை கூறல், கண்டித்தல், தண்டம் வழங்குதல், சிறையிடுதல், தூக்கிலிடுதல், மன்னித்துவிடுதல், பரிசு கொடுத்தல் போன்ற எந்த ஒரு நிலையிலும் வெளிப்படக்கூடியவையாகும். இவை பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடக்கூடியன.

மேற்கூறிய விழுமியங்கள், நெறிமுறைகள், குடிவழக்கு, வழக்கடிபாடுகள், பழக்கவழக்கங்கள், சட்டங்கள், அளிப்புகள் போன்ற அனைத்தையும் மக்கள் சமுதாயவயமாக்கம் (socialization) மூலமும், பண்பாட்டுவயமாக்கம் (enculturation) மூலமும் பிறந்தது முதல் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து பயின்று கொள்கின்றனர்.

## பண்பாட்டின் அமைப்பு

பண்பாட்டின் அமைப்பு அதன் இயக்கத்தில் அறியக்கூடியது. அதனுள் உள்ள ஆயிரமாயிரம் கூறுகள் அந்தந்தப் பண்பாட்டு உறுப்பினர்களால் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பண்பாட்டோடு பொருத்தப்படுகின்றன. அவை இணைந்து செயல்படும் முறை பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகிறது. அதன் பல பரிமாணங்களை அறிவதற்குமுன் அதன் அடிப்படை அமைப்புகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும்

பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு (material culture) என்றும், பொருள்சாராப் பண்பாடு (non - material culture) என்றும் இருவகைகளாகப் பிரிக்கலாம். மக்கள் அவர்களின் தேவைகளுக்காகச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருள்களும் பொருள்சார் பண்பாட்டில் அடங்கும். இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள், வீட்டுப்பொருள்கள், உடைகள், அணிகலன்கள், கட்டடங்கள், போக்குவரத்துச் சாதனங்கள், சாலைகள், வேளாண் நிலங்கள், எழுதுகோல், அழகுப்பொருள்கள், போர்க்கருவிகள் போன்ற எண்ணற்ற பொருள்கள் பொருள்சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. ஒரு பண்பாட்டைச் சேர்ந்த பொருள்கள் அதற்கென்ற பொருளையும் (meaning) பயன்பாட்டையும் நிலையாக் கொண்டு அப்பண்பாட்டில் நிலைபெற்றிருக்கும். மக்களின் தேவைகளுக்காகப் பொருள்கள் ஏற்படுத்தப்பட்டதால் அத்தேவைகள் பண்பாட்டில் நிலைபெற்றுள்ளவரை அப்பொருள்களும் அப்பண்பாட்டில் இருக்கும். பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டுச் சில குறிப்பிட்ட தேவைகள் அற்றுப்போகுமானால் அவற்றிற்குரிய பொருள்களும் மறைந்து போகும். ஆகவே ஒரு பண்பாட்டைச் சேர்ந்த அனைத்துப் பொருள்களையும் கொண்டு அம்மக்களின் பண்பாட்டைப் பெருமளவு அறியமுடியும். அதனாலேயே பண்பாட்டுப் பகுப்பாய்வில் பொருள்சார் பண்பாட்டை அறிய வேண்டியது அவசியமாகிறது. பொருள்சார் பண்பாட்டில் மக்களால் செய்யப்பட்ட செய்பொருள்கள் மட்டுமே இடம் பெற்றிருப்பதால் அவை மானிடவியல் வழக்கில் கலை வடிவங்கள் அல்லது பொருள் வடிவங்கள் (artifacts) என்றும் கூறப்பெறும்.



பொருள்சாராப் பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். எடுத்துக்காட்டாக கருத்துகள் (ideas), பழக்கவழக்கங்கள், நெறிமுறைகள், அறிதிறன், அழகியல் சிந்தனைகள், கற்பனை, நடிப்பு, இலக்கியங்கள், பாடல்கள், இசை, நடனம், உணவு உண்ணும்முறை, தலைவாரும் முறை, வணக்கம் செலுத்தும் முறை, மந்திரங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் போன்ற பொருள் வடிவம் பெறாத அனைத்தும் இதில் இடம்பெறும். இக்கூறுகள் மனத்தளவில் மட்டுமே உணரக்கூடியனவாகவும், புரிந்து கொள்ளக் கூடியுளவாகவும் உள்ளதால் அவை மானிடவியல் வழக்கில் மனவடிவங்கள் (mentifacts) என்றும் கூறப்பெறும். பொருள்சாராப் பண்பாட்டுக் கூறுகள் அந்தந்தப் பண்பாட்டின் புதைநிலைக் கருத்துகளை மிகுதியாகக் கொண்டுள்ளதால் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டை ஆராய முற்படும்போது அம்மக்களிடம் மிக நீண்ட காலம் களப்பணி செய்து ஆழ்நிலையில் இவ்வகைக் கருத்துகளைத் தொகுக்க வேண்டியது அவசியமாகிறது.

பொருள்சார் பண்பாடும் பொருள்சாராப் பண்பாடும் தனித்தனியானதன்று; ஒன்றையொன்று சார்ந்தது. ஒவ்வொரு பொருளுக்குப் பின்னும் அதற்கென்ற பொருள்சாராப் பண்பாடு உண்டு. எடுத்துக்காட்டாக, மரப்பந்தாட்டத்தில் (cricket) பயன்படுத்தப்படும் மட்டைகள், பந்து, கவசங்கள், சிருடை, கை-கால் காப்புகள், குச்சிகள் போன்றவை பொருள் சார் பண்பாட்டைச் சேர்ந்தவை. இவ்விளையாட்டில் இடம் பெறும் விதிமுறைகள், ஆட்டக்காரர்களின் நுணுக்கங்கள், திறன்கள், விளையாட்டு உத்திகள், ஆட்டக்காரர்கள் விளையாடும் போது

Scanned by TapScanner

எவ்வாறெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமென்ற நடத்தை முறைகள் போன்றவை இவ்விளையாட்டின் பொருள்சாராப் பண்பாட்டுக் கூறுகளாகும். இதைப் போன்று பண்பாட்டின் ஒவ்வொரு பொருளுக்கும் அதன் பொருள்சாராப் பண்பாட்டினை விளக்கிக் கூறலாம்.

## உகந்தநிலைப் பண்பாடும் உண்மைப் பண்பாடும்

பெரும்பாலான பண்பாடுகளில் எவற்றைச் செய்யவேண்டும், எவற்றைச் செய்யக்கூடாது என்பதற்கான நெறிமுறைகள் உள்ளன. எவற்றைச் செய்யக்கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளதோ அவற்றுள் பலவற்றை மக்கள் நடைமுறை வாழ்வில் செய்துவருகின்றனர். காலங்காலமாக இது நடந்து வருகிறது. மாலினோஸ்கி ட்ரோபிரியாண்டுச் சமுதாயத்தில் தடை செய்யப்பட்ட ஒரு நடத்தை முறை எவ்வாறு மக்களின் நடைமுறை வாழ்வில் இடம்பெறுகிறது என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். ட்ரோபிரியாண்டுச் சமுதாயத்தின் விதிமுறைகளின்படி ஒரு குலத்தைச் (clan) சேர்ந்தவன் அதே குலத்தைச் சேர்ந்தவர்களுடன் பாலுறவு கொள்ளக்கூடாது. வேற்றுக் குலத்தவருடன் மட்டுமே பாலுறவு கொள்ள வேண்டும். கூடா ஒழுக்கத்தில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும் இவ்விதியைத் தான் பின்பற்ற வேண்டும். இவ்விதியை மீறி ஒருவர் அவர்தம் குலத்தவருடன் உடலுறவு கொண்டால் புண், நோய் முதலானவை ஏற்படுவதுடன் இறப்பும் கூட நேரலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் உள்ளது. ஆனால் பல வேளைகளில் குலப் புறமண முறையை (clan exogamy) மீறி அவர்தம் சொந்த குலத்தவருடன் கூடா ஒழுக்கம் கொண்டதைப் பல தகவலாளிகள் என்னிடம் ஒப்புக் கொண்டனர் என்பார் மாலினோஸ்கி. பெரும்பாலான சமுதாயங்களில் உள்ளது போன்றே ட்ரோபிரியாண்டு மக்களும் கூடா ஒழுக்கக் குற்றச்சாட்டிலிருந்து தப்பித்துக்கொள்ள பல வழிமுறைகளைக் கொண்டுள்ளனர். அவற்றுள் மந்திரமும் ஒன்று.[8]

மேற்கூறிய விவரங்களிலிருந்து உகந்தநிலைப் பண்பாடு (ideal culture) எது, உண்மைப் பண்பாடு (real culture) எது, என்பதைப் புரிந்து கொள்ள இயலும். உகந்தநிலைப் பண்பாடு என்பது சமுதாய வாழ்வில் இதை இதைத்தான் செய்யவேண்டும் என்று மக்களிடமிருந்து எதிர்பார்ப்பதைக் குறிக்கும். ஆனால் உண்மைப் பண்பாடானது மக்கள், சமுதாயத்தில் சட்டதிட்டங்களின்

7 Malinowski, *Crime and Custom in Savage Society* (London : Routledge and Kegan Paul, 1926), pp. 79 - 84.

8 Ibid, p. 81.



எதிர்பார்ப்புகளைக் கவனத்தில் கொள்ளாமல் நடைமுறை வாழ்வில் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைக் குறிக்கிறது. இவ்விரண்டையும் நன்கு அறிய நம்முடைய சொந்தப் பண்பாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையே எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம். பொதுவாழ்வில் கையூட்டு வாங்குவது தவறு என்பது உகந்தநிலைப் பண்பாடு. ஆனால் அது நடைமுறையில் செயற்படுத்தப் படுவதில்லை என்பது உண்மைப் பண்பாடு. காலந்தவறாமையை வலியுறுத்திப் பேசுவதும், அவரவர் கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டுமென்று கூறுவதும் உகந்த நிலைப் பண்பாட்டைக் குறிக்கிறது. ஆனால் அவற்றைக் கடைபிடிக்க முடியாமல் வாழும் நிலை உண்மைப் பண்பாட்டைக் குறிக்கிறது. இது தொடர்பாக பின்வரும் எடுத்துக்காட்டுகளையும் காண்க.

1) குடித்தல், சூதாடுதல் போன்ற பொது விலக்குகளை (prohibitions) மீறி அவற்றைச் செய்தல்.

2) தன்னலமற்ற பொதுநல வாழ்வு என்ற இலக்கை மீறி பிறரைத் துன்புறுத்தி சுயநலத்தையும் ஆதாயத்தையும் தேடி அலைதல்.

3) குடும்ப அமைப்பிற்குள் கட்டுப்படாமல் பரத்தமை வாழ்வில் ஈடுபடுதல்.

4) வகுப்பறைகளிலும் தேர்வுகளிலும் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகளை மீறி ஆசிரியர்களை எள்ளி நகையாடுதலும் நூல்களைப் பார்த்துத் தேர்வு எழுதுதலும்.

5) தகுதி அடிப்படையில் பணி நியமனம் செய்யும் மரபை மீறி இன உணர்வு, தனிச்சலுகைகள் மூலம் அதைச் செய்தல்.

6) சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்று கூறுவோர் அவர்களின் சுய நலனுக்காக அவற்றை மீறுதல்.

மேற்கூறிய எடுத்துக்காட்டுகள் ஒவ்வொன்றிலும் முதற் பகுதியில் உள்ளவை உகந்த நிலைப் பண்பாட்டைக் குறிப்பவை. அவை மக்களின் நடத்தைமுறை இந்த இந்த முறையில் தான் இருக்கவேண்டும் என்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மரபுவழி விதிமுறைகளைக் குறிக்கின்றன. எடுத்துக் காட்டுகளின் பிற்பகுதியில் உள்ளவை உண்மைப் பண்பாட்டைக் குறிப்பவை. அவை மக்கள் ஏற்றுக்கொண்ட விதிமுறைகளையே மீறி நடக்கும் இயல்பான நிலையை (உண்மைப் பண்பாடு) உணர்த்துகிறது.

Scanned by TapScanner

## உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடும்

மக்கள் மனத்தளவில் பதிய வைத்துள்ள பண்பாட்டு விதிகளின் (cultural rule) அடிப்படையில் நிகழும் நடத்தை முறைகளின் தொகுப்பே உள்ளார்ந்த பண்பாடு (implicit or covert culture) ஆகும். பண்பாட்டில் நிகழும் சில நிகழ்ச்சிகள் மூலம் இதனைப் புரிந்து கொள்ளலாம். தேசியக் கொடி ஏற்றியவுடன் நிமிர்ந்து நின்று வணக்கம் கூறுவதும், தேசிய கீதம் பாடப் பெறும்போது எழுந்து நின்று அசையாமல் நிற்பதும், பெரியோர்கள் வரும்போது எழுந்து வணக்கம் தெரிவிப்பதும், விருந்தில் வாழை இலையைப் போடும்போது நுனி இடப்பக்கம் இருக்க வேண்டுமென்பதும், இலையில் உணவு பரிமாறும்போது ஒவ்வொன்றையும் எங்கு வைக்க வேண்டுமென்பதும், சடங்கு நிகழ்ச்சிகளில் எந்தச் செயலிற்கடுத்து எது நிகழ வேண்டும், எப்படி நிகழ வேண்டும் என்பதும் உள்ளார்ந்த பண்பாட்டில் அடங்கும்.

பண்பாட்டின் பொருள்சாராக் கூறுகளான நெறிமுறைகள், விழுமியங்கள், விதிகள், குடிவழக்குகள், வழக்கடிபாடுகள், பழக்க வழக்கங்கள், அளிப்புகள், நம்பிக்கைகள், கனவுகள், பயம், இன்பம், விரக்தி போன்ற மனதளவில் உணரப்படும் எந்த ஒரு கூறும் உள்ளார்ந்த பண்பாட்டின் கூறுகளே. இவை போன்ற ஆயிரமாயிரம் உள்ளார்ந்த கூறுகள் ஒவ்வொரு பண்பாட்டிலும் உண்டு. ஒரு சமுதாயத்தின் பண்பாட்டை நேரடியாகக் காண முடியாது. செயல் வடிவமாகவோ எண்ணத்தின் வெளிப் பாடாகவோ உணர்வுகளின் வெளிப்பாடாகவோ கதை, கவிதை, இசை, நடனம், சைகை, குறியீடு போன்ற எண்ணற்ற பொருள்சாராக் கூறுகளின் வெளிப்பாடாகவோ அறிய இயலும். உள்ளார்ந்த பண்பாட்டினை மக்கள் மனத்தளவில் மட்டுமே கொண்டிருப்பர். வெளிப்படையாகத் தெரியாது. இவை புற நிகழ்ச்சிகள் மூலமே வெளிப்படக்கூடியன. எனவேதான் இவ்வகைக் கூறுகளின் தொகுப்பை உள்ளார்ந்த பண்பாடு என மானிடவியலார் குறிப்பிடுவர்.

உள்ளார்ந்த பண்பாட்டிற்கு நேர் எதிரானது வெளிப்படைப் பண்பாடு (explicit or overt culture). இதில் கருத்து வடிவில் புதைந்து கிடக்கும் செய்திகளோ மனதளவில் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய நடத்தை முறைகளோ இடம் பெறுவதில்லை. வெளிப்படையாக காணக்கூடியவை மட்டுமே இடம் பெறும். ஒரு சமுதாயத்தின் நடத்தைமுறைகள் எக்கூறுகளால் வெளிப்படுகிறதோ அவையே அச்சமுதாயத்தின் வெளிப்படைப் பண்பாடாகும். பெரும்பாலும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளால் அறியப்பெறுபவை அனைத்தும் வெளிப்படைப் பண்பாடு எனக் கொள்ளலாம்.

உள்ளார்ந்த பண்பாடு, வெளிப்படைப் பண்பாடு ஆகிய இரண்டையும் தனித்தனியே பிரித்துப் பார்ப்பது பல இடங்களில் பொருந்தாது. எடுத்துக்காட்டாக, பொருள்சார் பண்பாடு பொருள்சாராப் பண்பாடு ஆகிய இரண்டிற்கும் உள்ள தொடர்பை விளக்கும் மரப்பந்தாட்ட விளையாட்டு எடுத்துக்காட்டினைக் காண்க. ஆட்டத்திற்குப் பயன்படும் பொருள்கள் அனைத்தும் பொருள்சார் பண்பாட்டில் அடங்குகிறது. ஆட்டத்தின் விதிமுறைகள், உத்திகள் போன்றவை பொருள்சாராப் பண்பாட்டைச் சேருகிறது. இவ்வகையான உறவைப் பெற்றதே உள்ளார்ந்த பண்பாடும் வெளிப்படைப் பண்பாடுமாகும்.

## உட்பண்பாடும் எதிர்ப்பண்பாடும்

இன்றைய நவீன சமுதாயங்கள் ஒவ்வொன்றிலும் பலவகைப் பிரிவினர் அல்லது குழுவினர் உள்ளனர். இவ்வகைப் பிரிவைச் சேர்ந்தோர் அவர்கள் சமுதாயத்தின் அனைத்துப் பண்புகளையும் முழுமையாகக் கொண்டிராமல் பல தனிப்பட்ட பண்புகளை வளர்த்துக் கொண்டு மற்றவர்களிடமிருந்து பிரிந்து காணப்படுவர். இவ்வகைப் பிரிவினரின் பண்பாடே உட்பண்பாடு (subculture) எனப்படும்.

உட்பண்பாட்டின் தன்மையை சில எடுத்துக்காட்டுகள் மூலம் அறியலாம். ஒரு நாட்டில் குடியுரிமை பெற்று வாழும் வேற்று நாட்டவர்கள் அவர்கள் குடியேறிய நாட்டின் பண்பாட்டில் ஒரு பகுதியையும் அவர்களின் சொந்தப் பண்பாட்டின் பெரும் பகுதியையும் இணைத்துக் கொண்டவர்களாய் உள்ளனர். இவ்வாறான வாழ்க்கைமுறை அவர்கள் வாழும் நாட்டு மக்களின் பண்பாட்டிலிருந்து வேறுபட்டதாக அமையும். அவர்களின் அவ்வகைப் பண்பாடு அந்நாட்டின் மொத்தப் பண்பாட்டில் ஓர் உட்பண்பாடாக அமையும்.

ஒவ்வொரு சமுதாயத்திலும் மாணவர்களின் நடத்தை முறைகள், செயல்முறைகள் முதலானவை அச்சமுதாயத்தின் மொத்தப் பண்பாட்டிலிருந்து மாறுபட்டதாக இருப்பதால் அவர்களின் பண்பாடு அச்சமுதாயத்தின் மொத்தப் பண்பாட்டில் ஓர் உட்பண்பாடாக அமைகிறது. அதனை 'மாணவர் உட்பண்பாடு' (student subculture) எனக் கூறலாம். சமுதாயத்தில் அனைத்துப் பிரிவினரின் வாழ்க்கைமுறை ஒரே மாதிரியாக இருப்பதில்லை. செல்வந்தர்களின் வாழ்க்கைமுறை ஏழைகளின் வாழ்க்கை முறையிலிருந்து மாறுபடுகிறது. இருசாராரும் அவரவருக்கென்ற தனிப்பட்ட வாழ்க்கை முறையைக் கொண்டுள்ளனர். ஆகவே இவ்விரு பிரிவினரின் பண்பாடும் தனித்தனி உட்பண்பாடாக அமைகிறது.

ராணுவ வாழ்க்கையானது பொதுமக்களின் வாழ்க்கை முறையிலிருந்து முற்றிலும் மாறுபட்டது. ஒரு தொழிற்சாலையின் பணிமுறை பொதுவாழ்வில் நடைபெறும் பணிமுறையிலிருந்து வேறுபடுகிறது. ஆகவே ராணுவப் பண்பாடும், தொழிற்சாலைப் பண்பாடும் அச்சமுதாயத்தின் மொத்தப்பண்பாட்டின் உட்பண்பாடுகளாகின்றன. குமரப் பருவப் பண்பாடும் (adolescent culture) ஓர் உட்பண்பாட்டின் வகையே. இவை போன்று எண்ணற்ற எடுத்துக்காட்டுகளை அந்தந்தப் பண்பாட்டு அமைப்பிற்கேற்பத் தொகுத்துக் கூறலாம்.

ஒரு சமுதாயத்தின் முதன்மை அல்லது ஆதிக்கப் பண்பாட்டின்கண் (dominant culture) இயங்கும் உட்பண்பாடானது தனித்தன்மையைக் கொண்டது மட்டுமன்றிச் சில வேளைகளில் முதன்மைப் பண்பாட்டிற்கு நேர் எதிராகவும் செயல்படக்கூடியது. இவ்வாறான பண்பாடு எதிர்ப்பண்பாடு (counter culture) எனக் கூறப்பெறும். எடுத்துக்காட்டாக ஓர் இளங்குற்ற நடத்தைக் குழுவானது (delinquent group) தன் சமுதாயத்தின் நெறிமுறைகளையும், விழுமியங்களையும், ஒழுக்க நெறிகளையும், பொதுவான மரபுகளையும் மீறிச் செயல்படுகிறது. இவ்வாறான காலங்களில் அக்குழுவின் செயல்கள் அவர்களின் சமுதாய நலனிற்கு எதிரானவையாக அமைவதால் அவர்களின் பண்பாடு அப்பண்பாட்டின் எதிர்ப்பண்பாடாகிறது.

இன்றைய அமெரிக்கர்களுள் சில குழுவினர் ஆசிய சமய நெறிகளைப் பின்பற்றுகின்றனர். குறிப்பாக, சைவ உணவுமுறை, நீண்டகாலத் தியானம், மணத்துறவு (celibacy) போன்றவற்றைப் பின்பற்றுகின்றனர். அமெரிக்காவில் இன்று வளர்ந்துவரும் 'ஹரேகிருஷ்ணா' இயக்கமும் இவ்வகைக் குழுக்களுள் ஒன்றாகும். அவர்களின் இந்நிலை அமெரிக்காவின் முதன்மைப் பண்பாட்டிலிருந்து வேறுபடுவதோடு அமெரிக்கச் சமய முறையைத் தீவிரமாக ஆதரிப்போருக்கு எதிரானதாகவும் அமைகிறது. ஆகவே அவர்களின் பண்பாடு அமெரிக்கப் பண்பாட்டில் ஓர் எதிர்ப்பண்பாடாக அமைகிறது.

மேலை நாடுகளில் போதை மருந்துகளை உட்கொள்வோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகி வருகிறது. இவ்வகை மருந்துகளை உட்கொள்வோர் அம்மருந்துகளுக்கு அடிமையாகி விடுவதால் அவர்களின் நடத்தைமுறைகள் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டதாக உள்ளது. அதோடு போதை மருந்து உட்கொள்வோர் பண்பாட்டு மரபுகளையும், சட்ட ஒழுங்குகளையும் மீற முற்படுவதால் அவர்களின் நடத்தைமுறை



அவர்களின் சொந்தப் பண்பாட்டிற்கு எதிரானதாக மாறிவிடுகிறது. ஆகவே அவர்கள் சட்டம், ஒழுங்கினைப் பராமரிக்கும் காவல் துறையினரால் கண்காணிக்கப்படும் குழுவினருள் சேர்ந்து விடுகின்றனர். அதனால் போதை மருந்துப் பண்பாடும் (drug culture) ஓர் எதிர்ப்பண்பாடாகக் காணப்படுகிறது.

## பண்பாட்டுப் பொதுமைகள்

பண்பாட்டுப் பொதுமைகள் (cultural universals) என்பது உலகிலுள்ள அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான கூறுகளைக் குறிக்கும். எண்ணற்ற கூறுகள் அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவாக உள்ளன. 250க்கும் மேற்பட்ட பண்பாடுகளின் தரவுகளைக் கொண்டு இனக்குழுவியல் வரைபடம் (ethnographic atlas) தயாரித்த மர்டாக் இவ்வனைத்துப் பண்பாடுகளிலும் இடம்பெற்றுள்ள அறுபதுக்கும் மேற்பட்ட பண்பாட்டுப் பொதுமைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறார்[9]. அவற்றுள் சில அடுத்த பக்கத்தில் பட்டியலிடப்பட்டுள்ளன.

அனைத்துப் பண்பாடுகளுக்கும் பொதுவான பண்பாட்டுப் பொதுமைகள் காணப்படுவதற்குக் காரணம் மனிதனின் அடிப்படைத் தேவைகள் அனைத்துப் பண்பாடுகளிலும்

| | |
|---|---|
| அடக்கம், நாணம் | சமைத்தல் |
| அடுப்பு | சைகைகள் |
| அதிர்ஷ்டம் | சொத்து |
| அழகியல் உணர்வு | தகாப்புணர்ச்சி விலக்கு |
| அறிவியல் | திருமணம் |
| இசை | தொழிற்பகுப்பு |
| இறந்தவர்களுக்காகத் துயருறுதல் | தொன்மங்கள் |
| ஈமச் சடங்குகள் | நடனம் |
| உடல்நலம் | நன்னடத்தை |
| உடலில் வரைதல் கலை | பரிமாற்ற முறைகள் |
| உடை | பாலுறவு |
| உணவு உண்ணும் நேரம் | பூப்புச் சடங்குகள் |
| உணவு விலக்குகள் | போக்குவரத்துச் சாதனங்கள் |

9. G.P. Murdock, "The Common Denominator of Cultures", in *The Science of Man in World Crisis*, ed. by Ralph Linton (New York : Columbia University Press), p. 124

...ஒன்றியத்தன்மையைக் கொண்டிருக்கும். சில வலுவற்ற ஒன்றியத்தன்மையைக் கொண்டிருக்கும். வலுவான ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் பண்பாட்டு மாற்றம் (culture change) குறைவாக ஏற்படும். வலுவற்ற ஒன்றியத்தில் மாற்றங்கள் விரைந்து நிகழும்.

'மனிதனைப் பற்றிய ஆய்வு' (The Study of Man, 1947) என்னும் நூலில் ரால்ஃப் லிண்ட்டன் பண்பாட்டு ஒன்றியத்தைப் பற்றிக் குறிப்பிடும்போது வலுவான ஒன்றியத்தைப் பெற்ற பண்பாடுகளில் பல கூறுகள் செயல் நிலையில் ஒன்றுக்குள் ஒன்றானதாகக் காணப்படும் என்கிறார். மடகாஸ்கர் தீவு மக்களிடம் ஆய்வு செய்த இவர் அத்தீவு மக்கள் மீது குடியேற்ற மக்கள் கிறித்தவத்தைத் திணிக்க முயன்று தோல்வி கண்டதைக் குறிப்பிடுகிறார். மடகாஸ்கர் மக்கள் கிறித்தவ சமயத்தை ஏற்காததற்கு அவர்களின் பண்பாட்டு ஒன்றியம் மிகவும் வலுவாக இருந்ததே காரணம் என்கிறார்.[14] அமெரிக்க இந்தியப் பழங்குடியினராக கொமன்சி மக்களிடம் அதே வகையான ஆய்வினை இவர் மேற்கண்டபோது அப்பகுதிக்கு வந்த வெள்ளையர்களின் தாக்கத்திற்குட்பட்டு கொமன்சியினர் அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டதைக் கண்டார்.[15] அம்மக்களின் பண்பாட்டு ஒன்றியம் வலுவற்ற நிலையில் இருந்ததே அதற்குக் காரணமாகும் என்கிறார் லிண்டன்.

## பண்பாடு ஒரு செயற்பாட்டியல் முறை
### (Culture as Functional System)

பண்பாடு என்பது எண்ணற்ற கூறுகள் ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியம் என்றும் அதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் செயல்நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன என்றும் ஏற்கனவே கண்டோம். இக்கருத்துகளோடு தொடர்புடையவர்கள் பிரானிஸ்லா மாலினோஸ்கியும் ராட்கிளிஃப் பிரௌனும் ஆவார்கள். பண்பாடு, சமுதாயம் ஆகியவற்றின் அமைப்பும் செயல் தன்மையும் எத்தன்மை வாய்ந்தது என்பது குறித்து இவ்விருவரும் ஆராய முற்பட்டதன் பயனாய் விளைந்ததே இக்கருத்துகள் ஆகும். இவர்களின் இக்கருத்துகள் பொதுவாகச் **செயற்பாட்டியல் கொள்கை*** (functionalism) எனக் கூறப்பெறும். மாலினோஸ்கியின் கொள்கையும், இராட்கிளிஃப் பிரௌனின் கொள்கையும் சில வேறுபாடுகளைக் கொண்டுள்ளதால் அவற்றைத் தனித்தனியாகக் காண்போம்.

### மாலினோஸ்கியின் செயற்பாட்டியல்

மாலினோஸ்கி (1884 - 1942) தொடக்கத்தில் பண்பாட்டின் ஒட்டு மொத்தத்தை "உண்மையான வாழ்க்கையின் கணிக்க முடியாத பாங்கு" எனக் கருதினார். பின்னர்ப் பண்பாடு என்பது ஒருவகையான ஒருங்கிணைப்பு நிலையில் உள்ளதாக அறிந்தார். அதை விளக்கும்போது "– எந்த ஒரு பண்பாட்டிலும் அதன் வழக்கங்கள், பயன்படும் பொருள்கள், கருத்துகள், நம்பிக்கைகள் போன்ற அனைத்துக் கூறுகளும் மனிதனின் தேவைகளை நிறைவு செய்வதாக உள்ளன; ஏதோ ஒன்றை முழுமை பெறச் செய்யும் நோக்கத்தைக் கொண்டுள்ளன; இவை அனைத்தும் பண்பாடு என்ற அமைப்பில் பிரிக்க முடியாத உறுப்புகளாக உள்ளன..." என முடிவு செய்தார்.[6]

பண்பாடு பல கூறுகள் ஒருங்கிணைந்த முழுமை (whole) எனக் கொள்வார் மாலினோஸ்கி. அந்த முழுமையை அதன் செயற்பாடுகளின் மூலம் அலசி ஆராய்வதே மாலினோஸ்கியின் அடிப்படைக் கொள்கை. இவரது கருத்துப்படி ஒரு சமுதாயத்தின் பண்பாடு என்பது அதன் உறுப்பினர்களின் அனைத்துத் தேவைகளையும், உயிரியல், உளவியல் உந்துதல்களையும் முழுமையாக நிறைவு செய்ய பல நிறுவனங்களைக் கொண்ட அமைப்பாகும். இவ்வமைப்பில் பண்பாட்டு நிறுவனங்கள் மக்களின் தேவைகளுக்கு ஈடு கொடுக்கும் முறையில் இணக்கம் பெற்றுச் செயல்படுகின்றன. அவ்வாறே மக்களும் அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ஒருவரோடு ஒருவர் இணைந்து நிறுவன ரீதியாகச் செயல்படுகின்றனர்.[7]

பண்பாட்டுக் கூறுகளின் ஒருங்கிணைப்பும் செயற்பாடும் அந்தந்தப் பண்பாட்டினரின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்ற கருத்தே இவரது செயற்பாட்டியலின் மையக் கருத்தாகும். இதனை விளக்கும்போது இரண்டு கருத்துகளை

14 Ralph Linton, *The Study of Man* (New York: Appleton, 1947), pp. 364 - 65.

15 Ibid, p. 358.

* செயற்பாட்டியற் கொள்கை என்பது இங்குச்சுருக்கமாகச் 'செயற்பாட்டியல்' எனப் பயன்படுத்தப்படுகிறது.

6 B. Malinowski, "Anthropology", *Encyclopaedia Britannica*, Supplementary Vol. 1 to the 13th edition, pp. 131 - 42.

7 B. Malinowski, *A Scientific Theory of Culture*, op. cit., p. 47.

Scanned by TapScanner

தேவைகள் அனைத்துப்

இரண்டாம் நிலைத் தேவைகள்

அறிமுகப்படுத்தப்பட

பண்பாட்டு

தேவைகளையும்

Scanned by TapScanner

படுகின்றன; தனித்தனி வகையான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமுதாய நோக்கத்தில் தொடங்கிச் செயல் என்ற இறுதி நிலையின் வாயிலாக வெளிப்படுவதால் எந்த ஒரு கூறையும் தனியாகப் பிரித்து ஆராயக் கூடாது.[20]

இங்குச் 'செயல்' என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு வரையறையைக் கொண்ட சொல்லாக விளங்குகிறது. இது ஒருவர் செய்யும் வேலையைக் குறிப்பதில்லை. தேவையை முன்னிட்டு ஒருவர் மேற்கொள்ளும் பணியின் (activity) மூலம் அத்தேவை நிறைவேற்றப்படுமானால் அதனால் ஏற்படும் நிறைவே அப்பணியின் 'செயல்' (function) ஆகும்.[21]

ஆகவே, ஒரு செயலைப் புரிந்துகொள்ளுதல் என்பது அப்பண்பாட்டின் முழுமைக்குள் உள்ள பல கூறுகளின் தொடர்பையும் அதன் உறவுகளையும் புரிந்து கொள்வதாகும். மேற்கூறிய திட்டத்தின்படி ஒவ்வொரு செயலிலும் எவ்வகையான மக்கள் ஈடுபடுகிறார்கள்? எந்தெந்தக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன? எந்தெந்தப் பணிகள் நடைபெறுகின்றன? என்பதை முழுமை நிலையில் பகுத்தாய்வதே அச்செயலின் செயற்பாட்டியலைப் புரிந்து கொள்வதற்கான அணுகுமுறையாகும்.

ஒரு செயலின் தொடர் நிகழ்வுகளை நன்கு புரிந்து கொண்டபின் அச்செயலைப் பருநிலைக்குக் கொண்டு சென்று பிற செயல்களோடு தொடர்புபடுத்த வேண்டியது செயற்பாட்டுப் பகுப்பாய்வின் கருப்பொருளாகும். ஒரு செயலைப் பருநிலைக்குக் கொண்டு செல்வது எப்படி? ஒரு செயலோடு தொடர்புடைய தொடர் நிகழ்வுகள் அனைத்தையும் முழுமையாக எடுத்துக் கொள்வதையே இது குறிக்கும். அதாவது ஒரு செயலோடு தொடர்புடைய கூறுகளை ஒரு நிறுவனமாக (institution) எடுத்துக்கொள்வதாகும்.

ஒரு பண்பாட்டைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவர்களின் தேவையை ஈட்டும்போது அவர்கள் மேற்கொள்ளும் செயல்களும் நடத்தைமுறைகளும் ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்பு ரீதியாக ஒன்றுபடும். இவ்வாறு தொடர்புடைய கூறுகள் ஒரு முறைப்படுத்தப்பட்ட அமைப்புகளாக அமைவதே அப்பண்பாட்டின் நிறுவனங்களாகின்றன. மாலினோஸ்கியின் திட்டத்தில் நிறுவனங்கள் என்பவை 'செயலளவில் தனித்துநிற்கும் கூறுகள்' (functional isolates) ஆகும். இவரது முறையில் திருமணம், சமயச்சடங்கு, சமுதாயக் குழுக்கள், குடும்பம், சமுதாயச் செயல்கள்,

20 Ibid, pp. 39 - 52.

21 Ibid, pp. 38 - 40.

மரபு வழியில் கற்றுக்கொள்ளப்பட்ட நடத்தை முறை, மொழி போன்ற செயலளவில் தனித்து நிற்கும் எந்த ஒரு கூறையும் நிறுவனம் எனக் குறிப்பிடுகிறார். பண்பாட்டிலுள்ள நிறுவனங்கள் அனைத்தும் பண்பாடு என்னும் முழுமைக்குள் எவ்வாறு இணைக்கம் பெற்றுச் செயல்படுகின்றன என்று அறிவதற்கு அனைத்து நிறுவனங்களையும் முழுமையாக அறிய வேண்டுமென்பார் மாலினோஸ்கி. அதற்கு முதலில் தனி நிறுவனங்களை முழுமையாக அறிய வேண்டும். அதன் பின்னரே ஒரு நிறுவனத்தைப் பிற தொடர்புடைய நிறுவனங்களோடு பொருத்திப் பார்க்க வேண்டும்.

மாலினோஸ்கி ஆஸ்திரேலிய முதுகுடிக் (aborigines) குடும்பங்களின் செயல்பாட்டினைச் செயற்பாட்டியல் நோக்கில் ஆராயும் போது நிறுவனங்களை எவ்வாறு விளக்க வேண்டுமென்று கூறுகிறார்.[22] நிறுவனங்களை அவை ஆற்றும் செயல்களைக் கொண்டு முதலில் வரையறை செய்ய வேண்டும். அதன் பின்னர் சமுதாய அமைப்பில் ஒவ்வொரு நிறுவனமும் சமுதாய வாழ்வு என்னும் முழுமைக்குள் எவ்வகையானப் பங்களிப்பிற்கு உத்தரவாதம் தருகிறது என்பதைக் காண வேண்டும். அவ்வாறு அதனுடைய உத்திரவாதத்திற்குப் பணியாற்றும்போது அவை எக்கூறுகளுடன் சேருகின்றன; எதன் உறவுகளைப் பெறுகின்றன என்பதையும் உய்த்துணர்தல் வேண்டும்.

மேற்கூறியவற்றை ஆராயும்போது முதலில் தனி நிறுவனங்களை அலசிப்பார்க்க வேண்டும். ஒரு தனி நிறுவனத்திற்குள் என்னென்ன கூறுகள் உள்ளன? அவை எவ்வாறு மற்றவையோடு உறவு பெறுகின்றன? அவற்றை எவ்வாறு ஆராய வேண்டும்? என்பதற்கு மாலினோஸ்கி ஒரு வாய்பாட்டைக் கூறுகிறார். அவ்வாய்பாடு அனைத்துப் பண்பாட்டிற்கும் பொதுவானதாக அமையுமாறு வகுத்துள்ளார். மாலினோஸ்கியின் பார்வையில் அனைத்துப் பண்பாடுகளிலும் உள்ள நிறுவனங்கள் பின்வரும் ஆறு பொதுப் பண்புகளை அல்லது கூறுகளைக் (elements) கொண்டுள்ளதால் அக்கூறுகளை மட்டும் எடுத்துக் கொண்டு ஆராய்ந்தால் ஒரு நிறுவனத்தின் செயலுறவுகளைப் புரிந்து கொள்வதோடு, சமுதாயத்தின் ஒருங்கிணைப்பில் அது கொண்டுள்ள பங்கினையும் அறிய முடியும்.

1) திட்டம் (charter) : நிறுவனத்தின் நோக்கமென்ன? அதன் இலக்குகள் என்னென்ன?

22 B. Malinowski, *The Family among the Australian Aborigines* (London : University of London Press, 1913) p. 303.

Scanned by TapScanner

2) **ஆட்கள் (personal) :** ஒரு நிறுவனத்தில் யார் யார் எல்லாம் பங்கு கொள்கிறார்கள்? எவ்வளவு பேர் பங்கு கொள்கிறார்கள்?

3) **நெறிமுறைகள் (norms) :** உறுப்பினர்களின் செயல்களை ஒழுங்காகவும் முறைப்படியாகவும் இயக்கும் நெறிமுறைகள் என்னென்ன?

4) **கருவிகள் (apparatus) :** இலக்குகளை அடையும் நோக்கத்தில் செயல்படும்போது அச்செயலை ஒழுங்குபடுத்தியும் முறைப்படுத்தியும் செய்வதற்கு உதவும் கருவிகள் அல்லது பிற வசதிகள் என்னென்ன?

5) **பணி (activity) :** செய்ய வேண்டிய பணிகளும், முயற்சிகளும் எவ்வாறு பகுக்கப்படுகின்றன? யார் யார் எல்லாம் அதைச் செய்கிறார்கள்?

6) **செயல் (function) :** ஒரு நிறுவன ரீதியில் நின்று செயல்படும் போது அது எந்த வகையான அடிப்படை ஆதாரங்களை நிறைவு செய்கின்றது?

மேற்குறிப்பிட்டுள்ள ஆறு கூறுகளும் பண்பாட்டிடை (cross - cultural) நிலையில் ஆராய்வதற்கு உகந்தவை. ஆகவே எந்தவகையான சமுதாயச் செயற்பாடுகளையும், இயக்கத் தன்மைகளையும் நிறுவன ரீதியாக எடுத்துக்கொண்டு அதை அந்த ஆறு பரிமாணங்களில் ஆராய முற்பட்டோமானால் அப்பண்பாட்டின் செயற்பாட்டியலை உள்நிலையில் நின்று ஆராயவும், பிற பண்பாடுகளோடு ஒப்பிட்டுப்பார்க்கவும் ஒரு பொதுவான அளவுகோலை ஏற்படுத்திக் கொண்டவர்களாவோம் என்பார் மாலினோஸ்கி. ஒரு பண்பாட்டின் முழுச் செயற்பாட்டியலை நன்கு விளக்கும் நிலையைப் பெற வேண்டுமானால் மிக நீண்ட காலக் களப்பணியை ஆழ்நிலையில் மேற்கொள்ள வேண்டியது அவசியமென்பார் மாலினோஸ்கி.

### ராட்கிளிஃப் பிரௌனின் செயற்பாட்டியல்

மாலினோஸ்கியின் கொள்கை மக்களின் தேவைகளுக்கும் பண்பாட்டுக் கூறுகளுக்கும் உள்ள உறவுகளை வெளிபடுத்திக் காட்டுவதை மையமாகக் கொண்டுள்ளது. மக்களின் தேவைகள் தனித்தனியாகப் பிரித்துக் காணப்படாமல் ஒன்றையொன்று சார்ந்தே காணப்படுகின்றன. அவ்வாறே அத்தேவைகளை நிறைவேற்றும் பண்பாட்டுக் கூறுகளும் ஒன்றோடொன்று இணைந்து செயல்பட்டு அத்தேவைகள் அனைத்தையும் நிறைவு செய்கின்றன. தேவைகளின் அடிப்படையிலேயே பண்பாட்டுக் கூறுகள் முழுமையோடு ஒன்றின்ணகின்றன என்கிறார் மாலினோஸ்கி. ஆனால் ராட்கிளிஃப் பிரௌன் (1881 - 1955) மாலினோஸ்கியின் கருத்தை மறுக்கிறார். மாலினோஸ்கி குறிப்பிடும் செயலளவில் தனித்து நிற்கும் கூறுகள் தனிமனிதர்களின் தேவைகளுக்காகச் செயல்படுவது கிடையாது. அவை சமுதாயத்தின் மொத்த அமைப்பை நிலைப்படுத்து வதற்காகச் செயல்படுகின்றன என்கிறார்.



ராட்கிளிஃப் பிரௌன் அவரது செயற்பாட்டியற் கொள்கையை விவரிக்கும் போது செயலைவிட அமைப்பிற்கு (structure) முக்கியத்துவம் தருகிறார். ஏனெனில், சமுதாய அமைப்பைத் தெரிந்து கொண்டாலொழியச் செயற்பாட்டைப் புரிந்து கொள்ள முடியாது என்கிறார். அமைப்பு பற்றி விளக்குவதற்கு இவர் ஓர் உயிரியை (organism) எடுத்துக்காட்டாகக் கொள்கிறார்.

ராட்கிளிஃப் பிரௌனின் கருத்துப்படி உயிரி என்பது பெருந்திரளான உயிரணுக்களையும் (cells) அவற்றோடு தொடர்புற்ற உயிர் நீரையும் கொண்ட ஒட்டுமொத்தத் தொகுப்பாகும். இதனுள் உள்ள உயிரணுக்களும், அவற்றின் உயிர் நீர் வகைகளும் முறைப்படுத்தப்பட்ட, வரையறுக்கப்பட்ட செயலுறவுகளைக் கொண்டுள்ளன. இவையனைத்தும் உயிரியின் வாழ்விற்காக ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு 'அமைப்பு' பற்றி விளக்குகிறார். அமைப்பு என்றால் என்ன? என்பதற்கு இவர் தரும் விளக்கம், ஓர் உயிரியின் உடலையோ உருவத்தையோ 'அமைப்பு' என்னும் சொல் குறிப்பிடாது. உயிரியின் உடலிலுள்ள அலகுகள் (உயிரணுக்கள், மூலக்கூறுகள் (molecules) போன்ற உட்கூறுகள்) அதன் இயக்கத்திற்கு எவ்வாறான உறவைப் பெறுகின்றன என்பதே அதன் அமைப்பாகும்.[23]

ஓர் உயிரி அது வாழுங்காலம் முழுவதும் தொடர்ந்து பல அலகுகளை இழந்துகொண்டும், புதியனவற்றை ஏற்படுத்திக் கொண்டும் இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட அளவில் அந்த அமைப்பு கட்டிக்காக்கப்படுகிறது. இதுவே அந்த அமைப்பின் தொடர்ச்சி (structural continuity) எனப்படும். எடுத்துக்காட்டாக, மூச்சுவிடுதல், கழிவுப் பொருள்களை வெளியேற்றுதல் நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போரிடுதல் முதலான பிற உடற் செயல்களின்போது உயிரி பல உயிரணுக்களை இழக்க நேரிடுகிறது. அதே நேரத்தில் உணவுச் செரிமானம், ரத்தச் சுத்திகரிப்பு, வளர்சிதை மாற்றம்

23 A.R. Radcliffe - Brown, "On the Concept of Function in Social Science", *American Anthropologist*, 1935, 37: 394 - 95

Scanned by TapScanner

முதலான பிற உடற் செல்களின் மூலம் புதிய புதிய உயிரணுக்களை ஏற்படுத்திக் கொள்கிறது. ஆகவே நீண்ட கால வாழ்வைப் பெற்றுள்ள ஓர் உயிரியை உற்றுநோக்கும்போது அதனுள் உள்ள உயிரணுக்கள் நிலையானதாக இல்லை. காலத்திற்கேற்ப உயிரணுக்கள் அழிவதும் புதியவை ஏற்படுவதுமாக உள்ளன. ஆனால் அந்த உயிரி தொடர்ந்து உயிரோடு வாழ்கிறது. உயிரியின் அமைப்புத் தொடர்ந்து பராமரிக்கப்படுகிறது. இந்த 'அமைப்புத் தொடர்ச்சி' நிலைபெற்றிருப்பதற்காக நடக்கும் நிகழ்வே 'வாழ்க்கை' யாகும்.[24]

உயிரியின் அமைப்புத் தொடர்ச்சிக்கடுத்து அதன் செயல் ஒருங்கிணைப்பை ராட்கிளிஃப் பிரௌன் விளக்குகிறார். உயிரினுள் பல்வேறு உறுப்புகள் (அலகுகள்) இணைந்து இருக்கும் படியான அமைப்பு உள்ளது. அந்த உறுப்புகள் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டவையாய் ஒருங்கிணைந்துள்ளன. அதனால் உயிரி பல அலகுகள் இணைந்த ஒரு முழுமைத் தொகுதியாகக் காணப்படுகிறது. உயிரி என்னும் முழுமைக்குள் உள்ள அலகுகள் (உறுப்புகள்) ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பணியைத் தொடர்ந்து திருப்பித் திருப்பிச் செய்துகொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாக, மூச்சுவிடுதல், செரிமானம், இரத்தத்தைத் தூய்மைப்படுத்தல் முதலான பல்வேறு பணிகளை இடைவிடாமல் தொடர்ந்து செய்துகொண்டிருக்கும். இப்பணிகளையும் அவை பரஸ்பர உறவு நிலையில் நின்று செய்கின்றன. மூச்சு விடுதல் நுரையீரலோடும், இரத்த ஓட்டம் இதயத்தோடும், கழிவு நீக்கம் சிறுநீரகத்தோடும் தொடர்புடையவை என்று வெளிப்படையாகத் தோன்றினாலும் இதன் உள்ளார்ந்த செயலைத் தவறித்தோமானால் இம்மூன்றிற்கும் உள்ள ஒருங்கிணைந்த செயலுறவைப் புரிந்து கொள்ள முடியும். இம்மூன்றும் ஒன்றிணைந்து செயல்படாவிட்டால் அதன் செயல்கள் நடைபெறாது. இவ்வாறு உயிரினுள் உள்ள அலகுகள் ஒருங்கிணைந்து பங்காற்றுவதன் மூலம் அந்த உயிரி உயிரோடு இயங்கவும், நிலைபெற்று வாழவும் முடிகிறது. அந்த அலகுகளின் பங்குகளே அவற்றின் செயற்பாடுகள் ஆகும்.

உயிரியின் வாழ்க்கையைப் போன்றே சமுதாய வாழ்க்கையைக் காணும்போது அதனுள் பல்வேறு அலகுகள் இணைந்திருக்கும் படியான அமைப்பு உள்ளதைக் காண முடியும். சமுதாய அமைப்பிற்குள் தனிமனிதர்கள் முதன்மையான அலகுகளாக உள்ளனர். இவர்கள் நிலையான சமுதாய உறவுகள், நெறிமுறைகள், விழுமியங்கள், செயல் பங்குகள் (functional roles) முதலானவை

24 A.R. Radcliffe - Brown, *Structure and Function in Primitive Society*, (London : Routledge & Kegan Paul, (1952) 1979 reprint).



மூலம் சமுதாயம் என்னும் முழுமைக்குள் ஒரு முறைப்படுத்தப்பட்ட நிலையில் பிணைக்கப்பட்டுள்ளனர். உயிரியின் உடலமைப்புப் போன்றே சமுதாயத்தின் அமைப்பும் அதனுள் உள்ள அலகுகள் அழியும்போது பாதிக்கப்படாது. இறப்பு அல்லது பிற நிகழ்வுகள் மூலம் தனிமனிதர்கள் சமுதாயத்திலிருந்து மறைந்து போகலாம். அதே நேரத்தில் பிறப்பு மூலம் புதிய உறுப்பினர்கள் சமுதாயத்திற்குள் தொடர்ந்து வந்து சேருவர். போவோரும் வருவோரும் என்பது ஒரு தொடர்ச்சியான செயலாக இருந்தாலும் சமுதாய அமைப்பின் தொடர்ச்சியானது (structural continuity) என்றும் சிதையாமல், கட்டுடையாமல் நிலைத்திருக்கிறது. இத்தொடர்ச்சி நிலைபெற நடைபெறும் நிகழ்வே 'சமுதாயவாழ்க்கை' யாகும். ஒரு சமூகத்தின் (community) சமுதாய வாழ்க்கையே (social life) அச்சமூகத்தின் அமைப்பின் செயல் என்று வரையறை செய்வார் ராட்கிளிஃப் பிரௌன்.[25] இச்சமுதாய வாழ்வில் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட சில பணிகளை இடைவிடாமல் தொடர்ந்து திரும்பத் திரும்பச் செய்துகொண்டிருப்பர். சமுதாய வாழ்வில் ஒரு பகுதியாக விளங்கும் எந்தத் தொடர் நிகழ்வுகளும் (எ-டு. இறந்தவருக்குச் செய்யும் ஈமச் சடங்குகள், குற்றச் செயலுக்கு வழங்கப்படும் தண்டனை, திருமணம், பூப்பு நீராட்டு விழா, சமயச் சடங்குகள், விழாக்கள் அல்லது இதுபோன்ற பிற நிகழ்வுகள்) அச்சமுதாயத்தின் நிலைபேறுடைமைக்கு வகைசெய்கின்றன. பல்வேறு உறுப்பினர்கள் செய்யும் இப்பணிகள் அனைத்தும் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்து பரஸ்பர உறவுநிலையில் அமைந்து சமுதாய வாழ்வு இயங்கவும், நிலைபெற்று நிற்கவும் பங்காற்றுகின்றன. இவ்வாறு ஒவ்வோர் உறுப்பினரும் ஏற்றுள்ள பங்கே அவர்களின் செயல்களாகும்.[26] ராட்கிளிஃப் பிரௌன் 'செயல்' பற்றிய கருத்தைப் பயன்படுத்தும்போது இது மக்களின் எதிர்பார்ப்புக்கும் நிறுவனத்திற்கும் இடையே நிகழும் பங்குகளின் மூலம் விளைவதாகும் எனக் குறிப்பிடுவார். இக்கருத்து தர்க்கைமிடமிருந்து கடன் பெற்றதாகும்.

சமுதாயத்தில் ஒரு செயல் திரும்பத் திரும்ப நடைபெறுவதை ராட்கிளிஃப் பிரௌன் பின்வருமாறு குறிப்பிடுவார். ஒவ்வோர் அலகும் திரும்பத் திரும்ப மேற்கொள்ளும் தொடர்ச்சியான செயல்கள், அச்சமுதாயம் என்னும் முழுமையை நிலைப்படுத்த நடைபெறும் பராமரிப்புச் செயல்களாகும் என்கிறார்.[27]

25 Ibid. p. 180

26 Ibid, p. 181

27 Ibid, pp. 183 - 84.

சமுதாயத்தின் உட்கூறுகளுக்கிடையே நிலவும் உறவுகள் (அமைப்புகள்) எவ்வாறு சமுதாயம் என்னும் முழுமையை நிலைப்படுத்துகிறது என்பதில் ராட்கிளிஃப் பிரௌன் சமுதாய அமைப்பிற்குச் சிறப்பிடம் கொடுத்ததால் இவரது கொள்கை 'அமைப்பியற் - செயற்பாட்டியற்கொள்கை' (structural functionalism) எனக் கூறப்பெறும். மாலினோஸ்கி, பண்பாட்டுக் கூறுகளுக்கும் தனிமனிதர்களின் தேவைகளுக்கும் உள்ள உறவை மையமாகக் கொண்டிருந்ததால் இவரது கொள்கை பொதுவாக 'செயற்பாட்டியற் கொள்கை' என்றும், ஒரு சிலரால் 'தனிமனிதச் செயற்பாட்டியற் கொள்கை' (individual functionalism) என்றும் வழங்கப்பெறும்.

மாலினோஸ்கியும் ராட்கிளிஃப் பிரௌனும் மாறுபட்ட கருத்துகளைக் கொண்டிருந்தாலும் இவ்விருவரும் சில கருத்துகளில் உடன்பட்டவர்கள். சமுதாயத்திலுள்ள நிறுவனங்கள், மக்களின் பங்குகள், உறவுகள் அனைத்தும் சமுதாயம் என்னும் முழுமைக்குள் இணைந்து ஒன்றாகச் செயல்படுவதால் அவற்றை அந்தந்தச் சூழலோடு மட்டுமே ஆராய வேண்டும் என்று இருவரும் கூறுவர். ஒரு சமுதாயத்தின் செயற்பாட்டியல் விளக்கம் அது ஆய்வு செய்த காலத்திற்கு மட்டுமானது. ஏனெனில் செயற்பாட்டியல் ஆய்வுகள் தளப்பார்வையுடையவை (synchronic). பல கால கட்டங்களை உள்ளடக்கிய காலப்பார்வை (diachronic) இதில் இடம்பெறாது.

ஒவ்வொரு குறிப்பிட்ட காலகட்டத்திலும் ஆய்வு செய்யும் போது சமுதாயத்தின் அனைத்துக் கூறுகளும் ஏதோ ஒருவகையான செயலைக் கொண்டதாக இருக்கும். செயலற்ற கூறுகள் இடம்பெறுவதில்லை. அவ்வாறு செயலற்ற கூறுகள் இடம்பெற்றுள்ளன எனக் கூறுவது ஆய்வாளர் சமுதாய அமைப்பினை நன்கு உற்றுநோக்கவில்லை என்பதையே குறிக்கும் என மாலினோஸ்கியும், ராட்கிளிஃப் பிரௌனும் கூறுவர்.

செயற்பாட்டியலின் அடுத்த நிலை சமுதாயத்தின் சமநிலையைப் (equilibrium) பற்றியது. இக்கருத்துப்படி சமுதாயம் என்பது ஒரு நிரந்தர அமைப்பைக் கொண்டதாகவும், அந்த அமைப்பின் இயக்கம் எப்போதும் சமநிலையைக் கொண்டதாகவும் உள்ளது. சமுதாயத்தின் உள் அலகுகளுக் கிடையே (சமுதாயக் கூறுகள்) எப்போதும் ஒரு சமநிலையில் இருக்கும். ஆனால் சமுதாய அமைப்பிற்குள்ளேயும் வெளியேயும் உள்ள கூறுகளில் இச்சமநிலை பாதிக்கப்படக் கூடும். அவ்வாறான சூழலில் சமுதாய அமைப்பிற்குள் நிலவும் சில 'இயக்கப்பாடுகள்' (mechanisms) அப்போதைய மாறுபட்ட சூழலிற்கேற்ப அதைச் சரிசெய்து மீண்டும் சமநிலையை ஏற்படுத்தும். அதற்கடுத்தும் அதன் சமநிலை



பாதிக்கப்பட்டால் அதை மீண்டும் சமநிலையில் தூக்கி நிறுத்தக்கூடிய 'வலுவான இயக்கப்பாடுகள்' சமுதாயத்தில் உள்ளன. அவ்வகையான இயக்கப்பாடுகளின் மூலம் சமுதாயம் அதன் சமன்பாட்டு நிலையைத் தக்க வைத்துக் கொள்கிறது.

நவகோ பழங்குடிகளிடையே சூனியம் (witchcraft) எவ்வாறு ஒரு வலுவான இயக்கப்பாடாக விளங்குகிறது என்பதை குளுக்கான் (1944) விவரிக்கிறார். இம்மக்களின் வாழ்வில் திருமணத்திற்குப்பின் பிறன்மனை புணர்தல் (adultery) ஒரு வஞ்சகச் செயலாகக் கருதப் படுகிறது. அவ்வாறு நிகழும்போது கால்வழிக் குழுக்களிடையே (lineage groups) கலகம் ஏற்பட்டு அமைதி குலைகிறது. இக்கலகத்தால் ஏற்படும் சமூகக் கொந்தளிப்பு சமூகக் கட்டுப்பாடு என்னும் சமநிலையைப் பெரிதும் பாதிக்கிறது. அவ்வாறு பிறன்மனை புணர்தல் நிகழ்ந்துவிட்டால் ஏற்படும் கொந்தளிப்பைப் பழங்குடித் தலைவன் குறுக்கிட்டு அச்செயலின் தன்மைக்கேற்ப தண்டம் வழங்கி நிலைமையைச் சமாளிக்கிறார். அதன்மூலம் சமூக ஒழுங்கு மீண்டும் சமநிலையை அடைகிறது. இங்குத் தலைவனின் குறுக்கிடும், தண்டம் வழங்குதலும் இன்றியமையாத இயக்கப்பாடுகளாகச் செயல்படுகின்றன. அதற்குப் பின்னும் இந்நிகழ்வு ஏற்பட்டால் அப்பெண்ணின் கணவன் அவனுக்குச் சூனியம் வைத்து தன் மனவெழுச்சியைத் தணித்துக் கொள்வான். சூனியம் கடுமையானவிளைவுகளை ஏற்படுத்துமாதலால் முதல்முறை தண்டிக்கப்பட்டவன் மீண்டும் அச்செயலில் ஈடுபடுவதைப் பெரும்பாலும் தவிர்த்துக்கொள்கிறான்.[28] நவகோ சமுதாயத்தில் சூனியம் ஒரு வலுவான இயக்கப்பாடாக விளங்குகிறது என்பது இதன்மூலம் அறியப்பெறும். இதைப் போன்று பல எடுத்துக்காட்டுகள் கூறலாம்.

மாலினோஸ்கி, ராட்கிளிஃப் பிரௌன் ஆகியோரின் கொள்கைகள் சமுதாயப் பண்பாட்டு அமைப்புகளைப் புரிந்துகொள்வதில் பெரும் உள்ளொளியைத் தந்தன என்பதில் சிறிதும் ஐயமில்லை. இருப்பினும் இவர்களுக்கடுத்து வந்த அறிஞர்கள் அவர்களின் கொள்கைகளில் இருந்த குறைகளைக் களைந்து வலுவடையச் செய்தனர். இவர்களுள் சமுதாயவியலாரான இராபர்ட் கிங் மெர்ட்டனும் ஒருவர்.

மெர்ட்டனுக்கு முன் செயற்பாட்டியலில் ஒரு சமுதாயக் கூறின் வெளிப்படையான செயலை (manifest function) மட்டும் கருத்தில் கொண்டு அதன் செயற்பாட்டை ஆராயும் போக்கு

28 Clyde Kluckhohn, *Navaho Witchcraft* (Harvard University, Peabody Museum of American Archaeology and Ethnology, 1944), p. 46.

இருந்தது. சமுதாயத்தில் எந்தக் காரணத்திற்காக, நோக்கத்திற்காக ஒரு சமுதாயக் கூறு ஏற்பட்டதோ அக்காரணத்தையும், நோக்கத்தையும் நிறைவேற்றும் வகையில் அக்கூறு செயற்படுகிறதா என்பதை ஆராய்ந்து வந்தார்கள். ஆனால் மெர்ட்டன் இவ்வகையான ஆய்வுப் போக்கில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தினார். இவரது 'சமுதாயக் கொள்கையும் சமுதாய அமைப்பும்' (Social Theory and Social Structure, 1959) நூலில் இது பற்றி விரிவாக எழுதுகிறார். சமுதாயக் கூறுகளின் செயற்பாட்டைப் பற்றிக் குறிப்பிடும் போது, ஒரு சமுதாயக் கூறானது ஒரு குறிப்பிட்ட செயலை மட்டும் கொண்டிருக்கவில்லை எனக் கூறுகிறார்.[29] அதாவது வெளிப்படையான செயலை மட்டும் கொண்டிருக்கவில்லை என்கிறார். ஒவ்வொரு சமுதாயக் கூறும் வெளிப்படையான ஒரு செயலையும் உள்ளார்ந்த நிலையில் வேறொரு செயலையும் கொண்டிருக்கும். ஒரு சமுதாயக் கூறு செயல்படும்போது அதன் உள்ளார்ந்த செயல் (latent function) வெளிப்படையாகத் தோன்றாமல் அச்செயலின் மறைமுகப் பகுதியில் ஆழ்நிலையில் புதைந்து கிடக்கும். ஆகவே ஒரு கூறு செயல்படும்போது அதனை ஆழ்நிலையில் நுணுகிப் பார்க்கும்போதே அதன் உள்ளார்ந்த செயல் வெளிப்படும். இந்த உள்ளார்ந்த செயல் அச்சமுதாயக் கூறு எக்காரணத்திற்காக, நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளதோ அச்செயலை ஒட்டி அமையாமல் இருக்கும். இருப்பினும் அச்சமுதாயக் கூறுக்கு மேலுமொரு பொருளைச் சேர்ப்பதற்காகப் பங்காற்றும்.[30]

மெர்ட்டனின் 'வெளிப்படைச் செயல்', 'உள்ளார்ந்த செயல்' ஆகிய இரு கருத்தாக்கங்களையும் ஓர் எடுத்துக்காட்டு மூலம் அறியலாம். தமிழகச் சிற்றூர்ப் பகுதிகளில் வறட்சிக் காலத்தின்போது மக்கள் மழை பெற வேண்டி மாரியம்மனுக்குக் கூழ் ஊற்றிக் கூத்து நடத்துகின்றனர். அமெரிக்க இந்தியப் பழங்குடிகளான ஹோப்பியும் (Hopi) பிற பழங்குடிகளும் மழை வேண்டி மழை நடன (rain dance) விழாவைக் கொண்டாடுகின்றனர். இவ்வகை விழாக்களின் வெளிப்படைச் செயல் மழை வேண்டுவதாக இருந்தாலும் இது ஓர் உள்ளார்ந்த செயலை மறைமுகமாகச் செய்கிறது. இந்நிகழ்வைச் செயற்பாட்டியல் கண் கொண்டு நுணுகிப் பார்த்தால் அதன் உள்ளார்ந்த செயல் (மறைமுகச்செயல்) வெளிப்படும். மக்களின் விருப்பம் மழை பெறுவதை மையமாகக் கொண்டிருந்தாலும் இன்னலை (வறட்சி)

29 Robert K. Merton, *Social Theory and Social Structure* (Glencoe, Illinois: The Free Press, 1957), p. 49.

30 Ibid, pp. 48 - 52.



எதிர்கொள்ளும் போது மக்கள் அனைவரும் ஒன்றுபடுகின்றனர் என்பதையும், பொதுவான முயற்சியின் போது மக்கள் வேறுபாடுகளை மறந்து ஒன்று சேருகின்றனர் என்பதையும், குழுவாகச் சேர்ந்து செயல்படுவதன் மூலம் தங்கள் எதிர்பார்ப்புகளை எட்டமுடிகிறது என்பதையும் இந்நிகழ்ச்சி சுட்டிக்காட்டுகிறது.

ஒரு குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனை ஓர் எதிர் நடவடிக்கை என்றும், பழிவாங்கும் செயல் என்றும் வெளிப்படையாகத் தோன்றினாலும் அதன் உள்ளார்ந்த செயல் வேறொன்றாக உள்ளது. தண்டனை வழங்குவது மூலம் சமுதாயம் போற்றிக் காக்கும் உறுதிப்பாடுகள் (solidarity), விழுமியங்கள், நெறிமுறைகள், எதிர்பார்ப்புகள், நடத்தை முறைகள், ஒழுக்க முறைகள் போன்றவை நசுக்கப்படாமல் கட்டிக்காக்கப்படுகின்றன. இவ்வாறு சமுதாயக் கூறுகளின் செயல்கள் இருவகைச் செயல்களைப் பெற்றுள்ளன என்பதை வெளிப்படுத்திக் காட்டலாம்.

செயற்பாட்டியலில் மேலுமொரு வாதம் இடம்பெறுகிறது. அதாவது, செயல் நிலையிலுள்ள ஒரு முழுமையில் தவிர்க்கக் கூடிய கூறுகள் ஒன்றுமிராது என்றும் அனைத்துக் கூறுகளும் முழுமையின் இயக்கத்திற்கு உதவியாக உள்ளன என்றும் கூறுவதாகும். மாலினோவ்ஸ்கியும், இராட்கிளிஃப்ரௌனும் கொள்கை நிலையில் வேறுபட்டவர்கள் என்றாலுங்கூட இக்கருத்தில் ஒன்றுபடுகின்றனர். செயலற்ற கூறுகள் முழுமைக்குள் இடம் பெறவில்லை; அவ்வாறு இடம்பெற்றுள்ளன எனக் கூறுவது ஆய்வாளர் நுணுகிப் பார்க்கும் திறனை வளர்த்துக் கொள்ளவில்லை என்பதையே குறிக்கும் என இவ்விருவரும் கூறுவர்.

ஒரு முழுமைக்குள் செயலற்ற கூறுகள் இல்லை என்றால் வறுமை, போர், குற்றம், இதைப்போன்ற பிற கூறுகள் அனைத்தும் அதற்கென ஒரு செயலைக் கொண்டுள்ளதா? எனக் கேட்க வேண்டியுள்ளது. தாராளக் கொள்கையினர், குறிப்பாக மார்க்சினர் (Marxists) இவ்வகையான பொருள் விளக்கம் தேடுவதை விரும்பவில்லை. எனினும் இக்கருத்திற்கு விளக்கமளிக்கும் பொருட்டு நற்செயல் (eufunction) நலிவுச்செயல் (dysfunction)* என்னும் கருத்தாக்கங்களை உருவாக்கினர். நலிவுச்செயல் கூறுகள் சமுதாயத்தில் நலிவினை அல்லது சமச்சீரின்மையை ஏற்படுத்தும். நற்செயல் கூறுகள் சிறந்த முறையில் தகவமையும் தன்மை கொண்டவை. இருப்பினும் ஒரே சமயத்தில் ஒரு கூறின் செயல்

* 'Dys' என்ற கிரேக்க முன்னொட்டிற்குத் 'தீயது' அல்லது 'கடினமானது' என்றுபொருள். 'Eu' என்ற கிரேக்க முன்னொட்டிற்கு 'நல்லது' அல்லது 'பயன்மிக்கது' என்று பொருள்.

அறுபதுக்கு முன் தோன்றியது. இது அமைப்பியல்வாதம் (structuralism) எனப்படும். மானிடவியலுக்கான அமைப்பியலை வகுத்தவர் பிரெஞ்சு மானிடவியலார் கிளாட் லெவிஸ்ட்ராஸ் ஆவார்.

அமைப்பியல் என்பது லெவிஸ்ட்ராஸ், அவரது மானிடவியல் சகாக்கள், பிற துறையைச் சேர்ந்த அமைப்பியற் கொள்கையாளர்களோடு தொடர்புடையதாகும். ராட்கிளிஃப் பிரௌனோடு தொடர்புடைய 'அமைப்பியல்' (structural) சொல்லிலிருந்து இது மாறுபட்டது. இச்சொல் சமுதாயத்தின் அமைப்பைப் பற்றிக் கூறுவதாகும்.

லெவிஸ்ட்ராஸ் பயன்படுத்தும் 'அமைப்பியல்' என்னும் மொழித்தொடர் உள - உயிரியல் சார்ந்த பண்புகளில் உலகின் அனைத்து மக்களும் பொதுவாகக் கொண்டுள்ள ஆழ்ந்த, வெளிப்படையாகத் தெரியாத, உள்ளார்ந்த அமைப்புகளைத் தேடுவதைக் குறிக்கும். புதைந்து கிடக்கும் அந்த உள்ளார்ந்த அமைப்புகள் புறநிலை நடத்தையில் வெளிப்படும்போது பண்பாட்டிற்குப் பண்பாடு மாறுபடும் தன்மையது. மக்களின் வெளிப்படையான நடத்தை முறை (apparent behaviour), பண்பாட்டால் ஏற்படுத்தப்பட்டு நிலையாக நிலைத்துள்ள நடத்தைமுறை ஆகிய இரண்டையும் உற்றுநோக்க முடியும். ஆனால் அதிலுள்ள ஆழ்நிலை அமைப்புகளை வெளிக்கொண்டு வருவது மிகவும் கடினமாகும். அவ்வாறு அவற்றைக் கண்டுபிடிக்க வேண்டுமாயின், ஆழ்நிலை அமைப்புகள் புறநிலை நடத்தையாக மாறும்போது நடைபெறும் அமைப்பு மாற்றங்களையும், ஓர் அமைப்புத் தொகுதி (set) ஒரு நிலையிலிருந்து வேறு நிலைக்கு மாற்றப்படுவதையும், அவற்றை இயக்கும் உண்மையான விதிகளையும் முதலில் கண்டுபிடிக்க வேண்டும். மனித மனத்தின் உண்மையான (ஆழ்நிலை) அமைப்பை பல அடுக்குகள் அல்லது தொகுதிகள் மூடி மறைத்துள்ளன. ஆகவே ஆழ்நிலை அமைப்பிலிருந்து புறநிலை நடத்தையாக மாறுவதற்குப் பல அமைப்பு மாற்றங்கள் நடைபெறவேண்டியுள்ளன. ஆழ்நிலை அமைப்பு, மனத்தின் இயல்புகள் முதலானவற்றைக் கூறும் லெவிஸ்ட்ராசே அவையனைத்தையும் கண்டுபிடித்துவிட்டதாகக் கூறவில்லை.

அடிப்படை அமைப்புகள் புறநிலை நடத்தையாக மாறும்போது நிகழும் அமைப்பு மாற்ற நிகழ்வுகள் குறிப்பிட்ட சில பரப்புகளில் மட்டுமே மிக விரைந்து நடைபெறுகின்றன என லெவிஸ்ட்ராஸ் நம்பினார். அவை பெரும்பாலும் கலை, மொழி முதலானவற்றிலும், குறிப்பாக, தொன்மத்திலும் (myth) நடைபெறுகின்றன என நம்பினார். அவற்றை ஆராய்வதில் லெவிஸ்ட்ராஸ் அமைப்பியல்சார் மொழியியலின் அணுகு முறையைப் பயன்படுத்தினார்.

சமுதாயச் செயல்கள், உறவுகள், மொழி ஆகியவற்றில் புதைந்து கிடக்கும் அமைப்புகள் உள்ளன. அவற்றில் நடத்தை முறையானது நனவிலி நிலையில் உள்ளது என லெவிஸ்ட்ராஸ் கருதினார். ஒரு மொழியியல் புதைந்து கிடக்கும் இலக்கணமே அதன் நனவிலி நடத்தையாகும். ஆகவே சமுதாயங்கள் ஒன்றுக்கொன்று அதன் புறநிலை இலக்கணத்தில் மாறுபடுவது போன்றே அதன் நடத்தை முறையிலும் மாறுபடுகின்றன. ஆனால் அவற்றிற்கப்பால் ஆழ்நிலையில் பொதுவான அமைப்புகள் உள்ளன. அதையே லெவிஸ்ட்ராஸ் அறிய விரும்பினார் (மொழியியலில் நோம் சோம்ஸ்கி என்பாரும் இதே முறையிலான ஆய்வு முறையினைக் கொண்டிருந்தார்). மக்களின் அடிப்படைச்



சிந்தனை முறையில் எதிரெதிர் பண்புகள் அதாவது, பகல், இரவு; கருப்பு, வெள்ளை; வாழ்வு, சாவு; ஆவி, உடல் முதலான பல கூறுகள் இணையாகத் தோன்றுகின்றன. இந்த இரட்டைத் தன்மை பல்வேறு வகையான நிலையில் புறநிலை நடத்தையில் வெளிப்படும் இயல்புடையது. எடுத்துக்காட்டாக, ஒரு சமுதாயம் முதலில் இரு பெருங்கூட்டமாகப் (moiety) பிளவுற்றுப் பின் அதனுள் கூட்டங்கள் (phratrics), குலங்கள் (clans), கால்வழிகள் (lineages) போன்ற உட்பிரிவுகள் ஏற்படுகின்றன. பல சமுதாயங்களில் பெருங்கூட்ட அமைப்பு இல்லாமலும் உள்ளது. ஆனால், இரட்டைத் தன்மை பிற வகைகளில் வெளிப்படும். அவ்வாறே தொன்மமும் அதன் வெளிப்பாட்டில் பல வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. அவையனைத்தும் ஆழ்நிலை அமைப்புகளின் தன்முனைப்பான புறநிலை வெளிப்பாடுகளாகும்.

லெவிஸ்ட்ராசின் கருத்துப்படி, பண்பாடு என்பது ஆழ்மனப்பட்டது (subconscious); மக்களின் மனத்துக்குள் புதைந்து கிடக்கின்றது. இது மக்களின் மன உணர்வால் வெளிப்படுவன என்பதால் இது ஆழ்நிலை அமைப்பு (deep structure) கொண்டது. ஆகப் பண்பாட்டின் மேற்தளத்தில் கண்ணால் காண்பவை, உணர்பவை அனைத்தும் ஆழ்நிலையில் புதைந்து கிடக்கும் சில பொதுப்புடையான அமைப்புகளிலிருந்து உருவானவையாகும்.

ஆகவே அமைப்பியல்வாதிகள் புறஉலகில் காண்பனவற்றை அப்படியே எடுத்துக்கொண்டு அதனை விளக்குவதை விடுத்து அவற்றிற்குக் கீழ் ஆழ்நிலையில் புதைந்துள்ள கூறுகளின் உறவுகளை அவிழ்த்துப் பார்ப்பதைத் தலையாயதாகக் கருதுகின்றனர்.

பின்வரும் எடுத்துக்காட்டுகளைக் காண்க.

| | | | |
|---|---|---|---|
| irregular | பூக்கள் | - | கள் |
| non - available | அண்ணன்மார் | - | மார் |
| illegal | சிறுமியர் | - | அர் |
| abiogenesis | மகளிர் | - | இர் |
| unnecessary | முதலியவை | - | அவை |
| | பின்வருவன | - | அ |

அடிக்கோடிட்ட முன்னொட்டுகள் அனைத்தும் எதிர்மறைப் பொருளை உணர்த்துகின்றன. இவை வடிவத்தில் ir, non, il, a, un என்ற நிலையில் மாறுபட்டிருந்தாலும் அடிப்படையில் எதிர்மறைப்பொருளை உணர்த்த வந்த பல மாறுபட்ட வடிவங்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். இதுபோன்று புறத்தளத்தில் கள், மார், அர், இர், அவை, அ என்று பல மாறுபாடுகளோடு பன்மை விகுதிகள் அமைந்தாலும் அடித்தளத்தில் பன்மை நிலையை உணர்த்த எழுந்தவை என்ற பொதுமை

ப.மா.13.

கிட்டுகின்றது. இதன்வழி புறநிலையில் காணப்படுவனவற்றைக் கொண்டு ஓர் அமைப்பை உணர்ந்துவிட முடியாது என்பது புலப்படும். அதன் கீழ் ஆழ்நிலையில் சில விதிகளுக்குட்பட்ட அமைப்புகள் செயல்படும் என்பதை அறிய வேண்டும்.

ஒரு தனித்தளத்திற்குள் அமையும் அமைப்பினை விடுத்துப் பல தளங்களுக்கும் பொதுவாக அமையக் கூடிய அமைப்புகள் காணக்கூடும். லெவிஸ்ட்ராசின் தலைமாணாக்கர் எட்மண்ட் லீச் (Edmund Leach) பண்பாட்டில் வெவ்வேறானதும் பரந்து பட்டதுமான பல தளங்களை இணைக்கக் கூடிய பொதுவான அமைப்புகள் செயல்படுவதைப் பின்வரும் அற்புதமான பகுப்பாய்வுவழி நிறுவுகிறார். விலங்குகள், உறவுமுறை, களம் (space) ஆகிய மூன்று வெவ்வேறு தளங்களை (புற உலகை) மனித அறிதிறன் வழி மனமானது எவ்வாறு அமைப்பாக்கம் செய்கிறது என்பதை எட்மண்ட் லீச் ஆராய்கிறார்.

| | | | | |
|---|---|---|---|---|
| Animals : | Self | - pet | - farm | - wild |
| Kinship : | Self | - cousin | - neighbour | - stranger |
| Space : | Self | - courtyard | - farm | - wild |


புறத்தளத்தில் விலங்குகள், உறவுமுறை, களம் ஆகியவை ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத தளங்களாகக் காணப்பட்டாலும் மனித மனமானது அதன் சிந்தனை வழி மூன்றையும் ஒரு பொதுமையாக்கத்தின் வழி அமைப்பாக்கம் செய்கிறது என்பதை எட்மண்ட் லீச் அமைப்பியலுக்கு விரிவான வியாக்யானம் எழுதுகிறார்.[32] விலங்குகள், உறவுமுறை, களம் ஆகிய மூன்றிலும் அமையும் self என்பது ஒரு பொதுக் கருத்தைக் கொண்டுள்ளது. அதுபோலவே pet, cousin, courtyard ஆகியவையும் மூன்று தளங்களுக்கும் பொதுவாக அமையக்கூடிய பொருளைக் கொண்டவை. இவைபோன்றே அடுத்த வகையினங்களில் அமைபவையும் ஒத்த பொருளைக் கொண்டவை. ஆகவே பண்பாட்டில் விலங்குகள், உறவுமுறை, களம் ஆகிய மூன்று தளங்களும் மேற்தளத்தில் தனித்தனியானது என்று புரிந்து கொள்ளப்பட்டாலும் இவை மூன்றிற்கும் பொதுத்தர்க்கம் அமைந்துள்ளது. இதைத்தான் அமைப்பு அல்லது புதைநிலை அமைப்பு (deep structure) என்று வரையறை செய்து கொள்ள வேண்டும்.

இன்னுமொரு அற்புதமான எடுத்துக்காட்டு வழி இதனை விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். கணக்கியலில் கையாளப்படும் எழுத்துக்கள் 1,2,3,4,5,6,7,8,9, என வரிசைப்படுகின்றன. இவை அனைத்திற்கும் ஆதார அடிப்படை அமைப்பானது சூனியம்

32 Edmund Leach, *Culture and Communication*, (Cambridge: Cambridge University Press, 1976 (twelfth reprint)



எனப்படும் '0' என்னும் அமைப்பேயாகும். இன்று மின்னணுவியல் அடிப்படையில் இயங்கும் கடிகாரங்கள், மற்ற வகையான நேரங்காட்டும் கருவிகள் (தொலைக்காட்சியில் செய்திக்கு முன் நேரங்காட்டும் முறை உட்பட) வழி இதனைப் புரிந்து கொள்ளலாம். பின்வரும் படத்தில் விளக்கியுள்ளவாறு




புதைநிலையியல் உள்ள ⊟ என்ற வடிவத்தில் (சூனியத்தைக் குறிக்கும் வடிவம்) உள்ள கோடுகளுள் தேவையான பகுதிகளை மறைத்தால் நாம் விரும்பும் எண்கள் கிடைக்கும். 1 என்ற எண் கிடைக்க வலப்பக்க நிலைக்கோட்டினை எடுத்துக்கொண்டு ⊟ மற்ற பகுதிகள் மறைய வேண்டும். கிடைக்க வேறு சில பகுதிகள் மறைய வேண்டும். இது போன்ற மற்ற எண்களுக்கும் அவற்றிற்குரிய பகுதிகள் மறைந்தால் தேவையான எண்கள் கிடைக்கும். ஆக, புறத்தளத்தில் நாம் 1 முதல் 9 வரை பார்க்கக் கூடிய 9 எண்களுக்கும் ⊟ (சூனியம்) என்ற ஒரு பொது அமைப்பு ஆழ்நிலையில் புதைந்துள்ளது. இதனைத் தோண்டியெடுத்தலே அமைப்பியல் ஆய்வாகும்.

**எதிரிணைகள்**

புறத்தளத்தில் வேறுபாடுகளை உணர்த்தி நிற்கும் அடிப்படை அமைப்பானது ஒரு எதிரும் புதிருமான, இரட்டை எதிர்வுடைய (binary opposition) கூறுகளின் கூட்டு இணைவில் ஏற்படுபவை என்பது லெவிஸ்ட்ராசின் அடுத்த நிலை. 0 எனக்கூடிய சூனியமானது ⊟ இரண்டு பகுதிகளாக உடைந்து அவற்றின் கூட்டிணைவால் மேல்தளத்தில் 1 முதல் 9 வரை பல வடிவங்கள் கிடைக்கின்றன. இந்த இரட்டை எதிர்வானது மனித மனத்திலேயே ஆழப்புதைந்துள்ளது.

மனித மனத்தின் சிந்தனை முறையானது எதையும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய எதிர்ப்பண்புகளை இணைத்து இரட்டை எதிர்வுகளாக (எடு: அகம்/புறம், வலம்/இடம், அண்டம்/பிண்டம், பகல்/இரவு, வாழ்வு/சாவு, ஆண்/பெண், சக்தி/சிவன்,

நாட்டார் வழக்காறுகளில் குறியீட்டுக் கதைமாந்தர்களாக வரும் புனித இரவலர்கள் (holy beggars), "மூன்றாம் மகன்கள்" (third sons), உலகியலறியாமல் ஏமாறுபவர்கள் (simpletons) போன்றவர்கள் மேட்டிமைத்தனத்தாரை மிகச் சாதாரண நிலைக்குக் கீழிறக்கி நீயும் இந்த பூமியில் நிற்க வேண்டியவன்தான் என்பதை உணர வைப்பர். இவை போன்ற நூற்றுக்கணக்கான கதைமாந்தர்கள் நாட்டார் வழக்காறுகளிலும், நாடகம், புதினம் போன்ற பிற படைப்பாக்கங்களிலும் காணப்படுகின்றனர். இவையனைத்தும் அமைப்பில் கீறல்கள், உடைப்புகள் நிகழ்த்தி அந்த உடைப்புகள் வழியாக எதிர் அமைப்பைப் புகுத்தி அங்கு மீசமூக விழைவைக் காட்டுகின்றன. இவை சமூகத்தின் ஏற்றத்தாழ்வினை சொரணையுடன் ஏற்றுக் கொண்டு விட்டோம் என்பதை மறுக்கும் குறியியல் பொருண்மையாகவும், மாற்றத்தைக் கோரி நிற்கும் சமூக, சடங்கியல் விழைவாகவும் பண்பாட்டில் நிலை பெற்றுள்ளன.

## பண்பாடு ஓர் அறிதல்சார் முறை (Culture as Cognitive System)

பண்பாடு என்பது மக்கள் கற்றுணர்ந்த நடத்தைமுறையின் (learned behaviour) தொகுப்பு என்றும் கூறலாம். இங்குக் கற்றுணர்ந்த நடத்தை முறை என்பது முழுக்க முழுக்க மக்களின் அறிதிறனோடு (cognition) தொடர்புடையது (அறிதிறன் என்பது பற்றி இவ்வத்தியாயத்தின் தொடக்கத்தில் இடம் பெறும் 'அறிதல்சார் கூறுகள்' என்னும் உட்தலைப்பில் விவரிக்கப் பட்டுள்ளதைக் காண்க). அறிதிறன் எனப்படுவது உலகிலுள்ள பொருளையும், நிகழ்வையும் பற்றிய உணர்வுகள், புரிந்து கொண்டுள்ளவை, தெரிந்துள்ளவை, கருத்துகள், மதிப்பீடுகள் போன்றவற்றைக் குறிக்கும். ஒவ்வொரு பண்பாட்டினரும் எந்தெந்தப் பொருள்களை, நிகழ்வுகளைப் புரிந்துகொண்டுள்ளார்கள் என்பதும், எவ்வாறு புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதும் அவர்களின் அறிதிறக் கோலத்தைப் (cognitive pattern) பொருத்தவை.

ஒரு பண்பாட்டில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கும், நடத்தை முறைகளுக்கும் அம்மக்கள் கொண்டுள்ள அடிப்படை விதிமுறைகள், எண்ணங்கள், கருத்துகள் ஆகியவையே காரணமாகின்றன. இவை அறிதிறனால் ஆக்கப்பெற்றவை. ஒரே வகையான செயல் வெவ்வேறு பண்பாடுகளில் காணப்பட்டாலும் அதற்கான அடிப்படைக் கருத்துகள் மாறுபட்டவையாக இருக்கக்கூடும். உலகம் தோன்றிய கதை அனைத்துப் பண்பாட்டிலும் இடம் பெற்றுள்ளது. ஆனால் அக்கதையின்



கருப்பொருள் வெவ்வேறாக உள்ளது. ஒவ்வொரு பண்பாட்டினரும் வெவ்வேறு வகைகளில் அதைக் கூறுகின்றனர். அதற்குக் காரணம் அறிதிறக் கோலம் அனைவரிடமும் ஒரே வகையில் இல்லை என்பதே. அவ்வாறே, ஒவ்வொரு பண்பாட்டினரும் உலக நிகழ்ச்சிகளையும், அவர்தம் அனுபவங்களையும் வெவ்வேறு வகையில் வகைப்படுத்திக் காண்கின்றனர். இவ்வகைப் பாங்கும் அவர்களின் அறிதிறக் கோலத்தைக் காட்டுவதாகும்.

எந்தவொரு பண்பாட்டினரும் உலகின் அனைத்துப் பொருள்களையும், நிகழ்வுகளையும் முழுமையாக உணர்ந்திருப்பதோ அறிந்திருப்பதோ இல்லை. அதனாலேயே ஒவ்வொரு பண்பாட்டினரும் உலக நடைமுறைகளைப் பற்றி மனதிற்குள் தனிப்பட்ட சிந்தனையையும், அறிவையும் கொண்டுள்ளனர். இதையே டைலர் உள்ளார்ந்த கருத்துருவாக்கம் (schemata) எனக் குறிப்பிடுவார். உள்ளார்ந்த கருத்துருவாக்கம் என்பது மனதிற்குள்ளேயே உலகத்தைப் பற்றி ஒருவர் உருவாக்கிக் கொள்ளும் எண்ணமாகும். அன்றாட வாழ்வில் அவரவர் செயல்பாடுகளின் மூலம் ஏற்படும் உணர்வுகள், எண்ணங்கள், பட்டறிவு முதலானவை மூலம் உள்ளார்ந்த கருத்துருவாக்கம் உண்டாகிறது.[58]

பண்பாட்டின் ஒவ்வொரு கூறும் மக்களின் அறிதிறனால் விளைந்ததாகும். எனவே பண்பாட்டுக் கூறுகள் மக்களின் அறிதிறக் கோலத்தை வெளிப்படுத்தக் கூடியதாக உள்ளன. எடுத்துக் காட்டாக, மொழியானது மக்களின் அறிதிறனை வெளிப்படுத்தும் ஒரு பண்பாட்டுக் கூறாகும். மக்கள் கையாளும் மொழி (சொற்கள்) அப்பண்பாட்டினரின் எண்ணங்களையும் சிந்தனைகளையும் வடிவமைக்கின்றது. கண் முன்னுள்ள இயற்கையை அல்லது ஒரு நிகழ்வை விவரிப்பதில் ஒவ்வொரு மொழியினரும் வேறுபடுகின்றனர். இவ்வாறான வேறுபாட்டிற்கு அம்மொழியின் இலக்கணமும் சொற்கோவையும் காரணமாகின்றன. இதனடிப்படையிலேயே மக்களின் அறிதிறனும் அமைகின்றன.[59] சப்பிர் ஓர்ஃப் எடுகோளும் (Sapir-Whorf hypothesis) இக்கருத்தையுடையதே.

மேற்கூறிய கூற்றினை விளக்கமாக அறிய ஓர் எடுத்துக்காட்டை இங்குக் காண்போம். நாய் கத்துவது அனைத்துப் பண்பாட்டிற்கும் பொதுவானதே. ஆனால் அதை ஒவ்வொரு பண்பாட்டினரும் வெவ்வேறு வகையில் குறிப்பிடுகின்றனர்.

58 Stephen A. Tyler, *The Said and the Unsaid: Mind, Meaning and Culture*. New York: Academic Press, 1978), p. 109.

59 B.L. Whorf, "Science and Linguistics" *In Psycholinguistics: A Book of Readings*, ed. by Sol Saporta (New York: Holt, Rinehart and Winston, 1961), p. 465.

Scanned by TapScanner

ஆங்கிலத்தில் 'bow wow' என்றும், பிரஞ்சில் 'oua oua' என்றும், சீனமொழியில் 'wang wang' என்றும், துருக்கி மொழியில் 'hav hav என்றும், தமிழில் 'லொள் லொள்' என்றும் குறிப்பிடப் படுகின்றன. இதைப்போன்றே அழைப்பு மணியின் ஒலி 'ding dang' என்று ஆங்கிலத்திலும் 'bim bam' என்று செருமானிய மொழியிலும் 'cin cin' என்று துருக்கி மொழியிலும் கூறப்படுகிறது. நாயின் ஒலியும் அழைப்பு மணி ஒலியும் அனைத்துப் பண்பாட்டினருக்கும் பொதுவான இருப்பினும் அவரவர் அறிதிறக்கோலத்திற்கேற்ப அவை மாறுபடுகின்றன. அவ்வாறே நிறச் சொற்கள், உறவுமுறைச் சொற்கள், தாவரங்களை வகைப்படுத்துதல், விலங்குகளை வகைப்படுத்துதல் போன்ற ஒவ்வொன்றும் அவரவர் அறிதிறக் கோலத்திற்கேற்ப மாறுபடுகின்றன.

இட அமைப்புகளையும், திசைகளையும் பற்றிக் குறிப்பிடும் முறையில் நாட்டார் சமூகங்கள், பழங்குடிகள் ஆகியோரின் அறிதிறன் சிறப்புக் கவனத்திற்குரியது. நவீன சமுதாயத்தினர் குறிப்பிடும் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய சொற்களைப் போன்று நாட்டார் சமூகத்தினரும், பழங்குடிகளும் பயன்படுத்துவதில்லை. இவர்களின் அறிதிறன் தன்மை வேறுபடுகிறது. இவர்களின் குடியிருப்பைச் சுற்றியுள்ள சிற்றூர்கள், இயற்கை நிலைகள் (ஆறு, மலை, காடு) வேறு குறிப்புகள் முதலானவற்றையே பயன்படுத்துவர். 'ஏப்பாக்கத்து தெச' (திசை) பாங்குளத்தூர் மூல (திசை), (இவ்விரண்டும் திண்டிவனம் வட்டத்தில் உள்ள ஊர்ப் பெயர்களைச் சுட்டுகின்றன) 'அக்கினி மூல, கொடுக்கா மூல', 'மேலாண்ட தெச' போன்ற பலவகைச் சொற்களை இந்த ஊர் மக்கள் பயன்படுத்துகின்றனர். இவ்வகைச் சொற்கள் அக்குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்த மக்களுக்கு மட்டுமே புரியக்கூடியன.

பசிபிக் கடற்கரை மக்களான டிக்கோப்பியா (Tikopia) சமூகத்தினர் திசைகளைக் குறிப்பிடுவதில் மிகக் குறைந்த அறிதிறனைப் பெற்றுள்ளனர் என்பார் பிர்த்.[60] கடல்திசை (seaward), நிலத்திசை (inland) என்னும் இரு திசைகளையே இவர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு பண்பாட்டினரின் அறிதிறன், சுற்றுச் சூழல், தொழில் நுட்பம் போன்ற பல கூறுகளோடு தொடர்புடையது. எஸ்கிமோவினர் ப்னிக்கட்டிகள், பனி முதலானவற்றைக் குறிப்பிட 100க்கும் மேற்பட்ட சொற்கள் கொண்டிருப்பதும், தமிழக மீனவர்கள் காற்று, திசை, கடல் நீரோட்டம் போன்றவற்றைக் குறிப்பிட ஒவ்வொன்றுக்கும் எட்டுக்கும் மேற்பட்ட சொற்கள் கொண்டிருப்பதும் இதற்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

60 R. Firth, *We, the Tikopia* (Boston : Beacon Press, 1963).



மக்களின் 'அறிதிறன்' கூறுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஆராயும் அறிதல்சார் மானிடவியல் (cognitive anthropology) மிக அண்மைக் காலத்தியப் பிரிவாகும். 'அறிதல்சார்' என்னும் வழக்கு மிகப்பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும் இன்னும் நிலையான வழக்காக மாறவில்லை. இப்பிரிவு இனக்குழு அறிவியல் (ethno-science), குறியீடுசார் மானிடவியல் (symbolic anthropology) பிரிவுகளோடு இணைந்ததாகவே கருதப்படுகிறது. இரண்டாவதாகக் கூறப்பட்ட குறியீடுசார் மானிடவியலைத் தனிப்பரப்பு என்றும், இனக்குழு அறிவியலும் அறிதல்சார் மானிடவியலும் ஒத்த பரப்பைக் கொண்டது என்றும் சிலர் கூறுவர்.

அறிதல்சார் மானிடவியலின் தோற்றம் அண்மைக் காலத்தியது என்றாலும் அது எட்வர்ட் சப்பிர் அவர்களின் ஆய்வுகளில் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது. பல பத்தாண்டுகளுக்கு முன்னரே சப்பிர் பண்பாட்டு நடத்தையை குறியீடுசார் நடத்தை (symbolic behaviour) என்றும் அது பண்பாட்டின் உறுப்பினர்கள் அனைவரிடமும் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது என்றும் கூறினார். அதோடு பண்பாடு என்பது எண்ணங்களின் தொகுப்பாகவும், நடத்தைமுறைகளின் தொகுப்பாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட கருத்துகளைக் கொண்டிருக்கலாம் என்றார் சப்பிர். ஆகவே இவற்றை ஆராய முற்படும் மானிடவியலார் மக்களின் கருத்துப்படிவ தோரணிகளை (abstract patterns) விளக்கிக் காணவேண்டும்; அவர்கள் பண்பாட்டின் பல்வேறு கூறுகளை எவ்வாறு பொருள்படுத்திக் காண்கிறார்கள் என்பதைக் காணவேண்டும். அவ்வாறு காணும்போதே ஒவ்வொரு சமுதாயத்தின் நடத்தை முறைக்குப் பின்னணியாக உள்ள விதிமுறைகளைக்காண இயலும்.

அறிதல்சார் மானிடவியலார் மனவியல் அணுகுமுறையில் (mentalistic approach) ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியதை வலியுறுத்துவர். இது முற்றிலும் ஒரு புதிய அணுகுமுறையல்ல. ஒரு பண்பாட்டை அதன் முறையிலேயே ஆராய வேண்டுமென்று ஏற்கனவே போவாஸ் கூறியுள்ளதும், ஓர் இனக்குழுவியலார் அவர் ஆராயும் மக்களின் கருத்துகளையும், அவர்கள் எவற்றை எந்தெந்த முறையில் அணுகுகிறார்கள் என்பதையும் அறியவேண்டியதை மாலினோஸ்கி கூறியுள்ளதும் இங்குக் கவனிக்கத்தக்கது. ஆனால் இப்பிரிவில் புதிய அணுகுமுறை ஒன்று உருவாக்கப்பட்டது. அது என்னவெனில் ஆய்வுசெய்யும் இனக்குழுவியலார் தன் சொந்தப் பண்பாட்டின் தரங்களையும் எண்ணங்களையும் முழுவதுமாக விடுத்து ஆராயும்முறையாகும். இதுவே இன்று அகவய

அணுகுமுறை (emic approach) எனப் பெருவழக்காகக் கூறப்படுகிறது. களப்பணி ஆய்வின்போது பண்பாட்டை அம்மக்கள் எவ்வாறு காண்கிறார்களோ அக்கண் கொண்டு நோக்கும் முறையே அகவய அணுகுமுறையாகும். அவ்வாறன்றி ஆய்வாளர் ஒரு வெளியாராக நின்று விளக்க முற்பட்டால் அது புறவய அணுகுமுறை (etic approach) எனப்படும்.

இவ்விரு கருத்தாக்கங்களும் மொழியியலிலிருந்து பெறப்பட்டதாகும். **ஒலியியல் (phonetic), ஒலியனியல் (phonemic)** ஆகிய சொற்களிலிருந்து முறையே 'புறவயம்' (etic) 'அகவயம்' (emic) ஆகிய சொற்கள் உருவாக்கப்பட்டு மானிடவியல் வழக்கில் அறிமுகப்படுத்தப்பட்டன. ஒலியியல் (ஒலிவாயிலாகத் தொடர்பு கொள்ளும் முறையைப் பதிவு செய்யும் ஒரு தரப்படுத்தப்பட்ட முறை. இதன்வழிப் பெறப்படும் கருத்துகளைப் பயிற்சிபெற்ற எந்த ஒரு ஆய்வாளரும் புரிந்து கொள்ள முடியும்) என்னும் சொல்லிலிருந்து பெறப்பட்ட புறவயம் என்னும் கருத்து, மானிடவியல் அடிப்படையில் பெறப்பட்ட முடிவினைப் பயிற்சி பெற்ற எந்த ஓர் ஆய்வாளரும் சோதித்துப் பார்க்க முடியும் என்பதைக் குறிப்பதாகும். ஒலியனியல் என்னும் சொல்லிலிருந்து பெறப்பட்ட (ஒலியன் என்பது ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசக் கூடியவர்கள் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய ஒலி அலகைக் குறிக்கும்) அகவயம் என்னும் கருத்து, ஒரு பண்பாட்டைச் சேர்ந்தவர்கள் அவர்கள் பண்பாட்டை எவ்வாறு மதிப்பிடுகின்றனர் என்பதைக் குறிப்பதாகும். மேற்கூறிய அகவய, புறவயமுறைகளுள் எவற்றை ஆய்வாளர்கள் பயன்படுத்த வேண்டும் என்ற வினா நமக்குள் தோன்றும். இனக்குழுவியல் ஆய்வுகளின்போது அகவய முறையையும், இனக்குழு ஒப்பாய்வியலின்போது புறவய முறையையும் ஆய்வாளர்கள் பயன்படுத்த வேண்டும் (இனக்குழுவியல், இனக்குழு ஒப்பாய்வியல் குறித்து இரண்டாம் அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளது).

அறிதல்சார் மானிடவியலுக்கு மிகப்பெரும் ஆதரவு கிடைத்தது என்று குறிப்பிடவேண்டுமானால் வார்டுகுட்இனஃப் 1956 - இல் எழுதிய 'தொகுத்து வகுக்கும் பகுப்பாய்வு' (componential analysis) என்னும் கட்டுரையிலிருந்து தொடங்கியது எனலாம். தொகுத்து வகுக்கும் பகுப்பாய்வு என்பது ஒரு பண்பாட்டில் இடம்பெறும் அனைத்துவகையான பொருள்களையும், நிகழ்சிகளையும், உணர்வுகளையும், எண்ணங்களையும் வகைப்படுத்தி, வரிசைப் படுத்திக் காண்பதில் மக்கள் மனதில் எவ்வகையான விதிமுறைகள் செயல்படுகின்றன என்பதைக் கருத்தாக்க அளவில் காணும் ஒரு அளவையியல் முறை ஆகும்.



இனக்குழு அறிவியல் பிரிவில் இது ஒரு புதிய முறையியலைத் தோற்றுவித்தால் இதற்குப் புதுஇனவரைவியல் (new ethnography) என்ற பெயர் சூட்டப்பட்டது. இப்பிரிவு பின் வருவனவற்றை அடித்தளமாகக் கொண்டுள்ளது. உண்மையான பண்பாடு என்பது மக்களின் (திணைக்குடிகள்) மனதில் மட்டுமே உறைந்துள்ளது. திணைக்குடிச் சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் அவருக்கே உரிய மன அமைப்பினை அல்லது உள்ளார்ந்த கருத்து வளத்தைப் பெற்றுள்ளனர். இதனடிப் படையிலேயே ஒரு திணைக்குடியாளர் அவரது சமுதாயத்தில் எவற்றை எந்தெந்த முறையில் செய்ய வேண்டுமென்று அறிந்துள்ளார். ஆகவே ஆய்வாளர்கள் ஆய்வுசெய்யும்போது தன் சொந்தப் பண்பாட்டு முறையை மனதில் கொண்டு அதன் அடிப்படையில் கேள்விகள் கேட்பதும், செய்திகளைப் பெறுதலும் கூடாது என்பதை அறிதல்சார் மானிடவியலார்வலியுறுத்துவர். ஆய்வாளர்கள் தங்கள் சொந்த மதிப்புத் தரங்களைப் புகுத்துவதிலிருந்து முற்றிலுமாக விடுபட வேண்டியிருந்ததால் அறிதல்சார் மானிடவியலார் மொழியியல் அணுகுமுறையைப் பயன்படுத்தத் தொடங்கினர். இம்முறையில் திணைக்குடியினரின் மொழியைப் பயன்படுத்தி தகவலாளியின் வகைப்பாடுக்ளையும், அவரது பண்பாட்டின் மதிப்புத்தரங் களையும் பெறவேண்டும். இம்முறையை ஒழுங்காகப் பின்பற்றிப் பெறப்படும் செய்திகளின் இறுதிவடிவமானது அப்பண்பாட்டின் உண்மையான வகைப்பாட்டியலாக (taxonomy) இருக்கும். இதுவரை அறிதல்சார் மானிடவியலில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் நாட்டார் மருத்துவம் (folk medicine), நிற வகைப்பாடு, தாவர், விலங்கின வகைப்பாடுகள் போன்ற குறைந்த பரப்புகளில் மட்டுமே நிகழ்ந்துள்ளன.

அறிதல்சார் ஆய்வுகளை மேற்கொள்வதில் ஒரு புதிய அணுகுமுறையை அந்தோணி வாலஸ் ஏற்படுத்திக்கொண்டார். அனைத்து மக்களும் அவர்களின் அனுபவங்களை ஏதோ ஒரு அர்த்தமுள்ள முறையில் ஒருங்கிணைத்துக் காண்கின்றனர் அல்லது வகைப்படுத்திக் காண்கின்றனர் என்பதை வாலஸ் கண்ணுற்றார். இதனைக் கொண்டு தனிமனிதப்பாணி (mazeway) என்னும் கருத்தாக்கத்தை உருவாக்கினார். தனிமனிதப்பாணி என்பது பண்பாட்டு நடத்தைமுறையைப்பற்றியும், சமுதாயத்தில் ஒவ்வொருவரின் பங்கு என்ன என்பதைப் பற்றியும் ஒவ்வொரு தனிமனிதரும் கொண்டுள்ள அறிதிறன் பாங்காகும். சமுதாயத்தில் ஒரு தனிமனிதனின் அறிதிறன் பாங்கு மற்றொரு தனிமனிதனின் அறிதிறனோடு கண்டிப்பாக ஒத்திருக்க வேண்டு மென்பதில்லை என்பார் வாலஸ். இரு தனிமனிதர்கள் ஒரே பண்பாட்டைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களுக்குள் தனிமனித

Scanned by TapScanner

வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் பொதுவான சில பரப்புகளில் ஒத்த மனநிலையைக் கொண்டிருப்பார் களேயானால் அப்பரப்புகளில் மட்டும் அவ்விருவரின் கருத்துகள் ஒன்றையொன்று சார்ந்திருக்கும். வாலஸின் கூற்றுப்படி எந்த ஒரு மனிதனும் அவனது சமுதாயத்தைப் பற்றி முழுமையாகக் கற்றுத் தேர்ச்சி பெற்றிருக்க முடியாது. அதனால் ஒருவரிடம் உள்ள குறையை நிரப்ப மற்றொருவரின் அறிவு தேவைப்படுகிறது. இக்கூற்றின் அடிப்படையில் நோக்கும்போது ஒரு சமுதாயம் ஒற்றுமைத் தன்மையுடைய அறிதிறன் பாங்கைக் காட்டிலும் வேறுபட்ட தன்மையுடைய அறிதிறன் பாங்குகளையே மிகுதியாகக் கொண்டுள்ளது என்ற எடுகோளை வாலஸ் முன்மொழிந்தார்.

ஒரு சமுதாயம் மிகவேகமாக மாற்றமடையும் சூழலில் சிலரின் தனிமனிதப்பாணி சீர்குலையும் தன்மையைப் பெறலாம். இவ்வாறான காலங்களில் அவர்களின் தனிமனிதப்பாணி அதன் அமைப்பில் மாற்றத்தை ஏற்படுத்திக்கொண்டு புதிய நிலையை அடைய வேண்டும். அவ்வாறு மரபுப்பாணியை மாற்றிக் கொள்ளாமல் போனாலோ மாற்ற இயலாநிலை ஏற்பட்டாலோ அச்சமயத்தில் அவர்கள் செயல்படமுடியாது. பழைய கூறுகளையும் புதிய மாற்றங்களையும் ஒன்றிணைத்துக் கொள்வார்களேயானால் மாறிய புதிய சூழலில் அவர்களால் நன்கு தகவமைந்து கொள்ள இயலும்.

## பண்பாடு ஒரு குறியீட்டு முறை
## (Culture as Symbolic System)

பண்பாட்டின் பெரும்பாலான நடத்தை முறைகள் குறியீடுகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. மானிடவியலார் சிலர் பண்பாட்டின் ஒட்டு மொத்தத் தொகுப்பு, குறியீடுகளால் ஆக்கப்பெற்றது என்பர். இக்கூற்றின் உண்மையைக் காது கேளாதோர், பார்வையற்றோர், ஊமையானோர் போன்றோரின் வாழ்வில் காணலாம். அனைத்து உடலுறுப்புகளையும் நல்ல நிலையில் பெற்றுள்ள மக்கள் செய்யும் எல்லா செயல்களையும் இவர்கள் செய்கின்றனர். இது எவ்வாறு இயலுகிறது? இவர்களின் ஒவ்வொரு கருத்திற்கும், உணர்வுகளுக்கும் தனித்தனி குறியீடுகளை அமைத்து அதன் மூலம் செய்திகளைப் புலப்படுத்திக் கொள்வதால் இயலுகிறது.

குறியீடு என்பது என்ன? ஒவ்வொரு குறிப்பிட்ட குழுவிற்குள் அனைவரும் பகிர்ந்து கொள்ளும் எந்த ஒரு செயலும், பொருளும், நடத்தையும், உணர்வுகளும் குறியீடு



என்னும் பொருளைப் பெறக்கூடியதே. இக்கருத்தின் அடிப்படையிலேயே பண்பாடு ஒரு குறியீட்டு அமைப்பு எனக் கூறப்பெறுகிறது. இதனை முழுமையாக ஆராயும் ஒரு மானிடவியல் பிரிவே குறியீடுசார் மானிடவியல் (symbolic anthropology) ஆகும். இப்பிரிவும் அறிதல்சார் நோக்குடையது அல்லது மனவியல் (mentalistic) நோக்குடையது. அதோடு இப்பிரிவு செயற்பாட்டுக் கொள்கை, அமைப்பியல்-கொள்கை ஆகிய பரந்த பரப்புகளின் ஒரு தொடர்ச்சியாகவும் கருதப்படுகிறது. ஏனெனில், குறியீடுசார் அமைப்புகள் ஓர் ஒழுங்கமைப்பை (system) நிலைபெறச் செய்யும் செயல்களைக் கொண்டவை; மன அமைப்புகளின்மீது கட்டப்பட்டவை; உளவியல் செயல்களைக் கொண்டவை எனப் பொருள் கூறப்படுகிறது.[61]

குறியீடுகளைப் பற்றிய மானிடவியலாரின் ஆர்வம் பழம் பெரும் மானிடவியல் அறிஞர்களான மக்லீனன், டைலர் ஆகியோரின் காலமான 100 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிவிட்டது. தொடக்கக் காலத்திலிருந்தே பல துறை அறிஞர்கள் குறிகளைப் பற்றி ஆராய்ந்து வந்துள்ளனர். மொழியியலாரும் மானிடவியலாரும் இதில் முதலிடம் பெறுகின்றனர். இருப்பினும் இலக்கியவியல், தத்துவவியல், கலையியல் சமயவியல் அறிஞர்களும் இதில் ஆர்வங் கொண்டிருந்தனர். இன்றும் இது பல்துறை ஆய்வுப் போக்குடையதாக விளங்குகிறது. இதனைக் குறியியல் (semiotics) எனத் தனித் துறையாக அறிய விழைவோரும் பல்துறை அறிவினைத் தேடுகின்றனர். குறியியலில் மொழி, நாடகம், திரைப்படம், உடைகள், இயற்கை, உணவு, கட்டடம், நகர அமைப்புப் போன்ற எந்த ஒரு கருத்துப்புலப்படுத்தம் செய்வதும் இதிலடங்கும் என்றும், இத்துறை மொழியியல், பண்பாட்டுமானிடவியல், உளவியல் ஆகிய மூன்று துறைகளின் அறிவை முதன்மையாகத் தேடுகிறது என்றும் கூறுவர்.[62]

மானிடவியலில் குறிகள் அவ்வ சார்ந்துள்ள பண்பாட்டில் ஏதோ ஒன்றைக் குறிப்பதாக அமைந்திருக்கும் விதிமுறைகளைக் காண்பதே மையமாக உள்ளது. குறியீடுகள் மனதின்

61 Mervyn S. Garbarino, *Sociocultural Theory in Anthropology*, op. cit., p. 83.

62 எம்.டி. முத்துக்குமாரசாமி, பிற்கால அமைப்பியலும் குறியியலும் (பாளையங்கோட்டை : தூய சவேரியார் தன்னாட்சிக் கல்லூரித் தமிழ்த்துறை

வெளிப்பாடாக உள்ளது. இது உலகளாவிய நிலையில் மனிதர்களின் உளப்பாங்கினை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது. குறிகள் விலங்குகளிடத்தும், மக்களிடத்தும் தொடர்பு கொள்ளும் சாதனமாகவும், மொழியின் ஒரு பகுதியாகவும், மொழிசாரா பண்பாட்டுக் கூறுகளாகவும் உள்ளன. இதனால் குறிகளும், குறிகளோடு தொடர்புடைய குறியீட்டாக்கம் (symbolizing), குறியீட்டமர்வு (symbolism) போன்றவையும் பண்பாட்டுக் கோலத்தில் சிறப்பிடம் பெறுகின்றன.

'குறியீட்டமர்வு' இலக்கியங்களிலும், வழக்காறுகளிலும், கலைப் பொருள்களிலும், சமய வழிபாடுகளிலும், ஒப்பனை முறைகளிலும், உடைகளிலும், பிற நடத்தைமுறைகளிலும் பெருமளவு காணக்கிடக்கின்றன. தத்துவவியலாரும் மொழியியலாரும் குறியீடு என்னும் கருத்தாக்கத்தை முறைப்படுத்தும் போது அதைக் கருத்தியல் அளவில் நிர்ணயம் (அறுதியிடுதல்) செய்கின்றனர். ஆனால், மானிடவியலார் ஒரு பண்பாட்டில் எவ்வாறு குறிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன, ஒவ்வொரு குறியைப் பற்றியும் மக்கள் கொண்டுள்ள கருத்துகள் என்னென்ன, குறிகள் பற்றிய கருத்தாக்கங்கள் பண்பாட்டின் நிறுவனங்களோடு எவ்வகையான தொடர்புகளைப் பெற்றுள்ளன, குறிகளோடு மக்கள் கொண்டுள்ள நடத்தை முறைகள் என்னென்ன, அன்றாட வாழ்வில் மக்கள் குறியீடுகளைக் கொண்டு எவ்வகையான செயல்களைச் செய்கின்றனர், அதனைச் சமுதாயத்தில் உள்ள உறுப்பினர்கள் புரிந்து கொள்ளும் முறை எவ்வாறு உள்ளது, குறியீட்டாக்கம், குறியீட்டமர்வு ஒரு பண்பாட்டில் எவ்வாறு ஆக்கப்பெறுகிறது போன்ற நோக்கில் ஆராய்வர்.

குறியீடுசார் மானிடவியலில் சிறப்பிடம் பெற்றுள்ளவர்கள் கிளிஃபோர்டு கீர்ட்ஸ், டேவிட் ஸ்னீடர், விக்டர் டர்னர், மேரிடக்லாஸ் போன்றோராவர். இவர்களின் அணுகுமுறைகளில் வேறுபாடுகள் இருந்தாலும் அனைவரும் பண்பாடு என்பது ஒரு குறியீட்டு அமைப்பு என்ற பொதுவான கருத்தினைக் கொண்டுள்ளனர்.

அமெரிக்க உறவுமுறையை ஆராய்ந்த டேவிட் ஸ்னீடர் உறவுமுறையைக் குறியீட்டு அமைப்பு என்றே கூறுவார். அமெரிக்கர்களின் உறவுமுறையானது அவ்வமைப்பிற்கே உரிய சொற்களைக் கொண்டுள்ளது என்றும், அச்சொற்கள் சமுதாய, உயிரியல், உளவியல் அமைப்புகளோடு தொடர்புடைய



சொற்களல்ல என்றும் முதலில் தெளிவுபடுத்தினார். அவ்வாறிருக்க உறவுமுறைச் சொற்கள் அவை உணர்த்தும் பொருளைக் காட்டிலும் குழு ஒருமைப்பாடு, நம்பகத்தன்மை போன்ற வேறு சிலவற்றையும் உணர்த்துகின்றன என்பதைச் சுட்டிக்காட்டினர்.

மக்கள் குறியீடுகள் மூலம் அவர்களின் உலகத்தை வரையறுத்துக் கூறுகின்றனர். அதைக் கொண்டு பிரபஞ்சம் பற்றிய அவர்களின் கருத்தினை ஏற்படுத்திக் கொள்கின்றனர் என்பார் கிளிஃபோர்டு கீர்ட்ஸ். இவர் சமயத்தை ஒரு குறியீட்டு முறை (symbolic system) என்றே குறிப்பிடுவார். இக்குறியீட்டு முறை, உண்மையான உலகத்தின் தன்மையை உறுதிப்படுத்திக் கூறுகிறது; உண்மையான உலகத்தைப் பற்றிய மக்களின் உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் ஒன்றுபடுத்திக் கூறுகிறது; அதோடு மக்களின் நிலைபேறுடைமைக்கும் (existence), வாழ்வதற்கான காரணங்களையும், உலகத்தைப் பற்றிய கருத்துகளையும், சமயம் என்னும் ஒழுங்கமைப்பு குறியீட்டாக்கம் செய்கிறது; அவற்றை விளக்கிப் பொருள் கூறுகிறது.

குறியீடுகள் பற்றிய ஆய்வில் மேரி டக்லாஸ் ஒரு புதிய அணுகுமுறையை ஏற்படுத்திக்கொண்டார். இவர் உலகளாவிய குறியீடுகளைக் (universal symbols) காண்பதில் ஆர்வங் கொண்டார். குறிப்பாக, வரலாற்றின் பல்வேறு காலங்களில் பல்வேறு பண்பாடுகளில் இடம்பெற்ற குறியீடுகளைக் கண்டறிய விரும்பினார். தொன்மை மக்களின் வகைப்பாடு குறித்துத் தர்க்கையும் மாஸ் (Mauss) அவர்களும் செய்த ஆய்வுகள் டக்லாசுக்கு ஊக்கமளித்தன. குறியீட்டு அமைப்பானது ஏதோ ஒரு வகையில் சமுதாய அமைப்பைப் பிரதிபலிப்பதாக இருக்குமென்ற எடுகோளை முன்வைத்தார். அவ்வாறே பல்வேறு பண்பாடுகளிலும் மக்கள் மனித உருவத்தை எந்தெந்த முறையில் பயன்படுத்துகின்றனர் என்பதைக் காண்பதன் மூலம் இயற்கைக் குறிகள் பற்றிய மனிதர்களின் விதிமுறைகளைக் காண இயலும் என்ற எடுகோளையும் முன்வைத்தார்.

மேற்கூறிய அனைத்து வகையான ஆய்வுகளும் இரண்டு மையக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதை இங்குத் தனியாகப் பிரித்துக் காணவேண்டும். ஒன்று : ஒவ்வொரு பண்பாட்டிலும் 'குறியீட்டாக்கம்' (symbolization) எவ்வாறு நிகழ்கிறது? அது பிற பண்பாட்டுக் கூறுகளோடு எவ்வாறு தொடர்பு பெற்றுள்ளது? இரண்டு : குறியீடுகள் நிகழ்த்தும் செயல்கள் என்னென்ன? அவை தனிமனிதர்களோடும்

Scanned by TapScanner

பல தனிமனிதர்கள் சேர்ந்த குழுவினரோடும் பெறும் பங்கென்ன? அவை சமுதாயத் தேவைகளை நிறைவடையச் செய்யும் பணியில் எவ்வாறு பங்குபெற்றுள்ளன? இவற்றின் அடிப்படையிலேயே இன்றைய ஆய்வுகள் அமைகின்றன.[63]

## பண்பாடு ஒரு சார்புடைய முறை

## (Culture as Relative System)

ஒவ்வொரு பண்பாடும் அதற்கே உரிய மதிப்பைப் பெற்று விளங்குகிறது. அதன் பழக்க வழக்கங்களும், பிற நடத்தை முறைகளும் அப்பண்பாட்டோடு மிகவும் ஒத்திசைவு பெற்றுள்ளது. ஒரு பண்பாட்டை உயர்ந்தது என்றோ மற்றதைத் தாழ்ந்தது என்றோ கூற இயலாது. இவ்வகையான மனிதநேயக் கருத்தை அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நிறுவியவர்கள் மானிடவியலாரே. இவர்களின் இக்கருத்து இன்று பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கை (cultural relativism) எனப் பெருவழக்காக வழங்கப்பெறுகிறது.

எந்த ஒரு பண்பாட்டினரும் அவர்களின் சொந்தப்பண்பாட்டு முறைகள் சிறந்தது எனக் கருதுவர். அவர்களின் பழக்க வழக்கங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட பண்பாட்டினரைத் தாழ்ந்தவர்கள், அருவருப்பான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்கள் எனவும் கருதுவர். இது இயல்பு. ஆனால் உண்மையல்ல. பண்பாட்டுச் சார்புடைமைக் கருத்துப்படி, ஒரு பண்பாட்டின் மதிப்புகள், செய்ல்முறைகள் அந்தந்தப் பண்பாட்டோடு சார்புடையது. நல்லது, கெட்டது; உயர்ந்தது, தாழ்ந்தது; பயனுள்ளது, பயனற்றது என்பவை அனைத்தும் ஒரு பண்பாட்டிற்குள் மட்டுமே கையாளப்பட வேண்டிய சொற்கள். ஒரு பண்பாடு உயர்ந்தது என்றோ தாழ்ந்தது என்றோ கூறுமளவிற்கு அனைத்துப் பண்பாடுகளையும் கடந்த பொதுக்கூறுகள் (culture - free means) இல்லை. ஆகவே பண்பாடுகளை ஒப்பிட்டு மதிப்பிடமுடியாது.

இந்துக்களுக்குப் பசு ஒரு புனிதமான கால்நடையாகும். இதை இறைச்சிக்காகக் கொல்லமாட்டார்கள். ஒரு துணைமண முறையே (monogamy) இவர்களுக்கு ஏற்புடையது. பலதுணை மணமுறையை (polygamy) விரும்பி ஏற்கமாட்டார்கள். மணவிலக்கு (divorce) அடிக்கடி செய்யமாட்டார்கள். இந்துக்களின் இவ்வகைக் கருத்துகள் வேற்றுப்

63 Raymond Firth, *Symbols : Public and Private* (Ithaca, New York: Cornell University Press, 1984), pp. 92 - 127.



பண்பாட்டினருக்கு ஏற்புடையதல்ல. அதனால் எவரொருவரும் தாழ்ந்தவரென்றோ உயர்ந்தவரென்றோ கூறிக்கொள்ள முடியாது. இந்துக்களிடமும் கூட இறைச்சி உணவு உண்போரும் சைவ உணவு உண்போரும் உள்ளனர். எது உயர்ந்தது, எது தாழ்ந்தது என்பதை வலியுறுத்திப் பேசக் கூடாது. அவ்வாறு பேசுவது இனமையவாதத்தைக் (ethnocentrism) குறிக்கும்.

பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கை 20 - ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் மிகுந்த வலுப்பெற்றது. அதற்குக் காரணமாக இருந்தவர்கள் அமெரிக்க மானிடவியலின் தந்தை பிரான்ஸ் போவாசும் அவரின் மாணவர்களும் ஆவார்கள். இக்கொள்கையில் அவர்கள் பற்றுடையவர்களாதலால் "தொன்மை" (primitive) "தாழ்ந்தது," "காட்டுமிராண்டி" போன்ற சொற்கள் பயன்படுத்தப்படுவதைப் பெரிதும் குறை கூறினர்: இவ்வகைச் சொற்கள் இழிவுபடுத்தும் நோக்கத்துடனே பயன்படுத்தப்படுகிறது என அவர்கள் எண்ணினர். இது குறித்து மேலும் சில கருத்துகள் அடுத்த அத்தியாயத்தில் 'பழங்குடி' என்னும் உட்தலைப்பில் இடம் பெறுகின்றன. போவாசினர் பழங்குடிகளைத் தாழ்ந்தவர்கள் என்று கூறுவது அவர்கள் பண்பாட்டைப் புரிந்துகொள்ளாமல், அறியாமையால் உளறுவதாகும் என்றும் கடிந்து பேசினர். இவ்வகைக் கருத்துகள் தன்னின உயர்வுவாதத்தினால் எழுவது என்றும் இதன் பொருளைப் புரிய வைக்க வேண்டியது மானிடவியலாரின் கடமை என்றும் வலியுறுத்தி வந்தனர்.

### இனமையவாதம்

பண்பாட்டு முறை என்பது மனிதர்களுக்கு மட்டுமே உரியது. ஆனால் அனைவரும் ஒன்றுபட்டவர்கள் அல்லர். உயிரியல் கூறுகளால் மட்டுமே அனைவரும் ஒன்றுபடுகின்றனர். பண்பாட்டால் வெவ்வேறு குழுக்களாகப் பிரிந்து காணப்படுகின்றனர். ஒவ்வொரு பண்பாட்டைச் சேர்ந்தவர்களும் அவர்கள் வாழும் முறையால் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபடுகின்றனர். இவர்கள் பிறந்தது முதல் அவரவர்களின் பண்பாட்டு முறையிலேயே ஊறி விடுவதால் அவரவர் வாழ்க்கை முறையே மிகவும் ஏற்றது என்றும் உயர்வானது என்றும் கருதுகின்றனர். பிற பண்பாட்டினரின் பழக்க வழக்கங்கள் புதியதாகவும், பழக்கமில்லாமலும், வேறுபட்டும் உள்ளதால் அவற்றைத் தாழ்வாகக் கருதுகின்றனர். அதாவது, தன் சொந்தப் பண்பாட்டின் முறையை அளவுகோலாகக் கொண்டு பிற பண்பாடுகளை மதிப்பிடும் பாங்கினை இது குறிக்கிறது. இதன் இறுதி நிலை, தன் சொந்தப் பண்பாடே உயர்ந்தது என முடிவு

செய்வதாக அமைகிறது. இவ்வகைக் கருத்தே இனமையவாதம் அல்லது தன்னின உயர்வுவாதம் அல்லது தன்னினப்பற்று (ethnocentrism) எனப்படும்.

உளவியல் நோக்கில் ஆராய்ந்தால் தன்னிப் பற்று உணர்வானது போட்டி, பொறாமையினால் உருவானது அன்று. தன் சொந்தப் பண்பாட்டின் மீதுள்ள பற்றால் ஏற்படுவது. இந்த மனப்பான்மை சிலரிடம் உள்ள குறையை மறைப்பதற்காக இருக்கலாம் அல்லது தன்முனைப்பின் வெளிப்பாடாகவும் அமையலாம். பொதுவாகப் பண்பாட்டைப் பற்றிய நுட்பமான அறிவு இல்லாதவர்கள், வெளி உலகுடன் தொடர்பு கொள்ளாமல் இருப்பவர்கள், பிறருடன் நெருங்கிப் பழகாமல் தனித்திருக்கும் இயல்புடையவர்கள், பிறரிடம் குற்றங்காணும் குணமுடையவர்கள், தீவிர மொழிப்பற்று, சமயப் பற்றுள்ளவர்கள், நாட்டுணர்வு உள்ளவர்கள், பகுத்தறிவு இல்லாதவர்கள், எதேச்சதிகார மனப்பான்மை உடையவர்கள் போன்றோரே தன்னினப்பற்றுடையவர்களாக உள்ளனர்.

சிலர் மேற்கூறிய மனப்பான்மைக்கு மாறாக, அவர்களின் சொந்தப் பண்பாட்டினை மதிக்காதவர்களாகவும் உள்ளனர். இவர்கள் அயலின உயர்வுவாதம் அல்லது அயலினப்பற்று (xenocentrism) உடையவர்களாய்க் காணப்படுகின்றனர். இவர்கள் தன் சொந்தப் பண்பாட்டின் முறைகள் சிறந்தவையல்ல, தாழ்வானவை எனக் கூறி அயற்பண்பாட்டினை உயர்வாகப் பேசி வருவர்; பண்பாட்டு மாற்றத்திற்கு விரும்பி உட்படுபவர்களாக இருப்பர்; அயற்பண்பாட்டு மோகத்தினால் தன் சொந்தப் பண்பாட்டுப் பொருள்களையும், நடத்தை முறைகளையும் வெறுத்து ஒதுக்குவர். தன்னினப்பற்று, அயலினப்பற்று ஆகிய இரண்டு வகையான மனப்பான்மையிலும் சில நன்மைகளும் பல தீமைகளும் உள்ளன.

## பண்பாடு ஒரு நடத்தைசார் முறை

## (Culture as Behavioural System)

18 - ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்திலிருந்து 19 - ஆம் நூற்றாண்டின் தொடக்கம் வரை மக்களின் நடத்தைமுறைகளை விளக்கிக் கூறுவதில் உயிரியல், இனவியல், சுற்றுச்சூழலியல் ஆகியவற்றின் கருத்துக்களே பெருமளவு இடம் பெற்றிருந்தன. மக்களும் அவர்களின் நடத்தைமுறைகளும் அவரவர் உயிரியல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன, இனவியல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன, சுற்றுச்சூழல் கூறுகளால் நெறிப்படுத்தப்படுகின்றன என்ற கருத்து மேலோங்கியிருந்தது. போவாசும் அவரின் மாணவர்களும் அமெரிக்க மானிடவியலில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றவுடன் மேற்கூறிய கருத்துகளைக் கடுமையாக எதிர்த்தனர். மனிதன் பண்பாட்டுக் கூறுகளினால் மட்டுமே உருவாக்கப்படுகிறான் என்றும் அவன் தன் பண்பாட்டுக் குணநலன்களைத் தானாகவே சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்பதன் மூலம் ஒரு முதிர்ந்த மனிதனாகிறான் என்றும் இவர்கள் வாதிட்டனர். இவர்களின் இக்கருத்து பண்பாட்டு அறுதிப்பாட்டியம் (cultural determinism) எனப் பரவலாகக் கூறப்படும். இக்கொள்கை மூலம் பண்பாடு ஒரு நடத்தைசார் அமைப்பு என்பது உறுதியாகிறது.

போவாசிற்கடுத்து நடத்தைமுறை சார்ந்த ஆய்வுகளும் உளவியல் சார்ந்த ஆய்வுகளும் பெருகின. இவ்வகை ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் எட்வர்டு சப்பிர், ரூத் பெனிடிக்ட், மார்கரட் மீடு, ஆப்ரகாம் கார்டினர், கோரா டுபாய்ஸ், கேசரோஹிம் முதலானோர் குறிப்பிடத்தக்கவர்கள். மானிடவியலில் நடத்தை முறையைப் பற்றிய ஆய்வுகளுக்குப் பின்வரும் பின்னணியே காரணமாக அமைந்தது.

சமுதாயத்தில் நிகழும் இளங்குற்ற நடத்தை, அன்னியமாதல் (alienation), சமுதாய மாற்றம் முதலானவற்றை அறிவதில் பொது மக்களிடமும் கல்விசார் துறையிலும் ஆர்வம் மிகுதியானது. குறிப்பாக, முதல் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட இந்த ஆர்வம் தனிமனித உளவியலையும், உளவியலின் பிற கூறுகளையும் பற்றியதாக அமைந்தது. இவ்வகைச் சிக்கல்களை ஆராய முற்பட்ட உளவியலார் மேற்கத்தியச் சமுதாயத்தை மட்டுமே ஆய்வு செய்தனர். இந்நிலையில் மானிடவியலார் உளவியல் முறைகளைப் பயன்படுத்தி மேற்கத்தியரல்லாத பண்பாடுகளை ஆய்வு செய்ய முனைந்தனர்.

### பண்பாடும் ஆளுமையும்

1920, 30 களில் அமெரிக்காவில் போவாசின் மாணவர்களுள் பலர் உளவியல் கொள்கைகளையும் அதன் ஆய்வு முறைகளையும் பண்பாட்டிடை நிலையில் (cross - cultural) பயன்படுத்தவும் சோதித்துப் பார்க்கவும் ஆர்வங்கொண்டனர். அவர்கள் மேற்கொண்ட இவ்வகை ஆய்வுகள் பண்பாடும் ஆளுமையும் (personality) குறித்த ஆய்வுகள் எனக் கூறப்பட்டன. ஆனால் அவர்களுக்குப் பின் ஆய்வுசெய்தோர் இப்பிரிவை உளவியல்சார் மானிடவியல் (psychological anthropology) எனக் கூறத்தொடங்கினர்.

ப.மா.16.

Scanned by TapScanner

மேற்கத்தியரல்லாத சமுதாயங்களில் பண்பாடும் ஆளுமையும் பற்றி ஆராய்ந்த மானிடவியலார் சில உளவியல் முறைகளை மட்டும் பயன்படுத்தினர். அவை : கற்றல்முறை (learning system), முழுமை உளவியல் (gestalt psychology), பிராய்டின் சில கொள்கைகள் முதலானவையாகும்: இம்முறைகளைப் பயன்படுத்தி ஆராய்ந்த அவர்கள் தனிமனிதர்களின்மீது பண்பாட்டின் தாக்கம் என்ன என்ற கருத்தை மையமாகக் கொண்டிருந்தனர். சில ஆய்வாளர்கள் பண்பாட்டில் சிலரிடம் மட்டும் மிகவும் உகந்த (ideal) ஆளுமை எவ்வாறு ஏற்படுகிறது என்பதை ஆராய்ந்தனர். வேறு சிலர் பால் வேறுபாடுகள் பற்றி ஆராய்ந்தனர்.

தொடக்ககால உளவியல்சார் மானிடவியலில் எட்வர்டு சப்பிர் (1884 - 1934) சிறப்பிடம் பெற்றிருந்தார். இவர் மானிடவியல்சார் மொழியியலோடும் தொடர்புடையவர். சப்பியர்வெஸ்ர்ப் ஏடுகோள் மொழியியல் ஆய்வுகளில் சிறப்பிடம் வகிக்கிறது. சப்பிர், ஒரு பண்பாட்டில் ஆளுமை எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதை ஆராய்வதிலும் ஆர்வங்கொண்டார். வழக்கமாக மேற்கொள்ளப்படும் இனக்குழுவியல் ஆய்வுகள் மூலம் தனிமனிதர்களையும், அவர்களின் உணர்ச்சிகளையும், சூழலிற்கேற்ப மாறுபடும் நடத்தைமுறைகளையும் அறியமுடியவில்லை என சப்பிர் எண்ணினார். இக்குறையைப் போக்க உளவியல் கொள்கைகளையும், முறைகளையும் பயன்படுத்தி பண்பாட்டிடை நிலையில் ஆராய வேண்டும் என வலியுறுத்தினார். பண்பாட்டின் இயல்நிகழ்ச்சிகள் மக்களின் உளவியற் பாங்குகளையும் பண்பாட்டின் உட்கருத்துகளையும் தெளிவுடன் காட்டுமாதலால் பண்பாட்டின் உண்மையான கருத்து அல்லது அதன் உறைவிடம் மனிதர்களுக்கிடையே நிகழும் இடைவினைகளில் உள்ளது. இந்த இடை வினைகளின் போது ஏற்படும் பட்டறிவு மக்களிடையே கருத்தளவில் (மனதில்) பதிந்துவிடுகின்றன. இவை வெளிப்படும்போது அப்பண்பாட்டிலுள்ள அனைவராலும் அவை புரிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது என சப்பிர் கருதினார். இதனால் சப்பிர் பண்பாட்டை உளவியல் உண்மைப்படி (psychological reality) காண விரும்பினார். இதுவே பண்பாட்டில் ஒரு தனிமனிதரின் உண்மைப் பாங்காகவும் இயல்பான பாங்காகவும் இருக்குமென நம்பினார்.

மக்கள் எவ்வாறு தங்கள் தாய்மொழியைப் பேசக் கற்றுக் கொள்கிறார்களோ அவ்வாறே பண்பாட்டின் அமைப்புகளையும் நனவிலி (unconscious) நிலையில் கற்றுக்கொள்கின்றனர் என்பார்



சப்பிர். பண்பாடு ஒவ்வொரு தனிமனிதராலும் வெளிப்படுத்தப் படுகிறது அல்லது அவருள் உறைந்துள்ளது என்பதால் பண்பாட்டின் தன்மையை அறிவதென்பது தனிமனிதரை அறிவதாகும். சப்பிரின் கருத்துப்படி, சில பண்பாடுகள் தனிமனிதர்களைச் சிறப்பாக நடத்துகிறது; அவர்களை மிகவும் இணக்கமாகவும் சமநிலையிலும் நடத்துகிறது; உறுப்பினர்கள் தங்களின் கருத்துகளைச் சுதந்திரமாக வெளிப்படுத்த வழி கோலுகிறது. ஆனால், சில பண்பாடுகள் உறுப்பினர்களுக் கிடையே மனவிரிசலையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்தி அவர்களை ஒருவிதத் துன்பத்தில் ஆழ்த்திவிடுகிறது. இக்கருத்துகளைக் குறிப்பிட்ட சப்பிர் புதுவகையான சொற்களைக் கையாண்டார். முதல்வகைப் பண்பாட்டைத் தன்னியல்பான அல்லது 'உண்மைப் பண்பாடு' (genuine culture) என்றும் இரண்டாம் வகைப் பண்பாட்டைத் தன்னியல்பற்ற அல்லது 'போலிப் பண்பாடு' (spurious culture) என்றும் குறிப்பிட்டார். பண்பாடு எவ்வாறு தனிமனிதர்களைப் பாதிக்கிறது என்ற புதிய பரப்பில் சப்பிர் ஏற்படுத்திய ஆர்வம் உருத் பெனிடிக்ட், மார்கரட் மீடு ஆகிய இருவரிடமும் பெரும் தாக்கத்தை உண்டாக்கியது.

உருத்ஃபுல்டன் பெனிடிக்ட் (1887 - 1948) தொடக்கத்தில் தத்துவம், இலக்கியம் பயின்றவர். பின்னர் மானிடவியல் துறையில் ஈடுபாடு கொண்டார். பண்பாடும் ஆளுமையும் குறித்து இவர் கொண்டிருந்த ஆர்வம் சப்பிர் அவர்களுடன் ஏற்பட்ட தொடர்பால் வலுப்பெற்றது. இந்த ஆர்வம் அவரின் பேராசிரியர் போவாஸ் கொடுத்த ஊக்கத்தினால் மேலும் வலுவடைந்தது.

பெனிடிக்டின் முக்கியமான ஆய்வு நூல்களுள் ஒன்று 'மானிடவியலும் இயல்பிறழ்வும்' (Anthropology and Abnormality, 1934) ஆகும். அந்நூலில் ஒருவருக்கு ஏற்படும் இயல் பிறழ்வுத் தன்மையைப் பண்பாடு மட்டுமே அறுதியிடுகிறது என உறுதிப்படுத்தினார். ஒரு சமுதாயத்தில் காணப்படும் இயல்பிறழ்வுத் தன்மை அல்லது "பித்துத்தன்மை" (insane) என்பது அச்சமுதாயத்திற்கு மட்டுமே பொருந்தக்கூடியது. வேறொரு சமுதாயத்தில் அந்த தன்மை இயல்பானதாகவும், பித்துத் தன்மையற்றதாகவும், இணக்கமானதாகவும் கருதப்படும். இக்கூற்றையே வேறொரு முறையில் கூறுவதானால், ஒரு பண்பாட்டில் சில பண்புகள் நன்னிலையற்றவை என்று கூறுமளவிற்கு ஓர் உலகளாவிய நன்னிலை (universal sanity) இல்லை. அதனால் இயல்பிறழ்வு என்பது ஒருவர் அவரது பண்பாட்டின் நெறிமுறைகளை ஏற்று நடக்காத போக்கையே

Scanned by TapScanner

குறிக்கும் என்பார் பெனிடிக்ட். ஒரு பண்பாட்டின் நெறிமுறைகளின் எதிர்பார்ப்பு வேறொரு பண்பாட்டில் வேறுபடுமாதலால் இயல்பிறழ்வுத்தன்மையைக் குறிப்பிட ஓர் உலகளாவிய அளவுகோல் இல்லை என்பார்.

ஒருவர் பிறக்கும்போது பலதரப்பட்ட ஆளுமை வகைகளைப் பெறும் திறம்பெற்றவராகவே காணப்படுகிறார். ஆனால் ஒவ்வொரு சமுதாயமும் பண்பாட்டுவயமாக்க (enculturation) முறையால் தன் பண்பாட்டின் நெறிமுறைகளைப் புகுத்தி அவரை அச்சமுதாயத்திற்கு உகந்த மனிதராக மாற்ற முனைகிறது என்ற மையக் கருத்தை பெனிடிக்ட் அடிக்கடி குறிப்பிடுவார். பண்பாட்டுவயமாக்க முறை மூலம் சமுதாயத்தில் அனைவரும் ஒத்த தன்மையைப் பெறுவதற்குக் கற்பிக்கப்பட்டாலும் ஒவ்வொரு மனிதனிடமும் காணப்படும் ஏற்புத்தன்மையின் நெகிழ்வுப்பாங்கு (human plasticity) சமுதாயத்தில் பலவகையான ஆளுமை வகைகளை ஏற்படுத்திவிடுகிறது.

ஆளுமை வகைகளைப் பற்றி ஆராய்ந்த பெனிடிக்ட் அவர்தம் முடிவுகளைத் தொகுத்து 'பண்பாட்டுக் கோலங்கள்' (Patterns of Culture, 1934) என்னும் நூலாக வெளியிட்டார். அந்நூல் மானிடவியலின் மிகச் சிறந்த நூல்களுள் ஒன்று எனப் பெயர் பெற்றுவிட்டது. அந்த ஆய்வில் சூனி (Zuni), தோபு (Dobu), குவாக்யூட்டில் (Kwakuitl) போன்ற இன்னும் பிற பழங்குடிச் சமுதாயங்களை ஆய்வு செய்து ஒவ்வொரு பண்பாட்டிற்குமான உளவியல் அமைப்பினைக் கண்டுபிடிக்கும் திட்டத்தை உருவாக்குவதில் முனைந்தார். இவரது இம்முயற்சி குரோபர் மேற்கொண்ட அமைப்பொழுங்கு (configuration) அணுகுமுறை போன்று இருந்தது என்றாலும் பெனிடிக்டின் முறை உளவியல். அடிப்படையிலானது. டைலரின் முறை பண்பாட்டின் பாணியை (style) அறிவதாக இருந்தது.

பெனிடிக்ட் அம்மையார் சூனி, பியூப்லோ (Pueblo) மக்களிடம் மேற்கொண்ட களப்பணித் தரவுகளையும், தோபு மக்களைப் பற்றி இரியோ பார்ச்சூன் (Reo Fortune) சேகரித்த தரவுகளையும், வடமேற்குக் கடற்கரை குவாக்யூட்டில் இந்தியர்களைப் பற்றி போவாஸ் சேகரித்த களப்பணி குறிப்புகளையும் பெற்று இம்மூன்று சமுதாயத்தினரும் எவ்வாறு அவரவர் சமுதாயத்திற்கு உகந்த ஆளுமையை ஏற்படுத்திக்கொள்கிறார்கள் என்பதை பெனிடிக்ட் விளக்கினார். இம்மூன்று பழங்குடிகளைக் குறிப்பிடும்போது, சூனி மக்கள்



வாழ்வில் நன்னெறிகளையும் அமைதியையும் கொண்டவர்கள் (apollonian); கொந்தளிப்பில்லாதவர்கள்; அமைதியானவர்கள்; அனைத்தையும் நடுத்தரமான போக்கில் காண்கிறவர்கள் என்று கூறுவார். ஆனால் தோபு மக்களைக் குறிப்பிடும்போது, அவர்கள் குழப்பமானவர்கள் (paranoid); சந்தேகக் குணமுள்ளவர்கள்; பயந்த பாங்கினர்; எதையும் அளவுக்கு மீறி எண்ணிச் செயல்படுகிறவர்கள் என்பார். குவாக்யூட்டில் மக்களைப் பற்றி எழுதும் போது அவர்களைத் தற்பெருமை உணர்வுடையவர்கள் (megalomanical); தன்னலப்போக்குடையவர்கள்; தன்முனைப்புப் போக்குடையவர்கள் (egotistic) என்று குறிப்பிடுவார். இக்கருத்துகளைக் கொண்டு பெனிடிக்ட் பண்பாட்டை அமைதிப் பண்பாடு (apollonian), முரட்டுப் பண்பாடு (dionysian) என இருவகையாகப் பிரிப்பார்.[64] ஒவ்வொரு சமுதாயத்தின் பண்புகளைப் பற்றிய பெனிடிக்டின் கருத்துகள் மிகைப்படுத்தப் பட்டதாக உள்ளது எனத் திறனாய்வாளர்கள் கருதினர். இவரது ஆய்வு முடிவுகளுக்கு எதிர்மாறாக இருந்த தரவுகளை பெனிடிக்ட் ஒதுக்கிவிட்டார் எனவும் அவர்கள் குறை கூறினர்.

மக்களிடையே எண்ணிலடங்கா வகையிலான மாறுபாடுகள் காணப்படுவதற்கு வாய்ப்புள்ளதால் அவை பற்றி மிகப்பெருமளவில் பொதுமையாக்கம் செய்வதையும், காரண காரியத் தொடர்புகளை விளக்குவதையும் மக்களின் வேறுபட்ட பாங்கு தடைசெய்கிறது. இந்நிலையில் பெனிடிக்டின் கொள்கை நிலை பண்பாட்டுச் சார்புடைமைக்கு வழிகோலுவதாகப் பலர் எண்ணினர். போவாசின் வரலாற்றுச் சார்புக் கொள்கை அணுகுமுறையைப் (historical particularistic approach) போன்றே பெனிடிக்டும் ஆளுமை அமைப்புகளானது வரலாற்றுக் காலத்தினூடே உருவாக்கப்பட்டவை எனக்கருதினார். இவரது ஆய்வு செயற்பாட்டியல் அணுகுமுறையைக் கொண்டது. இவர் பண்பாட்டை ஓர் ஒன்றியமான அமைப்பு என்றும், பண்பாடு அதன் உறுப்பினர்களைத் தன் நெறிமுறைகளுக்கு (norms) ஏற்ப வளர்க்கும் செயலைச் செய்கிறது என்றும் உறுதியாக நம்பினார். இருப்பினும் இவர் ஏற்படுத்திய பண்பாட்டு அமைப்பொழுங்கு களில் (Cultural configurations) சார்புடைய மாறிகளையும் (dependent variable) சார்பற்ற மாறிகளையும் (independent variable) தெளிவாகக் காணவில்லையென்றும் அவைஎவ்வாறு

64 R. Benedict, *Patterns of Culture* (New York: Houghton Mifflin Company, 1934), pp. 57 - 58.

Scanned by TapScanner

மாற்றம்பெறுகின்றன என்பதைவிளக்கவில்லை என்றும் சிலர் கூறுவர். ஆனால் பெனிடிக்ட் பண்பாட்டை ஒரு நிலையான அமைப்பாக எடுத்துக்கொண்டு அதில் ஆளுமையின் வளைந்து கொடுக்கும் தன்மை (plasticity) எவ்வாறு உள்ளது என்பதைப் பற்றி அறிவதில் கவனம் கொண்டிருந்தார்.

மார்கரட் மீடு (1901 - 1978) பெனிடிக்டின் மாணவர்களுள் ஒருவர். இந்த அம்மையாரும் தன் பேராசிரியரைப் போன்றே பண்பாடும் ஆளுமையும் பற்றி தொடக்கக்காலத்திலிருந்தே ஆராய முற்பட்டார். இவரது ஆய்வுகளில் 'தனிமனிதர்களும் பண்பாட்டுவயமாக்க முறையும்' (enculturation process) என்ற கருத்தை மையமாகக் கொண்டு ஆராய்ந்தார். குறிப்பாக 1920இ 30களில் பொதுமக்களிடமும் அறிஞர்களிடையேயும் மிக விரிவாகப் பேசப்பட்டு வந்த குமரப்பருவச் சிக்கல்கள், இளங்குற்ற நடத்தைகள், பூப்புக்காலத்தில் ஏற்படும் பொதுவான உணர்வெழுச்சிகளின் தாக்கம் முதலானவை பற்றி மீடு மிகவும் ஈடுபாடு கொண்டு ஆராய்ந்தார்.

குமரப்பருவச் சிக்கல்களினால் தோன்றும் சமுதாயச் சிக்கல்களும், உணர்வெழுச்சிசார்ந்த முரண்பாடுகளும் உயிரியல் அடிப்படையில் ஏற்படுபவை என்று ஒருசாரார் விவாதித்து வந்தனர். அவர்களுக்குச் சமமாக மற்றொரு சாரார் குமரப்பருவச் சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையில் அமைந்தவை என்று கூறிவந்தனர். அதனால் மீடு தன் தொடக்கக்கால ஆய்வுகளில் இவ்வகைச் சிக்கல்களுக்குக் காரணமாக உள்ள பண்புகளுள் பண்பாட்டு அடிப்படையில் வருபவை எவை, உயிரியல் அடிப்படையில் வருபவை எவையென ஆராய்ந்தார். இவர் எழுதிய 'நியூகினி மக்களின் வளர்ப்பு முறை' (Growing Up in New Guinea, 1930), 'சமோவா சமுதாயத்தில் உரிய வயதடையும் பாங்கு' (Coming of Age in Samoa, 1928) ஆகிய இரண்டு நூல்களும் குமரப்பருவச் சிக்கலை நன்கு ஆராய்ந்து எழுதப் பட்டவையாகும். ஆய்வின் முடிவினைக் குறிப்பிடும்போது குமரப்பருவத்தில் ஏற்படும்' உணர்வெழுச்சி சார்ந்த சிக்கல்கள் அனைத்தும் பண்பாட்டு அடிப்படையிலானவை என உறுதியாகக் கூறினார்.

இவர் எழுதிய 'பாலும் மனவியல்பும்' (Sex and Temperament, 1935) என்னும் நூல் உயிரியல் அடிப்படையில் நிலை நிறுத்தப்படும் பண்புகள் எவை, பண்பாட்டு அடிப்படையில் நிலைநிறுத்தப்படும் பண்புகள் எவை என்பதைப் பற்றியதாகும். இருப்பினும் அந்நூல் ஆண், பெண் இருபாலாரின்



மனவியல்பினை விளக்குவதற்காக எழுதப்பட்டது. உயிரியல் கூறுகள் அடிப்படையிலான ஆண், பெண் மனவியல்பு (temperament) உலகம் முழுவதும் பொதுவாக உள்ளதா? அல்லது ஆண்மைத் தன்மை, பெண்மைத்தன்மை என்ற பாங்கைப் பெறுவதற்குப் பண்பாடு மக்களை நெறிப்படுத்துகிறதா? என்னும் கூற்றை ஆராய்ந்த மீடு உலகளாவிய நிலையில் ஆண்களுக்கென்று தனியாகவும் பெண்களுக்கென்று தனியாகவும் மனவியல்புக் கூறுகள் இல்லை என அறிந்தார். அவ்வாறு ஆண்களுக்கென்று தனியாகவும் பெண்களுக்கென்று தனியாகவும் ஆளுமை இருக்குமானால் அது பண்பாட்டால் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதாகும். எடுத்துக்காட்டாக, ஆண்கள் முரட்டுத்தன்மை பெற்றவர்கள் என்பதும் பெண்கள் அமைதித்தன்மை பெற்றவர்கள் என்பதும் பண்பாட்டளவில் ஏற்பட்டதே. ஆண்மைத்தன்மை, பெண்மைத்தன்மை பற்றி மீடு குறிப்பிடும் இக்கூறுகள் மனவியல்பு, ஆளுமை பற்றியது மட்டுமே. இனப்பெருக்கச் செயல்களையோ பிறசெயல்களையோ குறிப்பிடவில்லை.

பண்பாட்டுவயமாக்கத்தின் மூலம் ஆண், பெண் இருபாலாரும் தத்தம் சமுதாயத்திற்கு ஏற்ற இயல்பான மனநிலையைப் பெறுகிறார்கள் என்று அறிந்த மீடு சமுதாயத்திற்கு முரண்பாடுள்ள (deviant) மனிதர்கள் உருவாகும் முறையை விளக்குவதில் சிக்கல்கள் உள்ளதாக உணர்ந்தார். 'பாலும் மனவியல்பும்' நாலில் முரண்பாடுள்ள நடத்தைமுறை உயிரியல் அடிப்படையில் மட்டுமே தோன்றுகிறது பண்பாட்டால் அன்று என் முடிவு செய்தார். இருப்பினும் ஒவ்வொருவரின் மனவியல்பு பண்பாட்டால் அறுதியிடப் படுகிறது என்னும் கருத்தில் உறுதியாக இருந்தார்.

மீடு ஆய்வு செய்த அரபேஸ் (Arapesh) பழங்குடிகளை ஆர். பார்ச்குன் அவர்களும் விரிவாக ஆய்வு செய்ததலால் மீடு ஆய்வினைப் பல கோணங்களில் அவர் திறனாய்வு செய்தார். அரபேஸ் சமூகத்தில் ஆண், பெண் இருபாலாரின் மனவியல்பு பெண்மைத்தன்மை போன்று உள்ளது, அனைத்து ஆண் குழுக்களையும் ஆய்வுசெய்து அவர்களின் செயல்களை மதிப்பிட்டுள்ளேன் என்று மீடு கூறிய கூற்றுகளை பார்ச்குன் கேள்விக்குரிய தாக்கினார். பார்ச்குன் கூற்றுப்படி அரபேஸ் சமூகத்தில் ஆண்களுக்கென்று தனிப்பட்ட செயல்கள் பல உண்டு. அவற்றை ஒரு பெண் காணவோ அதைப்பற்றி அறியவோ இயலாது. அவ்வாறானசூழலில், தான் ஒரு ஆண் என்ற முறையில்

பல மறுப்புகளுக்கிடையில் முயன்று அறிந்தேன். அவ்வாறு இருக்கும்போது மீடு ஒரு பெண் என்ற நிலையில் அவர்களைப் பற்றி அறிந்தவற்றை இங்கு எழுதியிருக்க முடியாது. எனக் குற்றஞ்சாட்டினார். தன் ஆய்வுகள் குறித்துத் திறனாய்வாளர்கள் கூறிய குற்றச்சாட்டுகளுக்கு 1950 - இல் மறுபதிப்புச் செய்த 'பாலும் மனவியல்பும்' என்னும் நூலின் முன்னுரையில் மீடு பதில் கூறியுள்ளார்.

ஏ. ஐ. ஹாலோவெல் என்பார் ஒஜிப்வா (Ojibwa) இந்தியர்களின் உளவியற் பாங்குகளையும் அவர்கள் ஐரோப்பியரோடு கொண்டிருந்த பண்பாட்டுத் தொடர்பினையும் பல ஆண்டுக்காலம் ஆராய்ந்தவர். அந்த ஆய்வின் பயனாய் அம்மக்களின் பண்பாட்டுத் தொடர்பு நிகழ்வில் காணப்பட்ட பல்வேறு கூறுகளின் செயல்களையும் அந்த நிகழ்வில் தனிமனிதர்கள் அனுபவித்த நெருக்குதல்களையும் ஒன்றுபடுத்தி அறிய நேரிட்டது. இவரது ஆய்விற்கு மூன்று ஒஜிப்வா இந்தியச் சமூகங்களை எடுத்துக்கொண்டார். இம்மூன்று சமூகங்களும் வெவ்வேறு நிலையில் ஐரோப்பியரின் பண்பாட்டுத் தாக்கத்தைப் பெற்றிருந்தன. வெவ்வேறு நிலையிலிருந்த அச்சமூகத்தினரைக் கருத்தறிச் சோதனை (projective test), பொருள் இணைத்தறி சோதனை (Thematic Apperception Test - TAT), வரலாற்றுத் தரவுகள் முதலானவற்றைக்கொண்டு ஆராய்ந்தபோது தொழில் நுட்பத்தில் ஆதிக்கம் பெற்ற ஐரோப்பியருடன் நீண்ட காலம் தொடர்புற்றிருந்தாலும் பல நிலைகளில் ஒஜிப்வா மக்கள் மரபுசார் ஆளுமைப் பண்புகளைச் 'சிதையாமல் கொண்டிருந்தனர்; பழைய நடத்தை முறைகளைத் தொடர்ந்து பின்பற்றி வந்தனர் என்பதை அறிந்தார். இதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் கூறுகிறார். தொடக்ககாலத்தில் இப்பகுதிக்கு வந்து சென்ற ஐரோப்பியரின் உளப்பாங்குகளை ஒஜிப்வாவினர் ஏற்றுக்கொண்டிருந்தனர். 200 ஆண்டுகளுக்கும் மேலான காலத்தில் பொருள்சார் பண்பாட்டில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. ஆனால் உளவியற் பாங்குகள் குறைந்த மாறுபாட்டுடன் அவர்களிடம் தொடர்ந்து நிலவின. ஆனால் குறிப்பிட்ட அளவு பண்பாட்டுப்பேறு (acculturation) அடைந்தவர்கள் தங்களின் ஆளுமை அமைப்பில் மாற்றத்தைப் பெற்றனர் அல்லது மாற்றத்தினைப்பெற்று மீண்டும் பழைய நிலைக்கே திரும்பினர். இதன் மூலம் பழைய நடத்தைமுறைகளை இழந்த மக்கள் அதற்கு ஈடான புதிய நடத்தைப்பாங்கினை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை ஹாலோவெல் கண்டறிந்தார்.



## தேசியப் பண்பு ஆய்வுகள்

இரண்டாம் உலகப்போருக்கு முன்னரும் போரின்போதும் மானிடவியலார் உள்பட பல துறைகளைச் சேர்ந்த அறிஞர்கள் கூட்டாட்சி அமைப்புடைய (federal) அரசுகளோடு இணைந்து உளவழிப்போர் (psychological warfare) பற்றி அறியும் ஆய்வுகளை மேற்கொள்ள முனைந்தனர். அதில் பெனிடிக்டும் மீடும் முக்கிய இடம்பெற்றிருந்தனர். ஜெருமனியில் ஹிட்லர் ஆட்சியின் கடுமையான விளைவுகள் மானிடவியலாரையும் பிற நடத்தையியல் அறிவியலாரையும் ஒன்று சேர்த்தன. ஒன்று கூடிய இவர்கள் உளவழிப்போர் முறைகளை அரசு சார்பில் ஆராய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர். இவ்வகை ஆய்வுமுறையே தேசியப் பண்பு ஆய்வுகள் (National character studies) என வழங்கப்பெறலாயிற்று.

தேசியப் பண்பு ஆய்வுகளைக் களத்தில் சென்று மேற்கொள்ள இயலாது. ஏனெனில், முதல் உலகப்போர் முதலே பல நாடுகள் சண்டையில் ஈடுபட்டிருந்ததால் ஆய்வாளர்கள் ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்தவராக மட்டுமே இருக்க வேண்டியிருந்தது. அதனால் ஒரு பகைவர் நாட்டில் சென்று களப்பணி மேற்கொள்வது என்பது எண்ணிப்பார்க்கவியலாதது. அதனால் இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்ட அறிஞர்கள் மக்களின் உளம்சார் உள்நோக்கத்தினை (psychological insights) அறிய ஒரு புதிய முறையியலை உருவாக்க வேண்டியிருந்தது. இவர்கள் மேற்கொண்ட ஆய்வு முறையில் களப்பணி தவிர்த்து ஏனைய மூலங்கள் அனைத்தையும் பயன்படுத்தினர். நூல்கள், இதழ்கள், திரைப்படங்கள், செய்தித்தொடர்பு முதலானவற்றைப் பயன்படுத்துதல், போர்க்கைதிகளையும் நாடுகடத்தப் பட்டவர்களையும் நேர்காணல் மூலம் அறிந்தவையும் இவர்கள் பயன்படுத்திய முறைகளுள் சில. களப்பணி மேற்கொள்ளாமல் ஆய்வு செய்யும் இம்முறை பண்பாட்டைத் தொலைவிலிருந்து ஆராய்தல் எனச் சிறப்பாகக் கூறப்பட்டது. இந்த முறையைப் பயன்படுத்தி பெனிடிக்ட் எழுதிய 'கொத்து மலருடைய் செடியும் கத்தியும்' (The Chrysanthemum and the Sword, 1946) என்னும் நூல் இவ்வகை ஆய்வுகளில் மிகச் சிறந்தது எனப் பெயர் பெற்றது. ஜப்பானின் தேசியப் பண்பினை விளக்கும் இந்நூல் மிகச் சிறந்த உழைப்பால் விளைந்தது என்று போற்றப்பட்டாலும் இதனைச் சிலர் குன்ற கூறவும் தொடங்கினர். இவர்களின் கூற்றுப்படி பெனிடிக்ட் முதல்தர நடுவகுப்பாரிடம் பெறப்பட்ட தரவுகளையே மிகுதியாகச் சார்ந்திருந்தார்; வகுப்பு

பண்பாட்டு ஒன்றியங்களை மதிப்பிட்ட ஸ்டீவார்டு பண்பாடுகளை வகைப்படுத்தி அந்தந்தப் பண்பாட்டு வகைக்கான பரப்பைத் (culture area) தனியாகப் பிரித்து அதன் தகவமைப்புப் பண்புகளைக் கொண்டு அதன் வளர்ச்சி நிலைகளை விளக்கினார். ஸ்டீவார்டின் பண்பாட்டுப் படிமலர்ச்சி பற்றிய விளக்கங்கள் செயலறிவு (empirical) நிலையிலானது. இதில் உலகளாவிய (universal) படிமலர்ச்சி நிலைகளைக் காணமுற்படவில்லை. பண்பாடுகள் தனித்தனிப் புவிப்பரப்புகளில் எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளன என்பதையே காண முயன்றார். சுற்றுச்சூழலும், பண்பாட்டு மூலங்களும் அனைத்துப் பண்பாட்டிற்கும் பொதுவாக இல்லையாதலால் அந்தந்த நிலப்பகுதியில் தனித்தனி வளர்ச்சி நிலையிலேயே படிமலர்ச்சியடைந்துள்ளன எனக் கூறுகிறார்.[44] ஸ்டீவார்டுவின் இக்கருத்துகளைக் கொண்ட 'பண்பாட்டு மாற்றத்தின் கொள்கை' (Theory of Culture Change, 1955) என்னும் நூல் படிமலர்ச்சியியல் ஆய்வுகளில் மேலுமொரு புதிய அணுகுமுறையையும் ஒரு நிறைவளிப்பதான போக்கையும் ஏற்படுத்தியது.

## பண்பாட்டுப் பரவல்

பண்பாட்டுப் படிமலர்ச்சி குறித்துப் பேசப்பட்டு வந்த அதே காலத்தில் பண்பாடுகளுக்கிடையில் காணப்படும் ஒற்றுமைகள் குறித்தும் பேசப்பட்டன. பண்பாடுகளுக்கிடையில் ஒற்றுமைகள் காணப்படுவதற்குக் காரணம் ஒரு பண்பாட்டின் கூறுகள் பிற பண்பாட்டிற்குப் பரவியதும், ஒரு பண்பாட்டினர் ஓரிடத்திலிருந்து இடம்பெயர்ந்து வேறொரு இடத்தில் குடியேறியதும், அந்தந்தப் பண்பாடுகளில் நிகழ்ந்த இணையொத்த கண்டுபிடிப்புகளும் (parallel inventions) ஆகும் எனப் பலவாறு சிந்தனை செய்தனர். இவ்வகையான சிந்தனைகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் ஹெரோடாட்டஸ் மேற்கொண்ட ஆய்வுகளிலிருந்தே தோன்றிவிட்டன. இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்ட அறிஞர்களின் கருத்துகள் பலவாறு அமைந்ததால் மூன்று கொள்கைக் குழுக்கள் (schools) தோன்றின. அவை :

1. ஆங்கிலேயப் பரவற் கொள்கை
2. ஆஸ்திரிய - ஜெருமானியப் பரவற் கொள்கை
3. அமெரிக்கப் பரவற் கொள்கை

### கொள்கைவெறியுடைய ஆங்கிலேயப் பரவற்கொள்கை

இக்கொள்கையாளர்கள் மானிடவியலை முழுநேரத் தொழிலாகக் கொள்ளாதவர்கள். இவர்களுள் முதன்மையானவர்

44 Ibid, pp. 22 - 24.



கிராஃப்டன் எல்லியட் ஸ்மித்* (1871 - 1937). இவர் ஆஸ்திரேலிய** நாட்டவர்; உடற்கூற்றியலிலும் அறுவை சிகிச்சையியலிலும் மிகவும் பெயர் பெற்றவர். தொடக்கத்தில் இவர் எகிப்து சென்று அங்கிருந்த பாடம் செய்யப்பட்ட உடல்கள் (mummies) பலவற்றின் உடற்கூற்றினை (anatomy) நுணுகி ஆராய்ந்தார். அங்குத் தங்கியிருந்தபோது எகிப்தின் தொன்மையான பண்பாட்டையும் அவர்களின் தொழில் நுட்பத்தையும் கண்டு வியந்தார். அவ்வனைத்தையும் அறிந்த பின் நாகரிகம் என்பது பல்வேறு சிறப்புக்கூறுகளின் தொகுப்பு என்றும் அதனை ஒருமுறைக்கு மேல் தோற்றுவிக்க இயலாது என்றும் முடிவு செய்தார். எகிப்தின் வளர்ச்சிக்கு முன்னர் வளர்ச்சி பெற்ற டைக்ரஸ் - யூப்ரட்டிஸ் பகுதியில் வாழ்ந்த சமுதாயங்களைப் பற்றி ஸ்மித் தெரிந்து கொள்ளாததால் எகிப்தே நாகரிகத்தின் பிறப்பிடமாக இருந்தது; இங்கிருந்தே உலகின் பிற பகுதிகளுக்கு நாகரிகம் பரவியது என முடிவுசெய்தார். எகிப்திலிருந்து பிற பகுதிகளுக்குப் பரவியதால் எகிப்தில் அதன் சிறப்புத் தன்மைகள் சற்றுக் குறைந்து வந்தன எனவும் ஊகித்தார்.

ஸ்மித்தின் கருத்துப்படி, நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மிகப் பெருமளவில் உந்துதலைத் தருவது சமயம் ஒன்றேயாகும் ஏனெனில், இறந்தபின் வாழ்வு உள்ளது என்ற மனிதனது எண்ணமும், நறுமணத் தைலம் கொண்டு இறந்த உடலையும், பிற பொருள்களையும் காக்கலாம் என்ற எண்ணமும் மனிதனின் வாழ்ந்து இறந்தபின் வேறு சிலவற்றை அடைவதற்கான ஆவலைக் காட்டுகிறது எனக் கருதினார். நீர்ப்பாசன வேளாண்மை, சூரிய வழிபாடு, பிரமிடுகள், இறந்த உடலைப் பதனம் செய்யும்முறை பெரிய கற்களினால் ஆன நினைவுச் சின்னங்கள் ஆகிய அனைத்தும் ஆண்டீஸ் (Andes) பகுதியிலும், இங்கிலாந்திலும் நடு அமெரிக்காவிலுள்ள புத்துலகச் சமுதாயங்களிலும் காணப்படுவது எகிப்திற்கும் இப்பகுதிகளுக்குமுள்ள விரிவான தொடர்பைக் காட்டும் சான்றுகளாகும் என்பார் ஸ்மித். இவர்

* Grafton Elliot Smith.

** பலர் தவறாகப் புரிந்து கொண்டுள்ளது போலன்றி ஆங்கிலேயர் என்பது இங்கிலாந்தைச் சேர்ந்தவர்களை மட்டும் குறிக்காது. ஸ்காட்லாந்து வேல்ஸ் பகுதியினரையும் ரேமாண்ட் ஃபிர்த் (Raymond Firth) போன்ற நியூசிலாந்து நாட்டு அறிஞர்களையும், மேக்ஸ் குளுக்மேன் (Max Gluckman) போன்ற தென் ஆப்பிரிக்க அறிஞர்களையும் ஆங்கிலேயர் என்னும் வழக்கில் குறிப்பிடுவர். இருப்பினும் சில வேளையில் (சமுதாய மானிடவியலோடு தொடர்புபடுத்தும்போது) கனடா நாட்டு அறிஞர்கள் இவ்வகையினருள் இடம் பெறுவதில்லை. இவர்கள் அமெரிக்க மானிடவியல் மரபினைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படுவர்.

சூரிய வழிபாடு, பெரிய கற்களிலான நினைவுச் சின்னங்கள் முதலானவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்ததனால் இவரின் கொள்கைக்குச் 'சூரிய மையக் கொள்கை' (heliocentric theory) அல்லது 'சூரியக்கல் கொள்கை' (heliolithic theory) என்ற பெயர்கள் சூட்டப்பட்டன.

மேற்கூறிய கொள்கைக் குழுவில் வில்லியம் ஜே. பெர்ரி* (1887 - 1949) என்பாரும் முக்கிய இடம்பெற்றிருந்தார். இவர் ஒரு பள்ளித் தலைமையாசிரியரும் 'ஞாயிற்றின் குழந்தைகள்' (The Children of the Sun) என்னும் நூலின் ஆசிரியருமாவார். இந்நூலில் எகிப்தியப் பண்பாடே மற்ற பண்பாடுகளுக்கு மூலமாக உள்ளது என்பதை விளக்குகிறார். இன்று உலகம் முழுவதும் பரவியுள்ள வேளாண்மை, பானைத் தொழில், கூடைத்தொழில், கால்நடை வளர்த்தல், வீடுகள் - நகரங்கள் ஏற்பட்டுள்ளமை முதலான அனைத்தும் கிமு. 4000 ஆண்டுக்காலத்தில் எகிப்தில் மிகவும் வளர்ச்சி பெற்றிருந்தது. இங்கிருந்தே உலகின் பிற பகுதிகளுக்கு இக்கூறுகள் பரவின என எகிப்தின் பெருமையைப் பெர்ரி சுட்டிக்காட்டினார். ஞாயிற்றின் குழந்தைகள் என்னும் நூலில் பிற பண்பாடுகளில் வேறுபாடுகள் உள்ளதற்கான காரணத்தையும் விளக்குகிறார். பண்பாட்டுக் கூறுகள் ஓரிடத்திலிருந்து வேறு இடத்திற்குப் பரவியபோது சில கூறுகள் புதிதாய்ச் சேர்க்கப்பட்டன சிலகூறுகள் கைவிடப்பட்டன என பெர்ரி விளக்கம்கூறுகிறார். இவரதுநூல் அனைவராலும் படிக்கப்பட்டதாகும்; பொது மக்களிடம் பரவலான நம்பிக்கையைப் பெற்றதாகும். ஆனால் முழுநேர மானிடவியலார் அவரது பரவற் கொள்கையிலுள்ள கொள்கைவெறியுடைய குறைகளையும் அதன் சரியற்ற போக்கையும் தொடர்ந்து சுட்டிக்காட்டினர். ஆனால் இக்குழுவினரின் கொள்கைகள் தொடர்ந்து பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதாகவே இருந்தன.

டபள்யு. எச். ஆர். ரிவர்ஸ் தன் ஆரம்பகால மானிடவியல் ஆய்வுப்போக்கினைப் படிமலர்ச்சி பற்றியதாக அமைத்துக் கொண்டார். எனினும் பிற்காலத்தில் பரவற்கொள்கை - இடப்பெயர்ச்சிக் கொள்கை (diffutionist - migrationist theory) நிலையை ஆதரிப்பவன் எனத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். இருப்பினும் கொள்கை வெறியுடைய ஆங்கிலேயப் பரவற்கொள்கையருடன் இவரை இணைத்துக் கூறமுடியாது. ஏனெனில், இவர் கருத்துகள் பரவலான கள ஆய்வினை அடிப்படையாகக் கொண்டிருந்ததால் ஸ்மித், பெர்ரியைப் போன்று அவசர முடிவிற்கு இவர் வரவில்லை. இருப்பினும் ரிவர்ஸ் மெலனீசியரின் பண்பாட்டுப் பகுதியினை அம்மக்கள் இடம் பெயர்ந்த முறையோடு ஒப்பிட்டு ஆராய்ந்தபோது அம்மக்கள் பரவல் நிகழ்வினால் பலபண்பாட்டுக் கூறுகளை இழந்துள்ளனர் என ஸ்மித், பெர்ரி போன்றே இவரும் நம்பினார். அதனால் இவரும் தீவிர பரவற் கொள்கையாளராக மாறிவிட்டார். இவர் 1912 இல் வெளியிட்ட 'பயன்முறை கலைகளின் மறைவு' (The Disappearance of Useful Arts) என்ற கட்டுரையிலும், 1914இல் வெளியிட்ட 'மெலனீசியச் சமுதாயத்தின் வரலாறு' (History of Malenesian Society) என்ற நூலிலும் மனிதன் புதிய புதிய கண்டுபிடிப்புகளைச் செய்ய இயலாதவன் எனக் குறிப்பிடுகிறார். அதற்கு ஓர் எடுத்துக்காட்டையும் குறிப்பிடுகிறார். ஆஸ்திரேலிய முதுகுடிகளுள் ஒரு குழுவினர் ஐந்து வகையான இறப்புச் சடங்குகளைச் செய்கின்றனர். அந்த முதுகுடிகள் ஒன்றுக்கும் மேற்பட்ட சடங்குகளை உருவாக்கியிருக்க முடியாது. வெவ்வேறு இடங்களிலிருந்து மக்கள் சிறு சிறு குழுக்களாகக் குடியேறியிருப்பர். பிறகு அவர்களிடையே இனக்கலப்பு ஏற்பட்டிருக்கும். இனக்கலப்படைந்த அவர்கள் ஐந்து வகையான சடங்குகளையும் வழக்கத்தில் ஏற்றுக்கொண்டனர்.

ஸ்மித், பெர்ரி, ரிவர்ஸ் மூவருமே மனித வரலாற்றில் கண்டுபிடிப்புகள் மிக அரிதாகவே நடைபெறுகின்றன என்றும், பண்பாடுகளுக்கிடையேயுள்ள ஒற்றுமைகள் ஒரு பண்பாட்டின் கூறுகள் மற்ற பண்பாடுகளுக்குப் பரவுவதாலேயே நிகழ்கிறது என்றும், மூலப் பண்பாடு எகிப்தியப் பண்பாடே என்றும் கருதியதால் இவர்கள் எகிப்தியவியலார் (Egyptologists) என்றும் கூறப்பட்டனர்.

இவர்களின் கொள்கையானது பலவழித் தோற்றம் (multiple origin), தானாக உருவாகுதல், பலவழிப்பரவல், உளவழி ஒற்றுமை (psychic unity), முன்னேற்றம், இணை கண்டுபிடிப்புகள் (parallel invention), படிமலர்ச்சி போன்ற கருத்தாக்கங்களை ஒதுக்கிவிட்டதால் அதனைப் பிற்கால அறிஞர்கள் ஏற்கவில்லை. அதனால் அது வழக்கிழந்து போயிற்று.

**ஆஸ்திரிய - ஜெருமானியப் பரவற் கொள்கை**

ஸ்மித், பெர்ரி ஆகியோரின் ஆய்வுகளைக் காட்டிலும் பெருமளவு புலமைத்துவமும், மேம்பட்ட நிலையிலும் ஆஸ்திரிய - ஜெருமானியக் குழுவினர் ஆய்வு செய்தனர். இவர்கள் ஸ்மித், பெர்ரி ஆகியோர் மேற்கொண்ட பரவல், இடப்பெயர்ச்சி ஆகியவற்றை ஒரு நிலையிலும், கண்டுபிடிப்பு (invention) என்பதை மற்றொரு நிலையிலும் எடுத்துக்கொண்டு அதிலுள்ள பல சிக்கல்களை ஆராய்ந்தனர். இக்கொள்கைக் குழுவினர்கூட மனித

* William J. Perry.

குலத்தவர்கள் அடிப்படையில் புதியனவற்றைக் கண்டுபிடிக்க இயலாதவர்கள் என எண்ணினர். இவர்கள் தங்கள் ஆய்வுகளில் தொன்மைப் படிமலர்ச்சியியலார் பொதுவாக ஒதுக்கியிருந்த இடப்பெயர்ச்சி, பரவல் ஆகிய நிகழ்வுகளின் தன்மைகளை ஈடுபடுத்தியும், பெர்ரி, ஸ்மித் ஆகியோர் செய்த தவறினை விடுத்தும் ஆய்வு செய்தனர். இக்கொள்கைக் குழுவினரின் கொள்கை அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் குறைந்த அளவு தாக்கத்தையே ஏற்படுத்தினாலும் மானிடவியலில் இவர்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். ஆஸ்திரிய - ஜெர்மானியக் குழுவினரின் அணுகுமுறையானது, உலகப் புவிப்பரப்பில் தனித்துவம் பெற்ற பண்பாட்டுத் தொகுதிகளைக் (culture complexes) கண்டெடுத்து அவை எவ்வாறு பிற பகுதிகளுக்குப் பரவின, எவ்வாறு வரலாற்றுக் காலத்தோடு வளர்ச்சியடைந்தன என்பனவற்றைக் காலம், இடம் அனைத்தையும் கடந்த பரிமாணத்தில் முழுவதுமாகப் பகுத்தாய்வு செய்யும் முறையைக் கொண்டதாகும்.

பிரட்ரிக் ரட்சல்[1] (1844 - 1904) மானிடப் புவியியல் (anthropogeography) அல்லது பண்பாட்டுப் புவியியல் (cultural geography) என்னும் பிரிவைத் தோற்றுவித்தவர். இவர் ஆஸ்திரிய - ஜெருமானியக் குழுவில் இடம்பெறாவிட்டாலும் இவரது புதுவகை ஆய்வின் மூலம் இக்குழுவினருக்குப் புத்தூக்கம் கொடுத்தார். ஒரு சுற்றுச் சூழலில் புதிதாகக் குடியமர்வோர் வந்து சேரும்போது கொண்டு வரும் கூறுகளையும், அப்பகுதியிலேயே காலம்காலமாக வாழ்ந்துவரும் மக்கள் அந்தச்சூழலோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள தகவமைப்புக் கூறுகளையும் ஆராயும் இலக்கில் ரட்சல் ஈடுபட்டார். ரட்சலின் மாணாக்கர் லியோ பிரோபனியஸ்[2] (1873 - 1938), பிரிட்ஸ் கிராப்னர்[3] (1877 - 1934), வில்கெம் ஸ்மிட்[4] (1868 - 1954) ஆகியோரே ஆஸ்திரிய - ஜெருமானியக் குழுவில் முதன்மையாக இடம் பெற்றிருந்தவர்கள். இவர்கள் அனைவரும் மக்கள் புதிய ஒன்றைக் கண்டுபிடிக்கும் திறனைப் பொதுவாகப் பெற்றிருக்கவில்லை என்னும் கருத்திற்கு உடன்பாடாக இருந்ததால் இடப்பெயர்ச்சியையும், பரவல் நிகழ்வையும் எவ்வாறு விவரிப்பது என்று கவலை கொண்டனர். இறுதியில் இவற்றை விளக்குவதற்கு இரண்டு சோதனைகளை உருவாக்கினார். இச்சோதனைகளின் அடிப்படை அலகுகளாக 'வடிவம்' 'அளவு' (quantity) என்ற இரண்டையும் எடுத்துக்

1 Friedrich Ratzal

2 Leo Frobenius

3 Frits Graebner

4 Wilhelm Schmidt



கொண்டனர். இதன்மூலம் ஒரு குறிப்பிட்ட பொருளின் வடிவம் இருதனிப்பட்ட புவிப்பரப்புகளில் ஒத்த தன்மையுடன் காணப்படுவது அப்பரப்புகள் ஏதோ ஒரு காலத்தில் தொடர்பு பெற்றிருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது என எண்ணினர். ஒத்த தன்மையுடைய பண்புகள் அந்தந்த மண்ணின் தன்மைக்குரியதாக வளர்ந்திருக்க முடியாது. அவ்வாறு அங்குத் தோன்றி அதன் பண்புகளைப் பெற்றிருக்குமாயின் அதன் வடிவத்தில் சிறிது மாறுபாடாயினும் இருக்க வாய்ப்புண்டு. அவ்வாறே பண்பாட்டுக் கூறுகளின் ஒட்டு மொத்த அளவும் ஒரே தன்மையாக இருக்குமானால் அப்பண்புகள் அதற்கு முன்னர் அதே தன்மையுடைய பண்புகள் உள்ள புவிப்பரப்பிலிருந்து பரவியிருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துகிறது. இந்நிலையில் வடிவம், அளவு ஆகிய இவ்விரண்டினைக் கொண்டு சமுதாயத்தின் எந்த ஒரு அமைப்பைக் காட்டிலும் பொருள்சார் பண்பாட்டினை மதிப்பிட இயலும் எனக் கருதினர். கிராப்னருக்கு இந்த முறை மிகவும் பயனுடையதாக அமைந்தது. அருங்காட்சியகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்ததால் இவர் பெரும்பாலும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளைச் சேகரிப்பதிலும் அவற்றை ஆராய்வதிலும் ஈடுபட்டிருந்தார். ஆனால் கிராப்னரும் மற்றவர்களும் ஒரு பண்பாட்டின் கூறுகள் எந்த அளவிற்கு ஒன்றிணைந்து இருந்தால் அம்மக்களிடையே புதிய கூறுகள் கண்டுபிடிக்க இயலாத நிலை ஏற்பட்டிருக்கும் என்ற சிக்கலான ஊகத்திற்குத் தீர்வு காணவில்லை. ஆனால், சில பண்பாட்டுக் கூறுகளை எடுத்துக் கொண்டு இருவேறு பகுதி மக்களிடையே தொடர்பிருந்ததைக் காணமுடியும் என்றனர். எடுத்துக்காட்டாக, அனைத்துப் பண்பாடுகளிலும் படகுத்துடுப்பும், ஈட்டியும் காணப்படுகின்றன. இது பரவலினால் ஏற்பட்டது எனக் கூறுவது இயலாது; இவை கண்டுபிடிப்புகளாகவும் இருக்கலாம் ஆனால் படகுத் துடுப்புகள் ஒரே வகையான அலங்கார வேலைப்பாடுகளுடன் இருப்பதும், ஈட்டிகளில் ஒரே மாதிரியாய் இறகுகள் கட்டப்பட்டிருப்பதும் அதன் மேல் கோடுகள் வரையப்பட்டிருப்பதும் இணையொத்த கண்டுபிடிப்பாய் இருக்க முடியாது. பரவல் மூலமே ஏற்பட்டதாக இருக்க முடியும். அவ்வாறே ஆப்பிரிக்க மக்கள் பயன்படுத்தும் வில்லில் உள்ள குறுக்குவெட்டும், நாண்கள் கட்டியிருக்கும் விதமும், அம்புகளில் கட்டப்பட்டிருக்கும் இறகுகளின் அமைப்பும் இந்தோனேசிய மக்கள் பயன்படுத்தும் வில்லிலும் உள்ளன. இது பண்பாட்டுப் பரவல் நிகழ்வால் மட்டுமே ஏற்பட்டிருக்க முடியும் என உறுதியாகக் கூறினார். கலகாரிப் பாலைவனத்திலிருக்கும் கிழக்கு ஜெருமானியரின் தலைமைக் கோயில் (Gothic Cathedral)

சான்றாகக் கொள்ளலாம் என இராபர்ட் உலோவி* குறிப்பிட்டு, சில கூறுகள் எங்கிருந்து எங்குச் சென்றன என்பதை உறுதிப்படுத்த முடியாது எனச் சுட்டிக்காட்டினார். குறிப்பாக, எங்கும் காணப்படும் சில பண்புகளான சுருள் சுருளாக வரையும் குறியீடுகள், வளைத்து வளைத்து வரையும் குறியீடுகள் ஆகியவற்றைக் கொண்டு அவை தோன்றிய இடத்தையோ பரவிய இடத்தையோ மிகத் தெளிவாகக் கூறமுடியாது என்றார்.

கிராப்னர், பிரோபனியஸ் இவ்விருவரின் கருத்துகளையும் ஒன்றிணைத்து இறுதி வடிவம் கொடுத்து விளக்கும் பொறுப்பையேற்றவர் ஸ்கிமிட். கிராப்னர், பிரோபனியஸ் கூற்றுப்படி சில தனித்தன்மைகள் கொண்ட பண்பாடுகள் ஓரிடத்தில் தோன்றி அவ்விடத்திலிருந்து நீரலைகள் உண்டாக்கும் வட்டத்தைப் போன்று காலத்தினூடே விரிந்துகொண்டே சென்று இன்றுள்ள அனைத்து உலகப் பண்பாடாக வளர்ந்துள்ளது என்பர். அதாவது, அசைவற்ற நீர் நிலையில் ஒரு கல்லை எறிந்தால் விழுந்த இடத்திலிருந்து கிளம்பும் அலைகள் அனைத்துத் திசையிலும் பல வட்டங்களாகத் தொடர்ந்து விரிந்துகொண்டே செல்வதைப் போன்று சில தனித்தன்மை கொண்ட பண்பாடுகள் காலத்தால் அது தோன்றிய இடத்திலிருந்து அனைத்துத் திசைகளிலும் பரவி இன்றுள்ள பண்பாட்டிற்கு வடிவம் கொடுத்துள்ளன என ஆஸ்திரிய - ஜெர்மானியக் குழுவினர் கூறுவர். நீர் வட்டங்களைக் குறிப்பிட்டு விளக்கும் குழுவினராக இவர்கள் இருந்ததால் இக்கொள்கையாளர்கள் பண்பாட்டு வட்டக் குழுவினர் (culture circle school or Kulturkreisschule) எனப் பெயர் பெற்றனர். இந்த வட்டங்கள் பற்றிய இவர்களின் கொள்கை, பரவல் நிகழ்வினையும் இடப்பெயர்ச்சியையும் விளக்குவதற்கு மட்டுமன்றி ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு பண்பாட்டின் வளர்ச்சி பற்றி அறியவும் (ஒவ்வொரு தனிப்பண்பாடும் பல வளர்ச்சி நிலைகள் கடந்தே செல்கிறது) உதவுகிறது. பண்பாட்டு வட்டக் குழுவினர் தொன்மைப் படிமலர்ச்சிக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எனினும் இவர்களின் பண்பாட்டு வட்டக் கொள்கை ஏறக்குறைய படிமலர்ச்சித் திட்டத்தை விளக்குவதாக உள்ளது என மற்றவர்கள் எண்ணினர்.

## அமெரிக்கப் பரவற்கொள்கை

பண்பாட்டுப் பரவல் ஆய்வுகளில் இடம்பெறும் இறுதிக் கொள்கையாளர்கள் அமெரிக்கர்களாவர். இவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கிளார்க் விஸ்லர் (1870 - 1947) ஆவார். அமெரிக்க மானிடவியலில் உருவாக்கப்பட்ட கோட்பாடுகளுள் முக்கியமானது பண்பாட்டுப் பகுதிக் (culture area) கோட்பாடாகும். பண்பாட்டுப் பகுதி என்றும் கருத்தை ஓட்டிஸ் டி. மாசன் என்பவரும் பிற அமெரிக்க வரலாற்றியலாரும், ஒரு கண்டத்தில் பல வட்டார மக்கள் தகவமைந்து வாழும் நிலையைக் குறிக்கப் பயன்படுத்தினர் என்றாலும் போவாசுடன் பணியாற்றிய விஸ்லரே இக்கோட்பாட்டிற்கு உரியவர். இவரே இதன் அடிப்படைக் கருத்திற்கு வடிவம் கொடுத்து, பயன்பாட்டிற்குக் கொண்டு வந்தார்.

அமெரிக்க இயற்கை வரலாற்றியல் அருங்காட்சியகத்திலும்,* சிக்காகோ கள அருங்காட்சியகத்திலும்** வட அமெரிக்க இந்தியர்களின் பொருள்களைக் காட்சிப்படுத்துவதில் போவாசும், விஸ்லரும் ஆலோசகர்களாகப் பணியாற்றினர். இவ்விருவரும் படிமலர்ச்சி நிலையை விளக்கும் வகையில் காட்சிப் படுத்துவதையும், மூன்றுகாலங்களின்*** நிலையை விளக்கும் வகையில் காட்சிப்படுத்துவதையும் எதிர்த்தனர். அதோடு ஐரோப்பிய அருங்காட்சியகங்களில் சிறப்புப்பெற்று வந்த ஒப்பீட்டு முறையில் செய்பொருளைக் (artifacts) காட்சிப்படுத்தும் முறையையும் கைவிடுமாறு அறிவுறுத்தினர். இந்தியப் பழங்குடிகளின் பொருள்களை மொழிக்குடும்பங்கள் வாரியாகக் காட்சிப்படுத்தலாம் என எண்ணி அதிலும் நிறைவடையாமல் இறுதியாக அந்தந்த வட்டாரப் பொருள்களைத் தனித்தனியாக வைக்க முடிவு செய்தனர். அவ்வகைச் சிந்தனையில் மிகவும் ஈடுபாடு கொண்ட விஸ்லர் தனி உந்துதலைப் பெற்று ஒரு பரந்த நிலப்பரப்பில் எவ்வாறு பண்பாட்டுக் கூறுகள் ஒன்றுபட்டும் வேறுபட்டும் காணப்படுகிறது என ஆழ்ந்து ஆராய்ந்தார். அதன் விளைவே 'பண்பாட்டுப் பகுதிக்' கோட்பாடாகும். ஒத்த பண்பாடுகளைக் கொண்ட புவிப்பரப்பே பண்பாட்டுப் பகுதியாகும் என விஸ்லர் சுருக்கமாக வரையறை செய்தார். அதன் தன்மைகளையும் அதனோடு தொடர்புடைய பிற கருத்துகளையும் பின்வருமாறு விளக்குவார் விஸ்லர்.

!) ஒவ்வொரு பண்பாட்டுப் பகுதியின் கூறுகள் அவை சுற்றுச்சூழலாக இருப்பினும் செய்பொருள்களாக (எ-டு : கருவிகள், பாத்திரங்கள், உறைவிடங்கள்) இருப்பினும், சமய நம்பிக்கைகளாக இருப்பினும் சமூக, பொருளாதார முறையாக இருப்பினும், பொருள்சார் பண்பாடாக இருப்பினும் அல்லது வேறு எந்த ஒரு

* Robert Lowie

* American Natural History Museum.

** Chicago Field Museum.

*** கற்காலம், வெண்கலக்காலம், இரும்புக்காலம்.

நிறுவனமாக இருப்பினும் அவை ஒருபடித்தானவையாக இருக்கும். அதனால் அப்பகுதி தனிப்பண்பாட்டுப் பரப்பாகிறது.

2) ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுப் பகுதியிலுள்ள மக்கள் அவரவர் பண்பாட்டால் சிறிது மாறுபடினும் அந்த நிலப்பகுதியின் சிறப்புக் கூறுகள் அனைத்தையும் கொண்டிருப்பர் அம்மக்களின் பண்பாடே அப்பகுதியின் உருமாதிரிப் (typical) பண்பாடாகும். அந்த உருமாதிரிப் பண்பாட்டின் பகுதியே அப்பண்பாட்டின் மையமாகும் (culture centre).

4) பண்பாட்டு மையத்திலிருந்து விலகி வாழும் எஞ்சிய மக்கள் அப்பண்பாட்டுப் பகுதியின் கூறுகளைக் கொண்டிருப்பதன் எண்ணிக்கையில் குறைந்து காணப்படுவர். அது அவர்களின் பண்பாட்டு மையத்திலிருந்து விலகியுள்ள தூரத்தைப் பொறுத்து அமையும்.


5) ஒரு பண்பாட்டுப் பகுதியின் எல்லையில் வாழும் மக்கள் தம் பண்பாட்டுப் பகுதிக் கூறுகளுடன் அண்டையப் பகுதிக் கூறுகளின் தாக்கத்தையும் பெற்றுக் கலப்புப்பண்பாடு அல்லது எல்லைசார் பண்பாடு (marginal culture) கொண்டவர்களாகக் காணப்படுவர்.

பண்பாட்டுப் பகுதியை மேற்கூறியவாறு வரையறை செய்துகொண்ட விஸ்லர் அதன்மூலம் பண்பாட்டுப் பரவலை அறிய முடியுமென நம்பினார். ஒவ்வொரு பண்பாட்டிற்கும் ஒரு மையம் (culture centre) இருக்க வேண்டியது அவசியம் என்றும், அந்த மையமே ஆரம்பத்தில் அப்பண்பாட்டினர் குடியேறிய இடமாய் இருக்க முடியும் என்றும், அம்மையத்திலிருந்தே அப்பண்பாட்டின் கூறுகள் வெளிநோக்கிப் பரவியிருக்கும் என்றும் விஸ்லர் கருதினார். உலகின் பல பகுதிகளிலும் பண்பாட்டுப் பகுதிகளை அறுதியிட்டுக் கொண்டபின் எந்தப் பகுதியிலிருந்து ஒருகூறு மற்ற பகுதிக்குப் பரவியிருக்கிறது எனக் கண்டுபிடிக்க முடியுமெனக் கூறினார். பண்பாட்டுப் பரவலில், பரவிய கூறுகளின் காலத்தை மதிப்பிட ஓர் உத்தியைக் கையாண்டார் விஸ்லர். அது வயதுப் பரப்பு எடுகோள் (age area hypothesis) எனப்படும். அம்முறையை வளப்படுத்தியதில் விஸ்லருக்கு அடுத்துவந்த மானிடவியலாருக்கும் பங்குண்டு.

வயதுப் பரப்பு எடுகோள் : பண்பாட்டின் பல கூறுகள் வெவ்வேறு காலங்களில் பல நிலையில் பரவியிருக்கக் கூடும். அதனைக் கொண்டு எக்கூறுகள் முதலில் பரவின, எவை பின்னர்ப் பரவின என்பதைக் கணிப்பதில் விஸ்லர் வயதுப் பரப்பு



அணுகுமுறையை ஏற்படுத்தினார். அந்த எடுகோளின் கருத்துப்படி நெடுங்காலத்திற்கு முன் தோன்றிய கூறுகள் மிகுந்த அளவில் பரவியும் அது தோன்றிய இடத்தில் பெருமளவில் பரவியும் காணப்படும்.




வயதுப் பரப்பு எடுகோள் – விளக்கப்படம்

ஒரு பண்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த தொல்லியல், இலக்குழுவியல் தரவுகளைக் கொண்டு வ.ப. எடுகோள் மூலம் பண்பாட்டுக் கூறுகளின் காலத்தைக் கணிக்க முடியும். எடுத்துக்காட்டாக, ஒரு பகுதியில் மூன்று வகையான மட்பாண்டங்கள் பரவியிருக்குமேயானால் எந்தவகை மிகுதியாகப் பரவியுள்ளது என்பதை மதிப்பிட்டால் அது மற்ற இரண்டு வகைகளுக்கு முன்னர்த் தோன்றியது என்றும் மீதமுள்ள இரண்டில் எது மிகுதியாகப் பரவிக் காணப்படுகின்றது என்பதை மதிப்பிடுவதன் மூலம் அது இரண்டாவதாகத் தோன்றியது என்றும், மூன்றாவது இறுதியாகத் தோன்றியது என்றும் மதிப்பிடலாம். படத்தில் குறிப்பிட்டுள்ள மூன்றில் 1 - ஆம் வகை மிகப் பரவலாகவும், 2 - ஆம் வகை சற்றுக் குறைவாகவும், 3 - ஆம் வகைமிகக் குறைவாகவும் பரவியுள்ளதைக் காட்டுகின்றன. அதன் மூலம் எதற்கடுத்து எந்தக் கூறுகள் பரவின அல்லது தோன்றின என்பதை அறுதியிடுவதோடு எந்தப் பகுதியில் தோன்றியது பரவியது என்பதை மதிப்பிடவும் வ.ப. எடுகோள் பயன்படும்.

பண்பாட்டுக் கூறுகள் ஓர் இடத்திலிருந்து வேறு இடத்திற்குப் பரவும் போக்கில் சமச்சீர்மையைக் கொண்டிராததால் வயதுப் பரப்பு எடுகோளின் முழுன்மயான நம்பிக்கைத் தன்மையைப் பல மானிடவியலார் குறை கூறுவர். இருப்பினும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டுப் பரப்பிற்குள் அதன் கூறுகளை மதிப்பிடுவதில் இம்முறை பயனுள்ளதாக இருக்கும்.

விஸ்லர் உருவாக்கிய பண்பாட்டுப் பகுதி ஆய்வுகளுக்கடுத்து தென் அமெரிக்கா, வடஅமெரிக்கா, ஆசியா, ஆப்பிரிக்கா, மடகாஸ்கர் போன்ற உலகின் பெரும்பாலான நிலப்பகுதிகள் பல

Scanned by TapScanner

பண்பாட்டுப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஆராயப் பெற்றன. ஆசியாவை வடக்கு ஆசியா, தெற்கு ஆசியா என இரண்டாகப் பிரித்தனர். அடுத்து வடக்காசியாவைத் தொன்மைச் சைபீரியா, சைபீரியா, யுரேசிய வன்பாலை மங்கோலியப் பீடபூமி என மூன்று பண்பாட்டுப் பகுதிகளாகப் பிரித்தனர். தெற்காசியாவைத் தென் மையம், வடசீனா, கொரியா - ஜப்பான், தென்சீனா, இந்தோனேசியா ஆகிய ஐந்து பகுதிகளாகப் பகுத்தனர். இந்தியப்பகுதி முழுவதும் தென்மையத்திற்குள் அடங்கும். பண்பாட்டுப் பகுதிகள் அனைத்தும் பரு நிலையில் பகுக்கப்பட்டவையாகும். ஆய்வின் தேவைக்கேற்ப அதனை மேலும் சில பகுதிகளாகப் பகுக்க வேண்டிய தேவையும் ஏற்படும். இக்கருத்தைப் பல ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.[45]

45 பக்தவத்சல பாரதி. "உலக நாடுகளில் தமிழர் பண்பாட்டுப் பரவல்: மானிடவியல் அணுகுமுறைகள்". தமிழ்க்கலை. தமிழ் 5. கலை 1 — 2. 1987. பக். 196.


## நெறித்துணை நூல்கள்

Benedict, Ruth. 1934. *Patterns of Culture*. Boston: Houghton Mifflin Co.

14 மொழிகளில் 3 இலட்சத்திற்கும் மேலான படிகள் விற்பனையாகியுள்ள புகழ்பெற்ற மானிடவியல் நூலிது. பண்பாடு, சமுதாயம், தனிமனிதன், ஆளுமை ஆகியவற்றை மூன்று பண்பாடுகளின் தரவுகளைக் கொண்டு ஒன்றிணைத்து ஆராய்கிறது இந்நூல்.

Harris, Marvin. 1968. *The Rise of Anthropological Theory*. New York Crowell.

மானிடவியல் சிந்தனைகளின் வரலாற்றையும் பல்வேறு கொள்கைக் குழுக்களையும் கொள்கைகளையும் சிறப்பாக விவரிக்கும் நூல் இது.

Hatch, E. 1974. *Theories of Culture*. New York : Basic Books.

பண்பாடு பற்றிய கொள்கைகளைப் பல அறிஞர்களின் விமர்சனங்களோடு இந்நூல் விவரிக்கிறது.

Honigmann, J.J. 1976. *The Development of Anthropological Ideas*. Homewood, Ill.: The Dorsey Press.

இந்நூல், ஏறக்குறைய மார்வின் ஹேரிஸ் நூலின் நோக்கத்தைக் கொண்டிருப்பினும் மானிடவியல் வரலாற்றைப் பல புதிய செய்திகளுடன் விளக்குகிறது.

Kaplan, D. and Manners, R. 1972. *Culture Theory*. Englewood Cliffs, N.J.: Prentice - Hall.

Theory in Anthropology என்னும் நூலை இணைந்து பதிப்பித்த இவர்கள் culture theory நூலில் பண்பாடு என்னும் தலைப்பை அது தோன்றிய காலந்தொட்டு அதன் படி நிலைகளை விவரிக்கின்றனர்.




# சமுதாய முறை

மனித இனத்தில் இருப்பதைப் போன்று வேறு எந்த ஓர் உயிரினத்திலும் உயிரியல் சாராத வேறுபாடுகள் மலிந்து கிடக்கவில்லை. இந்த எண்ணற்ற உயிரியல்சாரா வேறுபாடுகளை மையமாகக் கொண்டே மனித இனத்தின் வாழ்க்கைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. மனித இனத்தின் படிமலர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் ஏற்பட்ட இவ்வேறுபாடுகள் உறுப்பினர்களிடையே சமநிலையின்மையையும் உயர்வு தாழ்வையும் ஏற்படுத்தின. இத்தன்மையின் அளவு வெவ்வேறு காலங்களில் சமுதாயம் பல அமைப்புகளாகப் படிமலர்ச்சி யடைந்தபோது மறைமுகமாகவோ வெளிப்படையாகவோ விரிவுபெற்றது.

படிநிலை அமைப்புடைய சமுதாயமுறை அனைத்து மக்களிடமும் உள்ளதா என்ற கேள்வி இன்றளவும் விவாதத்துக்குரியதாக உள்ளது. அனைத்து வகையான மக்களிடமும் (சமுதாயத்திலும்) படிநிலை அமைப்பு ஏதோ ஒரு வகையில் இடம்பெற்றுள்ளது என்று ஒரு குழுவினர் உறுதிபடக் கூறுகின்றனர். இதில் சமுதாயவியலாரே பெரும் பங்கு வகிக்கின்றனர். கிங்ஸ்லி டேவிஸ், வில்பர்ட் மூர் ஆகியோரின் கருத்துப்படி வர்க்க அமைப்பில்லாமலோ படிநிலை அமைப்பில்லாமலோ எந்த ஒரு சமுதாயமும் இல்லை. செயற்பாட்டியல் முறையில் கூற வேண்டுமானால் எந்த ஒரு சமுதாய அமைப்பும் அதன் செயற்பாட்டு நிலையில் ஏதோ ஒரு வகையான சமநிலையின்மையைக் (inequality) கொண்டிருக்கும். இது ஓர் உலகளாவிய விதியாகும் என இவர்கள் கூறுவர்.[1]

சமுதாயவியலார் இவ்வகையான தம் முடிவிற்குச் சில அடிப்படைக் கருத்துகளை ஆதாரமாகக் கொண்டுள்ளனர். சமுதாய உறுப்பினர்களின் வயது, பால், அவர்களின் செயல் திறன் போன்றவற்றில் காணப்படும் வேறுபாடுகளைக் கூடச் சமநிலையின்மைக்கும் படிநிலைக்கும் காரணமென இவர்கள்

1 Kingsley Davis and Wilbert Moore, "Some Principles of Stratification", in *Structured Social Inequality : A Reader in Social Stratification*, ed. Celia Heller (New York : Macmillian, 1969), p. 496.

# 13

# பண்பாட்டு மாற்றம்

மாற்றம் பற்றிய சிந்தனை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே நிகழ்ந்துள்ளது. கி.மு. 6ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்கத் தத்துவ அறிஞர் ஹெராக்கிளிட்டஸ் அன்றாடம் அவர் செல்லும் ஆற்றங்கரைப் பகுதிக்கு ஒரு நாள் சென்று உட்கார்ந்தபோது ஒருவன் படித்துறையில் நீர் கொண்டு செல்வதைப் பார்த்தார். நீர் எடுத்துத் திரும்பும்போது அதில் தூசி இருக்கவே அதைக் கொட்டி விட்டு மீண்டும் படித்துறைக்கு வந்து நல்ல நீர் எடுத்துத் திரும்பினான். அதைக் கண்ட ஹெராக்கிளிட்டஸ் சில மணித்துளி இடைவெளியில் நீரின் தன்மை மாறியதைக் கண்டார். 'நீரோட்டம்' என்னும் தொடர் நிகழ்வால் ஆற்றில் மாற்றம் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தார்.

பண்பாடு என்பது நீரோட்டம் போன்றதே. இதன் இயக்கத்தில் தொடர்ச்சியான மாற்றங்கள் நிகழ்கின்றன. கற்றுணர்ந்த நடத்தை முறையின் (learned behaviour) தொகுப்பாகப் பண்பாடு நிகழ்வதால் மக்கள் புதியனவற்றைக் கற்றுக் கொள்ளும் போதெல்லாம் அவர்களின் பண்பாடும் மாற்றம் பெறுகிறது. நம் சொந்தப் பண்பாட்டைப் பார்த்தால்கூடக் கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இன்று இல்லை. மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டுள்ளன. இந்த மாற்றம் குறிப்பிட்ட சில பண்பாடுகளில் மட்டுமல்லாது அனைத்துப் பண்பாடுகளிலும் நிகழ்கிறது. இந்த வகையில் மாற்றத்திற்கு உட்படும் ஒவ்வொரு பண்பாடும் அது தொடர்புகொள்ளும் அயற்பண்பாட்டுக் கூறுகளைத் தேவைக்கேற்ப மாற்றம் செய்தோ செய்யாமலோ ஏற்றுக் கொள்கிறது. ஏற்றுக் கொள்ளும் அளவும் வீதமும் பண்பாட்டுக்குப் பண்பாடு மாறுபடுகின்றன. இதற்குக் காரணம் ஒவ்வொரு பண்பாடும் வெவ்வேறு வகையான ஒன்றியத்தைக் (integration) கொண்டுள்ளதேயாகும்.

நாம் வாழும் இன்றைய நவீன காலம், உலகில் அனைத்துப் பண்பாடுகளுமே விரைந்து மாற்றத்தைப் பெற்று வரும் காலமாகும். மாற்றத்திற்கு உட்படாத பண்பாடே இல்லையெனலாம். ஒவ்வொரு பண்பாட்டிலும் மாற்றங்கள் பல காலமாக நிகழ்ந்து வந்தாலும் இடம், காலம் ஆகியவற்றிற்கு ஏற்ப மாற்றத்தின் அளவும் வீதமும் வேறுபடுகின்றன. பண்பாட்டு மாற்றமென்பது தனியொரு செயலோடு மட்டும் தொடர்பு உடையது அல்ல. பல செயல்களின் மொத்தத் தொகுதியாகும். இந்த நிகழ்வில் ஒரு பண்பாட்டின் கூறுகள் அயல் பண்பாட்டுக் கூறுகளால்



மாற்றப்படுகின்றன அல்லது முற்றிலுமாக அகற்றப்படுகின்றன. இதனால் பண்பாட்டில் ஏற்படும் மாற்றத்தின் தொடக்கம் நிலையான இயக்கத்தைப் பெற்று தொடர்ச்சியான மாற்றத்திற்கு வழிகோலுகிறது.

சமுதாய வாழ்வில் மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றைக் காட்டிலும் வேறு எந்த நிகழ்வும் அச்சமுதாயத்தினருக்குப் பெரும் சவாலாக இருக்க முடியாது. ஏனெனில் பண்பாட்டு மாற்றமானது (culture change) அந்தந்தப் பண்பாட்டில் என்றும் நிலைத்து இயங்கக் கூடியதாகவும் பிற பண்பாடுகளின் தாக்கத்திலிருந்து மீளமுடியாமலும் செயல்படுகின்றது. இந்தியப் பழங்குடிகளின் நிலையைக் காணும்போது அனைத்துப் பழங்குடி மக்களும் வெவ்வேறு நிலையில் மாற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்று வருகின்றனர்.

பண்பாடு என்பது ஏதோ சில கூறுகளைக் (traits) கொண்ட ஒரு தொகுப்பு என்றோ, அதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் ஏதோ சில செயல்களுக்காக மட்டுமே உள்ளன என்றோ, அக்கூறுகளை மக்கள் தான்தோன்றித்தனமாக ஏற்றுக் கொண்டனர் என்றோ கருத முடியாது. பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்ற, ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியமாகும். இதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் செயல்நிலையில் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. ஒவ்வொரு கூறும் பண்பாடு என்னும் முழுமைக்குள் (whole) மிகவும் ஏற்ற நிலையில் பொருத்தப்பட்டுள்ளது. இதன் இயக்கத்தால் அம்முழுமை கட்டிக்காக்கப்பட்டு முழுமையாகச் செயற்படுகிறது.

பண்பாட்டு ஒன்றியம் (integration of culture) என்னும் மொழித்தொடர் பண்பாட்டுக் கூறுகளுக்கிடையில் நிலவும் பிணைப்பைக் குறிக்கிறது. சில பண்பாடுகள் மிக வலிமையான ஒன்றியத்தைக் கொண்டிருக்கும். சில வலிமையற்ற ஒன்றியத்தைக் கொண்டிருக்கும். வலிமையான ஒன்றியத்தைக் கொண்ட பண்பாடுகளில் 'பண்பாட்டு மாற்றம்' குறைவாக நிகழும். வலிமையற்ற ஒன்றியத்தில் மாற்றங்கள் விரைந்து நிகழும்.

மடகாஸ்கர் தீவு மக்களிடம் ஆய்வு செய்த ரால்ஃப் லிண்ட்டன் அத்தீவு மக்கள் மீது குடியேற்ற மக்கள் கிறித்தவத்தைத் திணிக்க முயன்று தோல்வி கண்டதைக் குறிப்பிடுகிறார். மடகாஸ்கர் மக்கள் கிறித்தவத்தை ஏற்காததற்கு அவர்களின் பண்பாட்டு ஒன்றியம் மிகவும் வலிமையாக இருந்ததே காரணம் என்கிறார் லிண்ட்டன்.[1] ஏலகிரி மலையில் வாழும் மலையாளிப் பழங்குடிகளிடம் அவர்களின் பன்றி வளர்ப்பு

1 Ralph Linton, *The Study of Man* (New York, Appleton 1947), p. 364-65.

Scanned by TapScanner

முறையைத் தடுக்க முயன்ற அரசுத் துறையினர் தோல்வி கண்டதும் இவ்வகையான காரணத்தினாலேயாகும்.[2] அமெரிக்க இந்தியப் பழங்குடியினரான கொமன்சி மக்களிடம் இதே வகையான ஆய்வை மேற்கொண்ட ரால்ஃப் லிண்ட்டன் அப்பகுதிக்கு வந்த கொள்ளையர்களின் தாக்கத்திற்குட்பட்டுக் கொமன்சியினர் அவர்களின் வாழ்க்கை முறையை மாற்றிக் கொண்டதைக் கண்டார். இம்மக்களின் பண்பாட்டு ஒன்றியம் வலிமையற்ற நிலையில் இருந்ததே அதற்குக் காரணமாகும்.[3] இன்று நம் சொந்தப் பண்பாட்டைப் பார்த்தால்கூட வெள்ளையர்களின் வருகைக்கு முன்னர் இருந்த இந்தியப் பண்பாட்டிற்கும் அவர்களின் வருகைக்குப் பின்னர் உள்ள பண்பாட்டிற்கும் உள்ள வேறுபாடு புலனாகும்.

ஒரு பண்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் மாற்றங்கள் நிகழ்ந்து விடுவதில்லை அவ்வாறே ஒரு கலப்புச் சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவினரிடம் ஒரே வகையில் மாற்றங்கள் நிகழ்வதில்லை. நம் சொந்தப் பண்பாட்டையே எடுத்துக் காட்டாகக் கொண்டு பார்த்தால் வெள்ளையர்களின் வருகையால் சமய வாழ்வு தவிர ஏனைய பிரிவுகளில் மாற்றங்கள் பெருமளவு நிகழ்ந்துள்ளன. ஆனால் சில பிரிவினரின் வாழ்வில் சமய மாற்றமும் பெருமளவு நிகழ்ந்துள்ளது. பெரும் எண்ணிக்கையினர் கிறித்தவ சமயத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர். இச்சிறிய எடுத்துக்காட்டைக் கொண்டு, சமுதாயப் பிரிவுகளுக்கும் பண்பாட்டு ஒன்றியத்திற்கும் பண்பாட்டு மாற்றத்திற்கும் இடையே உள்ள உறவைப் புரிந்து கொள்ளவியலும்.

## பண்பாட்டு மாற்றத்தின் முறைகள் 5 Unit

பண்பாட்டு மாற்றம் ஒரு சிக்கலான நிகழ்வாகும். இதைப் பல காரணிகள் இயக்குகின்றன. அவற்றுள் கண்டுபிடிப்புகள் (inventions), வெளிப்படுத்துதல்கள் (discoveries), பரவல் (diffusion), பண்பாட்டுப் பேறு (acculturation), ஒரினமாதல் (assimilation), நவீனமயமாதல் (modernization), தொழில்மயமாதல் (industrialization), நகரமயமாதல் (urbanization), புரட்சி (revolution) போன்றவை முதன்மையாகச் செயல்படுகின்றன. இந்தியச் சூழலில் மேற்கத்தியமயமாதல் (westernization), உயர்குடியாக்கம் (Sanskritization), இந்துமயமாதல் (Hinduization), பிற சமயங்களுக்கு மாறுதல், நாட்டுப்புற நகரத் தொடர்பு (folk-urban continuum), ஊரகமயமாதல் (ruralization), உழவராதல் (peasantization), பழங்குடித் தன்மையிலிருந்து விடுபடல் (de-tribalization), மீளப் பழங்குடியினராதல் (re-tribalization) போன்ற காரணிகளும் பண்பாட்டு மாற்றத்திற்கு வழிகோலுகின்றன.

### கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தல்களும்

தொலைபேசி, வானொலி, உழுவண்டி (tractor), கணினி போன்ற கருவிகளோ கிறித்தவம், இஸ்லாம், பொதுவுடைமைக் கொள்கை போன்ற கருத்தியல்களோ (ideologies) அல்லது வேறு எந்த ஒரு அறிவும் கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தல்களும் எனப்படும். உலகில் இல்லாத ஒன்றை அறியச் செய்வது கண்டுபிடிப்பு (invention) ஆகும். எ-டு: தொலைபேசியை கிரகாம்பெல் கண்டுபிடித்தமை. உலகில் இருப்பனவற்றை மக்கள் அறியச்செய்வது வெளிப்படுத்தல் (discovery) ஆகும். எ-டு: கொலம்பஸ் அமெரிக்க நிலப் பகுதியை வெளிப்படுத்தியமை. மனித குலத்தின் அறிவுத் தொகுதியில் இடம்பெறும் எந்த ஒன்றும் மேற்கூறிய வகையைச் (கண்டுபிடித்தலும் வெளிப்படுத்தலும்) சேர்ந்தது எனக் கூறுவார் லிண்ட்டன்.[4] ஓர் இனக்குழுவினர் ஒரு புதிய பொருளை உணவாக உட்கொள்ளலாம் என்று உணர்ந்தால்கூட அது அவர்களின் அறிவுத் தொகுதிக்குப் புதிய கண்டுபிடிப்பாக அமையும் என்பார் லிண்ட்டன்.

கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தல்களும் முன்வரலாற்றுக் காலம் தொடங்கி இன்று வரை பல காலகட்டங்களில் நிகழ்ந்துள்ளன. இதனாலேயே முன்வரலாற்றுக் காலப் பண்பாடு பல வழிகளில் மாற்றம் பெற்று வெவ்வேறு வகைகளில் இன்று காணப்படுகிறது. இக்கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தல்களும் எதிர்பாராமலும் எதிர்பார்ப்புடனும் அறியப் பெற்றன. முன் வரலாற்றுக் கால மனிதன் கண்டறிந்த சிறுசிறு கற்கருவிகளும் அவன் வெளிப்படுத்திய நெருப்பும் பல கண்டுபிடிப்புகளுக்கு வித்திட்டன. இந்நீண்ட கால வளர்ச்சியில் ஆதிமனிதனின் அறிவுத்திறன் இன்றைய மனிதனைவிடக் குறைவானது எனச் சிலர் சிந்திக்காமல் கூறிவிடுவர். 10,000 ஆண்டுக் காலமாக மனித மூளையின் கொள்ளளவு ஒரே வகையில் இருந்தாலும் அண்மைக் கால கண்டுபிடிப்புகளைப் போன்று ஆதிமனிதனால் நிகழ்த்த முடியவில்லை என இவர்கள் கருதி இவ்வாறான அவசரக் கருத்தைக் கூறிவிடுகின்றனர். கற்கருவிகளும் நெருப்பும் அறியப்பட்ட பிறகு பல நூற்றாண்டுகள் கழித்தே சக்கரம் கண்டுபிடிக்கப்பட்டது. சக்கரம் கண்டுபிடித்ததற்கான மூளைத் திறனை இன்றைய மூளைத்திறனோடு ஒப்பிட்டுக் குறைத்து மதிப்பிட முடியாது. மனித குலத்தின் வரலாற்றில் ஒவ்வொரு கண்டுபிடிப்பும் வெளிப்படுத்தலும் மனித அறிவுப் புலத்தின் பரப்பை மேலும் மேலும் விரிவடையச் செய்துள்ளது. 10,000

2 பக்தவத்சல பாரதி, "பண்பாட்டு மாற்றமும் மரபுவழி நம்பிக்கையும் பழங்குடிப் பண்பாட்டில் ஓர் ஆய்வு". தாமரையின் ஆராய்ச்சி ஏப்ரல், 1988, 27 : 5-18.

3 Ralph Linton, *The Study of Man*, op. cit., p. 358.

4 Ralph Linton, *The Study of Man*. op. cit., p. 506.

ஆண்டுக்காலப் பின்புலத்தைக் கொண்ட அறிவுத் தொகுப்பால் கண்டுபிடிப்புகளும் புதுப்புனைவுகளும் படிப்படியாக மிகுதியாகி அண்மைக்காலத்தில் பெருமளவு நிகழ்ந்ததாகக் கொள்ளலாம். இவற்றுள் பல கண்டுபிடிப்புகள் எதிர்பாராமலும் எதிர் பார்த்தும் நிகழ்ந்தன. இக்கண்டுபிடிப்பு நிகழ்ந்தபின் அதன் விளைவால் பண்பாடுகள் புதிய பரப்பை ஏற்படுத்திக் கொண்டு மாறுதலைப் பெற்றன. அக்கண்டுபிடிப்பை அன்றைய பண்பாடுகளும் ஏற்றுக்கொண்டு மாற்றம் பெற்றன. பண்பாட்டு மாற்றத்தில் மனிதக் கண்டுபிடிப்புகளும் வெளிப்படுத்தல்களும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளமையை வரலாறு நமக்குச் சுட்டிக்காட்டுகிறது.

## பரவல்

ஒரு பண்பாட்டின் சிறப்புப் பண்பை வேறொரு பண்பாடு பெற்றுக்கொள்ளும் நிகழ்வைக் குறிப்பது பரவல் (diffusion) முறையாகும். இன்றுள்ள பண்பாடுகள் அனைத்தையும் பார்க்கும்போது 90 விழுக்காடு வரை பரவல் நிகழ்வாலேயே பண்பாட்டுக் கூறுகள் பரவியுள்ளன. ஒவ்வொரு பண்பாடும் ஏறக்குறைய 10 விழுக்காட்டுக் கூறுகளே அதற்கு உரியனவாகச் சொந்தங்கொண்டாட முடியுமென்கிறார் லிண்ட்டன். பரவல் நிகர்வு நேரடித் தொடர்பாலும் (direct contact) இடைநிலைத் தொடர்பாலும் (intermediate contact) நிகழவல்லது. நேரடித் தொடர்பால் நிகழும் பரவல் முறைக்குக் காகித உற்பத்தி செய்யும் முறை பரவியதை எடுத்துக்காட்டாகக் கூறலாம். ஷய் லுன் (Tsai Lun) என்னும் சீன நாட்டுக்காரர் கி.மு. 105இல் காகிதம் கண்டுபிடித்தார். அக்கண்டுபிடிப்பு அடுத்த 50 ஆண்டுகளில் நடு சீனப் பகுதிகளுக்குப் பரவியது. கி.மு. 264வாக்கில் காகித உற்பத்தி செய்யும் முறை சீனாவின் துருக்கித்தானம் (Chinese Turkestan) பகுதிக்குப் பரவி அங்கிருந்து அடுத்தடுத்த நிலப் பகுதிகளுக்குப் பரவியது. இதன் பரவல் நிரலை வரிசைப்படுத்த வேண்டுமானால் கி.மு. 751-ல் சமர்கந்துக்கும், 793-ல் பாக்தாதுக்கும், 900 வாக்கில் எகிப்திற்கும், 1100 வாக்கில் மொராக்கோவிற்கும், 1189-ல் பிரான்சிற்கும், 1276-ல் இத்தாலிக்கும், 1391-ல் ஜெருமனிக்கும், 1494-ல் இங்கிலாந்திற்கும் பரவியது.

புகையிலையைப் பயன்படுத்தும் முறையும் இவ்வாறு நேரடித் தொடர்பால் உலகின் பல பகுதிகளுக்குப் பரவியது. புத்துலகப் பகுதியிலிருந்து புகையிலையை ராலி* என்பவர் கி.பி. 1586-ல் இங்கிலாந்துக்கு அறிமுகப்படுத்தினார். அங்கிருந்து பின்னர் பெர்னாண்டஸ்** என்பவர் ஸ்பெயின் நாட்டிற்கு அறிமுகப்படுத்தினார். பின்னர் இவ்விரு நாடுகளிலிருந்து குடியேற்ற நிகழ்ச்சிகளாலும், சமயப் பரப்பிகளாலும் புத்தாய்வாளர்களாலும், வணிகர்களாலும் உலகின் பல பகுதிகளுக்கு இப்பொருள் பரவியது.

இடைநிலைத் தொடர்பால் பரவும் முறை மூன்றாம் நிலை மக்களால் நிகழ்கிறது. ஒரு சமுதாயத்தின் சிறப்புக் கூறானது மற்றொரு பண்பாட்டுக்கு வணிகர்கள் மூலம் பரவிய நிகழ்ச்சிகள் வரலாற்றில் பெருமளவு இடம் பெற்றுள்ளன. செமிட்டிக் (Semitic) மொழியின் நெடுங்கணக்கும் சொற்களும் கிரேக்கத்திற்கு வணிகர்கள் மூலம் பரவியுள்ளன. இன்று தமிழர்கள் வழங்கும் அயல்மொழிச் சொற்கள் பல வணிகர்களால் அறிமுகமானவையே. போர் வீரர்கள் வேற்று நாட்டில் தங்கிப் போரிடும் காலங்களில் பண்பாட்டுக் கூறுகள் பரவுகின்றன. சமயப் பரப்பிகள், புத்தாய்வாளர்கள் போன்றோர் வரலாற்றுக் காலந்தொட்டுப் பல நாடுகளில் தங்கியபோது பண்பாட்டுப் பரவலுக்குக் காரணமாக இருந்துள்ளனர்.

பரவல் முறையில் தூண்டற் பரவல் (stimulus diffusion) என்னும் முறையும் உள்ளது. அதாவது ஓர் அயற்பண்பாட்டிற்கு உரிய ஒரு பண்பாட்டுக் கூறின் கருத்தைப் பயன்படுத்தி தன் சொந்தப் பண்பாட்டில் புதிதாக ஆக்கிக் கொள்ளுதல் தூண்டற் பரவல் எனப்படும். இதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டை இங்கு நினைவுபடுத்திக் காணலாம். அமெரிக்க இந்தியப் பழங்குடிகளுள் ஒருவரான செரோக்கி இந்தியர்கள் (Cherokee Indians) ஆங்கில நெடுங்கணக்கைத் தழுவி அவர்கள் மொழிக்கேற்ப எழுத்துக்களை ஏற்படுத்திக் கொண்டனர். இதே போன்ற பழைய செமிட்டிக் மொழியின் நெடுங்கணக்கைக் கிரேக்கர்கள் அவர்கள் மொழிக்கேற்பப் பின்பற்றினர்.

பண்டைய கிழக்கு ஜெருமானியக் கலை (gothic art) ஜெருமனியிலும் இத்தாலியிலும் உள்ளது போன்று பிரான்சில் இல்லை. ஜாவாவிலுள்ள இந்து, புத்தக் கலைகள் இந்தியாவில் உள்ளதைப் போன்று இல்லை.[5] இவ்வெடுத்துக்காட்டுகள் மூலம் மக்கள் ஓர் அயற்பண்பாட்டுக் கூறின் சிறப்புத் தன்மையின்பால் கவரப்பெற்று அத்தூண்டுதல் பேரில் தன் சொந்தப் பண்பாட்டில் சில மாற்றங்களுடன் அதை ஏற்படுத்திக் கொண்டனர் என்பது புலனாகும்.

ஒரு பண்பாடு, அயற்பண்பாட்டின் அனைத்துக் கூறுகளையும் அப்படியே ஏற்றுக்கொள்வது பெரும்பாலும் நிகழ்வதில்லை. சில

* முழுப்பெயர்: Sir Walter Raleigh

** முழுப்பெயர்: Francisco Fernandez

5 பக்தவத்சல பாரதி "உலக நாடுகளில் தமிழர் பண்பாட்டுப் பரவல்: மானிடவியல் அணுகுமுறைகள்" தமிழ்க்கலை, 1987 தமிழ் 5, கலை 1.2: 183-199

பகுதிகளாகப் (culture area ...) நிலவிய ...
அண்டையப் பகுதிகளுக்கிடையில் போவாஸ் நுணுகி
தன்மையின் பல்வேறு தன்மைகளைப் அமெரிக்க மானிடவியலறிஞர்கள்
ஆராய்ந்தார். அதன் பிறகு தான் அண்டைய பண்பாட்டுப்
ஒரு பண்பாட்டுப் பகுதியின் தாக்கம் ஆழ்நிலையில்
பகுதிக்கும் ஏற்படுகிறது என்பதை அறிந்து அதை பண்பாட்டுக் கூறு
ஆராயத் தொடங்கினர். ஒரு தனிப்பட்ட அண்டைய
அல்லது பண்பாட்டுத் தொகுதி (culture complex) அதைப்
பகுதிக்கோ தொலைப் பகுதிக்கோ சென்றால் பண்பாட்டின்
பண்பாட்டுப் பரவல் என்கிறோம். ஆனால் ஒரு மாறத்
தாக்கத்தால் அண்டைய பண்பாடு முழுவதுமாக எனப்படும்
தொடங்கினால் அது பண்பாட்டுப்பேறு (acculturation) ஹாலோவெல்
விண்ட்டன், ரெட்பீல்டு, ஹெர்ஸ்கோவிட்ஸ், பெரும்
போன்றோர் பண்பாட்டுப்பேறு ஆய்வுகளுக்குப்
பங்காற்றியவர்களாவர்.

இரண்டு பண்பாடுகள் ஒன்றையொன்று சந்தித்து வினை
புரியும்போது அதன் தன்மைக்கேற்ப பின்வரும் நிகழ்வுகளில் சில
வெளிப்படும்.

சேர்த்தல் (addition): இரண்டு பண்பாடுகள் நெருங்கி உறவாடி
ஒன்றையொன்று பரஸ்பரம் பாதித்துக்கொள்ளும் போது
பண்பாடுகளின் தனித்த கூறுகள் (traits). கூறுகளின் கூட்டாக

இரு பண்பாடுகள் நேருக்கு நேர் சந்தித்துக் கொள்ளும் போது இரண்டும் அதனளவில் தனித்து இயங்க முடிவதில்லை. ஒன்று மற்றதன் சிறப்புக்கூறுகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது இரண்டு பண்பாடுகளும் ஒன்று மற்றதன் பண்புகளை ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு இரண்டு பண்பாடுகளுமே சிறப்புப் பண்புகளைப் பரிமாறிக் கொண்டால் அது சமகலப்புப் பண்பாட்டுப் பேறு (transculturation) எனப்படும். ஆனால் அடுத்தடுத்த அண்டைய பகுதிகளில் சந்திக்கும் இரு பண்பாடுகளுள் ஒன்று ஆதிக்கம் மிக்கதாகவும் (dominant) மற்றொன்று ஆதிக்கம் குறைந்ததாகவும் இருக்குமானால் ஆதிக்கப் பண்பாட்டின் கூறுகளை ஆதிக்கம் குறைந்த பண்பாடு பெற்றுக் கொண்டு மாறிவரும். இவ்வாறு ஆதிக்கம் குறைந்த பண்பாடு ஆதிக்கப் பண்பாட்டின் கூறுகளை முழுமையாக ஏற்றுக் கொண்டு அதன் தனித்தன்மையை இழந்தால் அது ஒரினமாதல் (assimilaiton) எனப்படும். சில வேளையில் இரு பண்பாடுகள் நேருக்குநேர் தொடர்பு பெறும்போது ஒன்று மற்றதன் கூறுகளைத் தொடக்கத்தில் ஏற்கத் தொடங்கிப் பின் தன் தனித்தன்மையைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டு கலப்பை ஏற்க மறுத்தால் அது எதிர்ப் பண்பாட்டுப்பேறு (contra-acculturation) எனப்படும்.

சோட்டா நாக்பூர் பகுதிகளில் வாழ்ந்த பழங்குடிகள் இடத்தில் கனிவளம் கண்டுபிடிக்கப்பட்டதால் பழங்குடிகளை இடம் மாற்றம் செய்து அங்குச் சுரங்கங்களை வெட்டினர். பழங்குடிகள் வேறுவழியின்றி மரபுத் தன்மையை விடுத்து வேறு தொழில் தெரியாததால் சுரங்கக் கூலிகளாகப் பணிபுரிகின்றனர். இருப்பினும் அவர்கள் 'ஜார்கந்து' (Jharkhand) என்ற அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் பண்டைய மரபுப் பண்புகளைப் பேணிக்காக்க காட்டுப் பகுதிகளை ஒதுக்கித் தருமாறு போராடுகின்றனர். இதை மேற்கூறிய எதிர்பண்பாட்டுப்பேறுக்கு எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

கடந்த சில பத்தாண்டுகளில் பண்பாட்டுப்பேறு ஆய்வுகள் உலகம் தழுவிய நிலையில் பெரும் எண்ணிக்கையில் செய்யப் பட்டுள்ளன. இவ்வாய்வுகள் அனைத்தையும் ஒன்றுபடுத்திப் பார்க்கும்போது இன்று உலகத்தின் எந்தப் பகுதியிலும் தனித்தன்மை கொண்ட, மற்றப் பண்பாட்டுக் கூறுகள் கலப் பில்லாத பண்பாடு இல்லை என்ற கருத்துத் தெளிவாக வெளிப் படுகிறது. ஒவ்வொரு பண்பாட்டிலும் இடம், காலம், சூழலுக் கேற்பக் கலப்பின் தன்மை பல நிலைகளில் காணப்படுகிறது.

### பண்பாட்டுத் தேக்கம்

பண்பாட்டு மாற்றம் வற்புறுத்துதல் மூலமும் நடைபெறும். இது பெரும்பாலும் ஒரு பகுதியை வேற்று இனத்தவர் அல்லது



நாட்டவர் கைப்பற்றி வந்தேறியவர்களின் பண்பாட்டைப் பின்பற்றுமாறு செய்வதால் நிகழும். இதற்கு எடுத்துக்காட்டாக நம் நாட்டில் ஏற்பட்ட முகமதிய ஆட்சியைக் கூடக் கொள்ளலாம். இன்றைய நவீன உலகில் மக்கள் வேற்று நாட்டிற்குக் குடியேறும்போது அந்நாட்டின் சில சட்டதிட்டங்களை ஏற்று நடக்கும்போது பண்பாட்டு மாற்றம் நிகழும். இவ்வாறான நிலையில் ஒரு பண்பாடு ஏதேனும் ஒரு காரணத்தால் மாற்றத்திற்கு இலக்காகும்போது அம்மக்கள் சில வழிகளில் மாறும் சூழலுக்கேற்பத் தகவமைந்து கொள்வர். ஆனால் சில வழிகளில் தகவமையாமல் நிற்பர். அவ்வாறு தகவமையாமல் போனால் தகவமைந்த புதிய கூறுகளுக்கும் அவர்களின் பழைய மரபுகளுக்கும் (தகவமையாத கூறுகள்) இடையே தேக்கம் (lag) ஏற்படும். இதையே பண்பாட்டுத் தேக்கம் (cultural lag) என்பர் மானிடவியலர். எடுத்துக்காட்டாக அமெரிக்கப் பகுதியில் குடியேறும் தமிழ் மக்கள் அங்குள்ள சூழலுக்கேற்பப் பொருள் சார் கூறுகளை மாற்றிக் கொள்வர். ஆனால் அமெரிக்க மக்களின் பொருள்சாரா கூறுகளை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இந்நிலையில் இவர்களின் குடியேற்றப் பண்பாட்டில் ஒரு தேக்கம் நிலவும். பொருள்சார் கூறுகளில் ஏற்படும் மாற்றம் பொருள்சாராக் கூறுகளில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் போனால் தேக்கம் நிகழ்வதைப் போல பண்பாட்டின் வேறு பிரிவுகளிலும் இவ்வாறு தேக்கம் நிகழ்வதுண்டு.

### பண்பாட்டு அதிர்ச்சி

பண்பாட்டு அதிர்ச்சி (culture shock) என்பது முற்றிலும் புதிய அறிமுகமில்லாத பண்பாட்டுச் சூழலுக்குள் தள்ளப்படும் தனிநபர் அல்லது குழுவின் மனநிலையைக் குறிக்கும். இடப் பெயர்வு, படையெடுப்பு, காலனிய நிலை அல்லது எதிர்பாராத சமூக, அரசியல் நடவடிக்கைகள் போன்றவற்றால் தனிநபரோ ஒரு குழுவோ புதிய பண்பாட்டுச் சூழலை எதிர்கொள்ளும் போது உடனடியாக எல்லாமே மாறுபட்டதாக உள்ளதோடு இதுவரை காணாத, உணராத புதிய பண்பாட்டுச் சூழலுடன் வினைபுரிய வேண்டிய நெருக்கடி ஏற்படும். இந்த வினைபுரிதலில் ஏற்படும் அதிர்ச்சியானது உணர்வு நிலையை மட்டுமே பாதிக்கும் என்று கூறமுடியாது. மக்களின் அறிதிறன் (cognition) பாங்கிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். மக்களின் உணர்வையும் அறிதிறனையும் பாதிக்கக்கூடிய இவ்வதிர்ச்சி பருநிலையில் இரண்டு தளங்களோடு (உணர்வு, அறிதிறன்) காணப்பட்டாலும் நடைமுறையில் இதன் அழுத்தமானது மனவெழுச்சி, நிலைபிறழ்வு, வாழ்வுப் பாங்கில் இயல்புமீறிய நோக்கு நிலை, இயல்புமீறிய பகுத்தறிவு சாராமை, இயல்பாக

Scanned by TapScanner

எதிர்பார்க்கும் நடப்பியல் பிறழ்வு போன்ற எண்ணற்ற வடிவங்களில் வெளிப்படுவதாக இருக்கும்.

## நவீனமயமாதல்

மரபுச் சமுதாயங்கள் தொழில்மயமான நாடுகளின் தொழில்நுட்ப முறைகளையும் சமுதாயப் பண்பாட்டு முறைகளையும் ஏற்கும் நிகழ்வே நவீனமயமாதல் (modernization) எனப்படும். நவீனமயமாதலில் அமைத்துப் பிரிவுகளிலும் மேம்பட்ட கருவிகளைப் பயன்படுத்துதல், உற்பத்தி முறைகளைத் தற்சார்பு நிலைக்குக் கொண்டு வந்து பின்னர் உபரி உற்பத்திக்கு வழிகோலுதல், உற்பத்தி முறைகளைத் தொழில்மயமாக்குதல் (industrialization), இதற்கு உயர்ந்த தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த முயலுதல், அங்காடிப் பொருளியலுக்குள் (markei economy) நுழைதல், நகர வாழ்க்கையை மேற்கொள்ளுதல், மைய (centralized) அரசு முறையை ஏற்க முனைதல் உறவுமுறை சாரா குழுக்கள் ஏற்படுத்துதல், புதுப்புனைவுகளையும் (innovations) மாற்றங்களையும் பெரிதும் விரும்புதல் முதலான அனைத்தும் நவீனமயமாதலில் அடங்கும்.

பழங்குடி போன்ற மரபுச் சமுதாயங்களில் நவீனமயமாக்குதல் எளிதன்று. பழங்குடியினர் மரபுவழி முறைகளை எளிதில் மாற்றிக் கொள்ள முன் வரமாட்டார்கள். அதனால் தீமைகளே மிகுதி என எண்ணக்கூடியவர்கள். நவீன மருத்துவ வசதிகள், புதிய வேளாண் முறைகள், வருவாயை மிகுதியாக்கக் கூடிய புதிய தொழில்கள், புதிய வாழ்க்கை முறை போன்றவற்றைப் பழங்குடிகளிடம் தொடக்கத்தில் அறிமுகப்படுத்த முயன்ற போது ஏற்பட்ட சிக்கல்கள் மிகுதி. உலகம் தழுவிய நிலையில் இது குறித்த செய்திகள் மானிடவியலில் குவிந்துள்ளன. இதற்கு ஓர் எடுத்துக்காட்டைக் காணலாம். தமிழக ஊரகப் பகுதிகளில் பொதுக் கழிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது. இதைப் பெரும்பாலோர் பயன்படுத்துவதில்லை. கழிப்பிடத்தில் நீர் வசதி சரிவர இல்லை. தூய்மையாக இல்லை போன்ற காரணங்கள் அனைத்தும் இரண்டாம் தரமானவையே. முதல் காரணம் ஒரு கீழ்ச் சாதியினர் அதைப் பயன்படுத்திவிட்டால் அவ்விடத்தை மேல் சாதியினர் பயன்படுத்த விரும்புவதில்லை. 'தூய்மை' 'தீட்டு' என்ற கவர்கள் குறுக்கே நிற்கின்றன. இதனால் மக்கள் இன்றும் கிராமத்தின் ஒதுக்குப் புறங்களையே நாடிச் செல்கின்றனர். பிராமணர் முதற்கொண்டு அனைத்துச் சாதியினரும் ஒரே இடத்தைப்பயன்படுத்தும் நிலை ஏற்படவில்லை. கருநாடகக் கிராமங்களில் பூச்சி மருந்து அடிக்கும் எந்திரத்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய போது ஏற்பட்ட சிக்கலை ஜூலன் பீலிங் என்னும் வெளிநாட்டு மானிடவியலார் கண்கூடாகக் கண்டு எழுதியிருக்கிறார். இதுபோன்ற ஆயிரக்கணக்கான தரவுகள் மானிடவியலில் அறியப்பட்டுள்ளன.



ஒரு பண்பாடு நவீனமயமாதலுக்கு உட்படுதலில் அதன் சமுதாய, பொருளாதார, பண்பாட்டு, சமய, அரசியல் முறைகளின் உறவும், அப்பண்பாட்டினர் சார்ந்துள்ள இயற்கைச் சூழலும் முக்கிய காரணிகளாகச் செயல்படுகின்றன. இவற்றுள் எந்த ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த நம்பிக்கையும் கருத்தும் நவீனமயமாதலுக்குத் தடையாக அமையலாம். பண்பாட்டுத் தொடர்பாலும், சமூகநல அலுவலர்களின் அயரா முயற்சியாலும் தொழில்மயமாதலாலும், பிற முயற்சிகளாலும் மாற்றங்கள் மெல்ல மெல்ல மரபுச் சமுதாயங்களில் ஏற்படுகின்றன. இவை தவிர அந்தந்தப் பண்பாட்டுச் சூழலிற்கேற்ப மாறுதல்கள் நிகழ்ந்து வருகின்றன.

## தொழில்மயமாதலும் நகரமயமாதலும்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள், பெரும் ஆலைகள் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை அறிமுகப்படுத்தும்போது அப்பகுதியின் பொருளாதார அமைப்பு ஒரு புதிய பாதைக்குத் திரும்புகிறது. வாழ்வின் ஒரு பிரிவில் ஏற்படும் மாற்றம் பின்னர் தொடர்ச்சியாக வேறு பிரிவுகளிலும் மாற்றத்தை ஏற்படுத்திவிடும். எடுத்துக்காட்டாக நீலகிரி மலைப்பகுதியில் வாழும் இருளர்கள் கி.பி. 1863 வரை காட்டுப் பகுதிகளில் வேட்டையாடியும் காட்டுப் பொருள்கள் சேகரித்தும் இடம்விட்டு இடம் மாறிப் பயிரிட்டும் வாழ்ந்து வந்தனர். இடம் பெயரும் வேளாண் முறையால் காட்டு வளம் குறைகிறது என எண்ணி வெள்ளை ஆட்சியாளர்கள் தடுப்புச் சட்டம் கொண்டு வந்தனர். இதனால் 1838 - இல் காப்பித் தோட்டமும் 1846 இல் தேயிலைத் தோட்டங்களும் வெள்ளையர்களால் தொடங்கப்பட்டு நடந்து வந்தமையால் இருளர்கள் அதில் கூலிகளாகப் பணிபுரிய சேர்க்கப்பட்டனர். பின்னர் படிப்படியாகத் தோட்டப் பொருளாதாரம் இருளர்களின் வாழ்வில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியது. காட்டில் வாழ்ந்த காலத்தில் கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தனர். தோட்டத் தொழிலில் ஈடுபட்டதால் ஒவ்வொரு தனிமனிதனும் கூலி ஈட்டும் வாய்ப்பு வந்தவுடன் கூட்டுக்குடும்ப முறை சிதைந்து தனிக்குடும்ப முறை ஏற்பட்டது. இத்தொழிலினூடே காட்டுப் பொருள்களைச் சேகரித்தல், கூடை முடைதல், முறம் கட்டுதல், துடைப்பம் சேகரித்தல் போன்ற பணிகளையும் துணைத் தொழில்களாகக் கொண்டனர். இதன் பின்னர் அரசுத் துறையிலும் சிறுதொழில் பிரிவுகளிலும் பலர் வேலை வாய்ப்பைப் பெற்று மாறி வருகின்றனர்.[6] (இருளர் பற்றிய வேறு ஒரு செய்தி இதே

---

6 S. Bhakthavatsala Bharathi. "Folkway and Modernization: Some issues in Culture Change among Tribal Communities in Tamil Nadu". paper presented in National Seminar on *Folkway and Modernization*, M.K. University, Madurai, Sep. 7-9, 1987.

அத்தியாயத்தில் 'இந்துமயமாதல்' என்னும் உட்தலைப்பில் இடம் பெறுகிறது.)

சோட்டா நாக்பூர் பழங்குடிப் பகுதிகளில் கனிவளம் கண்டு பிடிக்கப்பட்டமையால் அப்பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளை இடம் பெயரச் செய்து அந்த அங்குச் சுரங்கங்களை வெட்டியது. காலம் காலமாக இயற்கைச் சூழலில் வாழ்ந்த பழங்குடிகள் வேற்றுப் பகுதிக்குக் குடியேறி வாழ வழி தெரியாதவர்களாக மாறியதால் அவர்கள் மரபுத் தொழில்களை விடுத்துச் சுரங்கங்களில் கூலிகளாக வாழ முற்பட்டனர். இதனால் இவர்களின் வாழ்க்கைமுறை முற்றிலும் மாறிவிட்டது. பெரும் சுரங்கங்கள், ஆலைகள் போன்றவை அமையுமிடங்களில் நகரங்களும் உடன் ஏற்படுமாதலால் அதன் தாக்கம் மரபுச் சமுதாயங்களின் வாழ்க்கை முறையை மாற்றுவதாக அமையும்.

## உயர்குடியாக்கம்

இந்தியச் சமுதாயத்தில் பழங்குடியினரும் பிற்படுத்தப்பட்ட பிரிவினரும் பிற கீழ்க்குடியினரும் உயர்குடியினரின் பண்பாட்டை ஏற்றுக் கொண்டு சமுதாயத்தில் தங்கள் தகுதியை உயர்த்திக் கொள்ளும் முறையே உயர்குடியாக்கம்* (Sanskritization) எனப்படும். இந்தியச் சூழலில் இவ்வகையான சமுதாய மாற்றம் நிகழும் முறையைச் சமுதாயவியலார் எம்.என். சீனுவாஸ் 1952 - இல் வெளியிட்ட குடகு மக்களிடையே சமயமும் சமுதாயமும்' (Religion and Society among the Coorgs) என்னும் நூலில் குறிப்பிட்டார்.[7]

இந்திய ஊரகச் சமுதாயம் சாதி அடிப்படையிலான பல நிலையைக் கொண்டதாகும். இதில் பிராமணர்கள் மேல் நிலையிலும் சூத்திரர்கள் கீழ் நிலையிலும் இருப்பதாகக் கூறப்படுகிறது. வேத காலம் தொட்டே சமுதாயம் ஆதாயம் தேடி சமய வாழ்வைத் தங்களுக்குரியதாக்கிக் கொண்டனர். அதோடு 'தூய்மை' (purity), 'தீட்டு' (pollution) என்னும் கருத்தாக்கங்களை ஏற்படுத்திச் சாதிக் குழுக்களுக்கிடையில் வேறுபாடுகளை ஏற்படுத்தி விட்டனர். சமுதாய படி நிலையில் கீழே தள்ளப் பட்டவர்கள் பார்ப்பனர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றித் தங்களின் சமுதாயத் தகுதியை உயர்த்திக் கொள்ள முயலு கின்றனர். இது இந்தியச் சமுதாயத்தில் மாற்றத்தை ஏற்படுத்தும் காரணியாகச் செயல்படுகிறது என்கிறார் சீனுவாஸ்.

* சமஸ்கிருதவயமாதல், மேனிலையாக்கம் என்னும் கலைச் சொற்களும் பயன்பாட்டில் உள்ளன.

7 இது குறித்த கருத்துகளை இவர் எழுதிய பிற நூல்களிலும் குறிப்பிட்டுள்ளார்: *Caste in Modern India and other Essays* (Bombay: Asia Publishing House, 1962); *Social Change in Modern India* (Bombay: Orient Longman, 1972).

853895



பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதே உயர்குடியாக்கம் என சீனிவாஸ் தொடக்கத்தில் கருதினார். இக்கருத்தின்' அடிப்படையில் இந்நிகழ்விற்கு அவர் சூட்டிய 'Sanskritization' என்னும் தொடர் மொழித்தழுவலைச் சுட்டுகிறதோ என் எண்ணி அவரே அச்சொல் நிறைவளிப்பதாக இல்லை என எண்ணினார். பின்னர் இவர் உயர்குடியாக்கம் பற்றிய கோட்பாட்டை மேலும் விரிவு பெறச் செய்தார். அதாவது பிராமணர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவது மட்டுமே உயர்குடியாக்க முறையாக நிகழவில்லை என்றும் இதில் நான்கு வகை உயர்குடியாக்கம் நிலவுகிறது என்றும் கருதினார். அவை:

1. பிராமண வகை உயர்குடியாக்கம்
2. சத்திரிய வகை உயர்குடியாக்கம்
3. வைசிய வகை உயர்குடியாக்கம்
4. சூத்திர அல்லது அரிசன வகை உயர்குடியாக்கம்

முதல் வகையில் பிராமணர்களுக்குக் கீழுள்ளவர்கள் பிராமணர்களை முன்மாதிரிக் குழுவாகக் (reference group) கொண்டு அவர்களின் வாழ்க்கை முறையைப் பின்பற்றுவர். இரண்டாம் வகையில் சத்தியர்களைக் கீழுள்ளவர்கள் சத்திரியர்களை முன்மாதிரியாகக் கொண்டு அவர்களின் வாழ்க்கை மரபுகளைத் தழுவி அவர்கள் அளவு உயர முயலுவார்கள். மூன்றாம் வகையில் வைசியர்கள் முன்மாதிரியாகக் கொள்ளப் படுவர். நான்காம் வகையில் அரிசனங்களுக்குக் கீழ் உள்ள தீண்டாமைச் சாதியினர் அரிசனங்கள் அல்லது அவர்களுள் உயர்வாகக் கருதப்படும் சில பிரிவினர் அளவிற்குத் தங்களை உயர்த்திக் கொள்ள முயலுவர்.

மேற்கூறிய நான்கு வகையான உயர்குடியாக்க முறையும் செயல்படுவதற்கு ஒரு முக்கிய காரணமுண்டு. ஒரு குறிப்பிட்ட பகுதியில் அல்லது கிராமத்தில் அனைத்து வகையான சாதியினர் இடம் பெறுவதில்லை. அவ்வாறு இருப்பினும் ஒரு கிராமத்தில் ஆதிக்கச் சாதியினராக (dominant caste) விளங்குவோருக்குக் கீழ் உள்ளவர்கள் சமுதாய ஆதாயம் தேடி ஆதிக்கச் சாதியினரைத் தழுவித் தங்களையும் அவர்களுக்கு இணையாக மாற்றிக் கொள்ள முயலுகின்றனர். ஒரு கிராமத்தில் ஆதிக்கச் சாதி என்பது நிலவுடைமை, மக்கள் தொகை, சமுதாய அரசியல் செல்வாக்குப் போன்றவற்றால் முன்னணி பெறும் சாதியைக் குறிக்கும். ஆதிக்கச் சாதி பிராமணரல்லாத சாதியாகவும் இருக்கலாம்; பிராமணச் சாதியாகவும் இருக்கலாம். நான்கு வகையான உயர்குடியாக்க நிலைகள் காணப்படுவதற்கு மேலுமொரு காரணமும் இடம் பெறுகிறது. ஓர் அரிசனக் குடும்பம் எடுத்த எடுப்பில் பிராமண வாழ்க்கையைத் தழுவ இயலாது. அவ்வாறே ஒரு வைசியச்

Scanned by TapScanner